# ஜனபிமானி வாசகம்

## எட்டாம் புத்தகம்

(மூன்றும் பாரம் அல்லது எட்டாம் வகுப்பு)


**அன்னபூரணி தேவசகாயம்**

Madras Educational Dept. Retired

Author of Traveller's Round the world series

எழுதியது



OF THE REGISTRAR OF BOOKS
18 MAY 1933
MADRAS



சென்னை :

...ாரசாமி நாயுடு ஸன்ஸ்

1933

[விலை 8 அணா



TB
031(8)
N33
146799.

146799

TB
031(8)
N33

1111

1111
494·81186

Printed at the 'Aurora Press,' Madras

# முகவுரை

வாசகப் புஸ்தகங்களால் மாணவர் அடையவேண்டிய பயன் முதலாவது நானாவித விஷயங்களைக் குறித்த அறிவின் மேல் ஆவல் கொள்வதும், இரண்டாவதாக பலவிதக் கலைகளிலும் சிற்சில விஷயங்களைக் குறித்து ருசி பார்ப்பதுபோல் சொற்ப அறிவடைவதுமாகும். இக்கருத்தை நிறைவேற்றும் வண்ணம் பாஷை நடை இனிமையாக்க முயன்றதோடு, பூகோளம், சரித்திரம், புராணம், இதிகாசம், நானே எழுதிய நீதிக் கதைகள், உலகத்தோர் போற்றும் வீரரான எடிஸன் ஹென்ரி போர்ட் போன்ற மகா வீரர் சரித்திரச் சுருக்கங்கள், இந்திய நூலாசிரியரில் முதல்வர் வரலாறு, ககோள, பூகோள பாடங்கள், இயற்கை அழகைக் குறிக்கும் பாடங்கள் சேர்த்திருக்கிறேன். வீரர் அடைந்த தொழில் துறை வெற்றிகளை வாசிக்கும் சிறுவர் கைத்தொழிலின் மாண்பைக் கவனித்து உத்தியோகமே பெரிதென மதிக்கும் தப்பான கொள்கை விட்டு நீங்குவாரென நம்புகிறேன்.

சுகந்தா என்ற நாடகம் மாணவர் ஒரு மணி நேரத்தில் நடிக்கக் கூடியது. இதனால் அரசன் பகைக்கும் காலத்தில்கூட கைப் பிரயாசமும், சத்தியமும் கை கொடுக்கும் என்ற நீதி வெளியாகிறது. பெரியோர் என் முயற்சியை ஆதரிப்பாரென நம்புகிறேன்.

அ. தேவசகாயம்

# பொருள் அடக்கம்


1. மின்சாரசக்தி - I - 1
2. அச்சு யந்திரவேலை - 6
3. கல்கத்தா நகர் - 9
4. மின்சாரம் - II - 16
5. சிற்றுயிர் ஜீவிகள் - 21
6. தாமஸ் அல்வா எடிஸன் - 25
7. ஒத்தை நகர் - 31
8. மனம்போல் பாக்கியம் - I - 37
9. மனம்போல் பாக்கியம் - II - 43
10. இலக்கணப் பாடம் I - 50
11. தமிழ் நூலாசிரியர் - 52
12. டில்லிமா நகரும், ஷாஜஹான் சக்கரவர்த்தியின் மாளிகைகளும் - 59
13. ஜீவராசிகளின் சரித்திரம் - 67
14. கப்பல் செல்லும் கால்வாய்கள் - 70
15. ஹென்ரி போர்ட் என்ற கோடீஸ்வரர் - 75
16. எவரஸ்ட் சிகரம் - 81
17. புலவர் சபை - 90
18. இலக்கணப் பாடம் - II - 95
19. ஜூலியஸ் சீசர் - I - 97
20. ஜூலியஸ் சீசர் - II - 104
21. தீபங்களின் வரலாறு - 111
22. சர்வஜன கூட்டுறவு சங்கம் - 115
23. ஹேக் நகர் சமாதான சபை - 119
24. இலக்கணப் பாடம் - III - 121
25. கூக் என்னும் சிந்து யாத்திரிகன் உலகம் சுற்றி வந்த வரலாறு - 122
26. சுகந்தா - 129


செய்யுள் பாடம்


I. நான்மணிக்கடிகை - 149
II. இமயமலைகள் - 153
III. குயில் - 154
IV. திருக்குறள் - 155
V. தாயுமானவர் பாடல்கள் - 159
VI. ஆண்டாள் — திருமொழி - 162

# ஜனாபிமானி வாசகம்

## எட்டாம் புத்தகம்

### 1. மின்சார சக்தி - I

நமது நாட்களில் மனிதனுக்கான சுகங்கள் புதிது புதிதாய் உண்டாகி அதிகரித்து வருவதைக் கவனிக்கலாம். அதற்குக் காரணம் மின்சார சக்தியை அறிஞர் அதிகமாய் உபயோகிக்கிறார்கள். நூறு பேர் செய்யக்கூடிய வேலை நாலுபேர் கையால் முடிவதானால் எவ்வளவு பெரிய லாபம்?

மின்சாரத்தால் நூற்றுக் கணக்கான தீபங்கள் மகா பிரகாசமாய் ஜொலித்து வேண்டிய இடமெல்லாம் இரவைப் பகலாக்கும்படி ஒளி வீசுகின்றன. மோட்டார் வண்டி அதிவேகமாய்ப் பாய்ந்து செல்வதும், ரெயில் வண்டி புகைவிடாமல் அதிவேகமாய் ஓடுவதும், மின்சார சக்தியால் ஆகிறது. மனுஷன் இத்தனை அருமையான சக்தியை இவ்வளவோடு விடுவானா? ருசி கண்ட பூனை உறியைப் பார்த்த வண்ணமாய் இருப்

பது சகஜம். நமது கலைவல்லோரும் அப்படியே மின் சாரத்தால் வேலை செய்யும் பெருமை வாய்ந்த ஆயுதங் களும் யந்திரங்களும் மென்மேலும் செய்த வண்ணமாய் இருக்கிறார்கள். கல்வி மலிந்து குடிகள் நுட்பமான ஆயுதங்களைக் கையாட அறிந்த மேல் தேசங்களில் மின்சார வேலையின் திரம் மதிப்பிடல் அரிது.

எவ்வேலை மின்சாரத்தால் நடைபெறுகிறது என்று கேளாமல் எவ்வேலை நடைபெறவில்லை என்று கேட்பது தகுதி. அதனால் அனல் உண்டாக்கிச் சமை யல் செய்கிறார்கள். துணி சுத்தம் செய்து இரும்புப் பெட்டி போட்டுத் தேய்க்கிறார்கள். தரையில் கிடக் கும் தூசி கூட்டக் கருவி இருக்கிறது. வீட்டின் செல வுக்கு வேண்டிய ஜலம் சூடாக்கிக் கொள்ளுகிறார்கள். உஷ்ண காலமானால், இளங்காற்று எழும்பி வீசி, முகத் திலும் முதுகிலும் வேர்வை வடியாது இன்ப சுகம் உண்டாக்க விசிறிகள் இயக்க மின்சாரம் உழைக் கிறது. உணவு பதார்த்தங்களைப் பத்திரப்படுத்தும் இடம் குளிர்ந்து ஜில் என்று இருக்க உதவுகிறது.

தரையில் ஓடும் வண்டியில் சொகுசாய்ப் பிர யாணஞ் செய்ய மனமற்ற சீமானும் வீரனும் ஆகாய மார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்ய ஆகாயக் கப்பல்களில் வேலை செய்கிறது. ஹா, இவ்வளவுதானா!

தற்காலத்தில் இரும்பு செம்பு பித்தளை முதலிய பலவித உலோகங்களும் மிகவும் உலகில் உலாவிப் பயன்படுகின்றன. கட்டடங்களில், பாலங்களில், வண்டி- களில், கப்பல்களில் இன்னும் மனித ஜீவியத்தைச் சிறப்பிக்கிற பொருட்கள் ஆயுதங்களில், அவை அமை

யப் பெற்று வழங்குவதைக் காண்கிறோம். பூமியின் ஆழங்களில் படுக்கைபோட்டு அரும்பாட்டால் அன்றி வெளிப்பட்டு உருவமையக் கூடாத உலோகப் பொருட்கள் இவ்வளவு சல்லாபமாய் நமதாளுகைக்குள் வந்தது யார் செயல்? மின்சாரம் என்னும் பிரம்ம ராக்ஷதனின் செயல் என்று அறிவோம்.

பாலங்கள், அணைகள் கட்டும் இடங்களுக்குப் போய்ப் பார்த்தால் கண்ட காட்சியை இருதயம் நம்பாது. குன்றுகளைப் பெயர்த்தெறிந்து, கற்பாறையை நொறுக்கித் தூளாக்கிச் சல்லியாக்கி கொடுத்து, சதா ஓடிக்கொண் டிருக்கும் ஆற்றையும் குறுக்கிட்டு அணைகட்ட உதவுகிறது. அந்த வேலையைக் கண்டு அறிவது நியாயம். ஒருவர் சொல்லி நாம் அதை நிதானிப்பது அசாத்தியம்.

அஸ்திபாரம் போடப் பள்ளம் வெட்டுவதானால் வெகு அவசரமாய் இரும்புத் தோண்டிகளில் மண் மளமளவென்று வெளிப்பட்டுக் குவிந்து விழுகிறது. இருநூறு ஆள் கூடினாலும் தூக்கமுடியாத இரும்புத் தூண்களையும், தண்டவாளங்களையும், பள்ளிக்கூட மாணுக்கன் காகிதப் பென்ஸிலை எடுத்து உபயோகிக்கும் சல்லாபத்துடன் தூக்கி அணுப் பிசகாமல் தகுந்த இடத்தில் வைத்து, காரியம் முடிவுபெற உதவுவது மின்சார யந்திரங்கள்.

மின்சாரக் கருவிகள் செய்தி எடுத்துச் செல்ல அமைந்தது முதல் 25000 மைல் சுற்றளவுள்ள இந்நிலவுலகமே மிகச் சிறியதாகி விட்டதோ என்று ஆலோசிக்க இடமாயிற்று. பெரு மலைகளைக் கடந்து மகா

சமுத்திரங்களைத் தாண்டி நமது செய்தி எதுவானாலும் நினைத்துச் சொல்லி முடிவதற்குள் குறித்த இடம் போய்ச் சேரும் போதிசயம் மனோவாக்குக் கெட்டாத தன்றோ? முற்காலங்களில் கம்பியின் சகாயத்தால் இவ் வேலை நடத்தினவர் பின் கம்பியில்லாமல் செய்தி அனுப்பத் தலைப்பட்டார். பின்பு சமிக்கையால் செய்தி அனுப்ப மனம் சம்மதியாமல் பேசத் தலைப்பட்டார். இதன் பயனாக நடுக்கடலில் போகும் கப்பலாட்கள் உலகத்தில் நடக்கும் சகல காரியங்களையும் அப்போதப் போதே அறிகிறார். கப்பலுக்கு ஏதாவது அபாயம் நேரிட்டால் அச் செய்தி நாலா திசையிலும் இருக்கும் சகல கப்பற்காருக்கும் எட்டி, கப்பல்கள் விரைந்து சென்று, முழுகிப் போகும் நிலையிலிருந்த அகதிகளை ரக்ஷிக்கும் மகிமை பெரிது. இவ்விதமாய்க் கலி நீங்கப் பெற்ற கப்பலாட்களின் கதை பல உள.

வியாபாரக் கப்பல்களிலும் ரெயில் வண்டிகளி லும் பாரமான சாமான்கள் ஏற்ற இறக்க ஏற்பட்ட 'க்ரேயன்' எனப் பெயர் கொண்ட யந்திர ஊழியரை நீங்கள் அவசியம் பார்க்கவேண்டும். பலபேர் கூடி அசைக்கக் கூடாத இருப்புப் பாரங்களையும் வெகு லகுவாய் பருந்து கோழிக்குஞ்சு தூக்கின மாதிரி எடுத் துக் குறித்த இடம் வைக்கிறது. இதனால் மூட்டை தூக்கும் கூலியாட்களுக்குச் செலவாகும தொகை பன் மடங்கு குறைகிறது. வியாபாரி கவலை மட்டுப் பட்டு சரக்கு நயமாய் விற்க ஏதுவாகிறதென்பதைக் கவனிக்கலாம்.

பழம், மீன், மாம்சம், காய் கறிகளாகிய கெட்டுப் போகக்கூடிய பதார்த்தங்களைப் பத்திரப்படுத்திப் பல

ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் தேசங்கள் கொண்டு சேர்ப்பது மின்சார சக்தி யன்ரே? ஆஸ்தி ரேலியா இங்கிலாந்திலிருந்து 13,000 மைலுக்கப்பால் இருக்கிறது. மாம்சம் முற்கூறிய தேசத்திலிருந்து இங்கிலாந்தின் கடைகளுக்கு வந்துவிடுகிறது. பழ வகைகள் 3000 மைலுக்கப்பால் உள்ள அமெரிக்க தேசங்களிலிருந்து இங்கிலாந்துக்கு அதி பத்திரமாய் வாடாமல் வதங்காமல் போய்ச் சேருகிறது. இந்தி யாவின் அதிமதுரமான மாம்பழம் லண்டன் நகர்வரை போய் விடுகிறது.

சூரியனின் உஷ்ணம் காந்தியாய்ப் பிரகாசியாத தேசங்களில் பயிர் வளர்ந்தாலும் தானியம் முதிர் வடைகிறதில்லை. மின்சார விளக்குகள் ஏற்றி பயிர் முதிர்ந்து தானியம் போர்க்களம் சேரச் செய்கிற அறிவாளர் பலர் இருக்கிருர்கள். வெயில் காயும் நாளெல்லாம் சலியாது உழைத்து மழை நாளில் குளிர் மலிந்து தரையெல்லாம் உறைபனி மூடி மலர்கள் காணப்படாமையால் உறங்கி இளைப்பாறும் தன்மை யுடைய தேனீக்களுக்கு மின்சாரத் தீப வெளிச்சம் காட்டி, அவற்றை ஏமாற்றி, வேனிற்காலம் வந்து விட்டதாய் தோற்றம் செய்து, வேலை வாங்கும் கட்சி. யாரும் உளர். தேனீக்களும் உடனே நித்திரை வெறுத்து எழுந்து தமக்கு முன் வைக்கப்பெற்ற உணவு அருந்தி, தேன் செய்து தமது எஜமான்களைச் சந்தோஷிப்பிக்கிறது. மின்சார மகிமையால் இயங்கிப் பற்பல வேலை முடிக்கிற விதவிதமான கருவிகளை எல் லாம் இங்கே கூறி முடிப்பது அசாத்தியம்.

## 2. அச்சு யந்திர வேலை

நாம் வாசிக்கிற அழகான புஸ்தகங்கள் எவ்வளவு குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன என்பதை எப் பொழுதாவது ஆலோசித்தீர்களா? அச்சு யந்திரங்கள் எவ்வளவு சமர்த்தாய் வேலை செய்தால் 50 பக்கம் அடங்கியதும், பல சித்திரப் படங்களால் அலங்கரிக்கப் பெற்றதும், நேர்த்தியான காகிதத்தில் தெளிவாய் எழுத்துப் பதித்ததுமான ஒரு புஸ்தகம் நமக்கு இரண்டு அல்லது ஒன்றரை அணுவுக்குக் கிடைக்கும்! அம் மாதிரி புஸ்தக வேலை ஆச்சரியமாய் முடித்துக் கொடுக்கும் அச்சு யந்திரம் மின்சார உதவியால் இயங்கி வேலை செய்யும் யந்திரசாலை ஒன்றைப் பார்க்க வேண்டியது அவசியம்.

முதல் அரையில் கை எழுத்துப் பிரதியை வைத் துக்கொண்டு பலகைகளின் மேல் அச்சு எழுத்துக்களை அடுக்குகிறார்கள். ஒவ்வொரு எழுத்தும் ஒரு ஈயத் துண்டின் மேல் வரைந்திருக்கிறது. ஒரு புஸ்தகத்தில் வரும் வார்த்தை எல்லாம் இப்படியே பதம் பதமாக சேர்த்துப் பலகைகளில் அடுக்கி வைக்கும் தொழிலா ளர் அங்கே கருத்தாய் உழைக்கிறார்.

ஒரு வீட்டில் சித்திரம் கட்டையிலும், செம்புத் தகட்டிலும் தீட்டுகிற சமர்த்தர் சோலியா யிருக்கிறார். புஸ்தகத்தில் வருகிற படங்கள் இவர்களுடைய கை வேலைப்பாடுதான்.

இன்னொரு பெரிய கூடத்துக்குப் போவோம். அங்கே டப் டுப் என்று ஓயாத கூச்சல் கேட்பதைப் பார்த்தால் அவசியம் போய்ப் பார்க்க வேண்டும் என்று

ஆவல் எழும்புகிறது. ஏதோ வேலை மகா அவசரமாய் நடக்கிறது. பொதி பொதியாய்க் காகிதக் கட்டுகள் அங்கே கொண்டுவந்து இறக்குகிறார்கள். சுமார் $2\frac{1}{2}$ அடி அகலமான இரட்டை உருளையுள்ள யந்திரங்கள் இயங்குகின்றன. உருளைகளுக்கு இடையில் காகிதங்களை ஒருவன் கொடுத்த வண்ணமாய் உட்கார்ந்து இருக்கிறான். ஒரு இமைப் பொழுதில் காகிதம் படங்களுடன் அருமையான வரி வரியான எழுத்தும் பதித்து வெளிப்படும் அழகை என்னென்று சொல்ல. இவ்விதம் ஒரு நாளில் 10,000 பிரதிகள் அச்சடித்தலாகும்.



நமது புஸ்தகத்தில் அடங்கிய 16 பக்கம் ஒரே காகிதத்தில் இருக்கிறது. அதைத் தகுந்தபடி மடிப்பது வேறொரு யந்திரத்தின் வேலை. பிரதிகளை மேல் வைக்க ஒரு ஆள் இருக்க, நாலாய் அல்லது எட்டாய் மடித்து ஒரு இமைப் பொழுதில் கீழே தள்ளும் காகிதத்தை எடுத்து வைக்க ஒரு ஆள் இருந்து வேலையாகிறது. வேறு பெரிய யந்திரங்கள் அன்றாடக வர்த்தமானம் அச்சிட்டு காகிதம் மடித்து அப்பால் போடுவதும் உண்டு.

கல்யாண அழைப்பு, நாடக விளம்பரம் போன்ற சில்லரை வேலை செய்வோர் சிறிய யந்திரம் ஒன்றைக் கையால் இயக்கி வேலை செய்கிறார்.



புஸ்தகம் தைக்கும் இயந்திரம் வேலை செய்யும் அவசரம் கவனிக்கலாம். ஹா! கண் மூடி விழிக்கு முன் புஸ்தகம் தைத்தாயிற்று. ஒரு சிறுவன் அதின் பாகங்களைச் சேர்த்து வைக்கிறான். ஒருவன் மேல் அட்டை சேர்க்கிறான். வேறொருவன் யந்திரத்தில் வைக்க, அது தன் சுபாவப்படி வெகு சீக்கிரம் தைக்க, வேறொருவன் முடித்த புத்தகங்களை அடுக்கி வைக்கிறான்.

நமது புஸ்தகங்களின் விளிம்பு எவ்வளவு ஒழுங்காய் இருக்கிறது, கவனித்தாயா! புஸ்தகம் தைத்து முடிந்த வுடனே சுமார் முக்கால் அடி உயர அளவாய் அடுக்கி, அறுக்கிற யந்திரத்தில் வைக்கிறார்கள். அது ஒரே அடியில் அதை அறுத்து மகா ஒழுங்கான ஓரத்துடன் புஸ்தகத்தை வெளியேற்றுகிறது. என்ன அவசரவேலை? இன்னும் ஒரு யந்திரம் புஸ்தகத்தை அழுத்திச் சிறியதாக்கி மூட்டை கட்டி மற்ற இடங்களுக்கு அனுப்ப உதவி செய்கிறது.

பல வருணங்களால் சிறப்பமைந்த படம் அச்சடிக்கும் வேலை ஒருபால் ஆகிறது. ஒவ்வொரு வருணத்திற்கும் ஒரு விசை காகிதம் யந்திரத்திற்குள் போய் பதிவு வாங்கி வருகிறது. படத்தில் நான்கு நிறம் இருந்தால் அது நான்கு தடவையாக வேலை பெற்றுப் பூரணப்படுகிறது.

பெரிய புஸ்தகங்களைக் கட்டி முடிக்கிற கைவேலை வேறொரு இடத்தில் நடக்கிறது. மற்றப்படி இங்கே நடக்கிற மகா அவசர வேலையெல்லாம் மின்சார சக்தியால் முடிகிறது.

## 3. கல்கத்தா நகர்

இந்தியாவின் பிரதான நகர்களிலும் பிரதானமானது கல்கத்தா என்று அறிவோம். அது கங்கையின் கிளை நதியான ஹூக்லி ஆற்றங்கரையில் இருந்தபோதிலும் கடற்கரை நகருக்கு உண்டான வியாபார சௌக்கியம் பூரணமாய் அனுபவிக்கிறது. தினமும் லக்ஷம் படகு உலாவும் அந்தக் கங்கையின் உள்நாட்டு வியாபாரத்திற்கு ராணியாக வீற்றிருக்கிறது. சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் இந்திய ராஜதானியாகவும் விளங்கினது. தற்காலம் அது இந்தியாவின் செல்வம் பொழியும் நாடான வங்காள நாட்டின் தலைநகராய் இருக்கிறது. கல்கத்தாவின் சிறப்பு சொல்லுவதே ஆனந்தம். பூரணமாய்ச் சொல்லுவதோ அசாத்தியம்.

தென்னிந்தியன் ஒருவன் கல்கத்தாவை நெருங்கிச்சேரும்போது பலமணி நேரங்களாக ஜலக் கஷ்டம் அறியாத நெல்வயல்களை இடையறாது பார்த்துக் கொண்டே செல்வான். நகரிலிருந்து சுமார் இருபது மைல் தூரம் காகிதம் கித்தான் செய்தல், மாவு அரைத்தல் போன்ற வேலைகள் விரைந்து நடத்தும் யந்திரசாலைகளின் புகைப் போக்கிகளைக் கவனிப்பான்.

நகரண்டை நெருங்க நெருங்க வயல்களில் ஜலம் பெருக்கெடுத்துச் சிறு கிராமங்களைத் தீவுகளாக்கி நிற்பதையும், பல கால்வாய்களில் காணப்படும் சிறிய படகுகளையும் கண்டு அதிசயிப்பான். நமது நாட்டு மாட்டு வண்டிகளுக்குப் பதில் அங்கே படகுகளே மூட்டை முடிச்சுகள் ஏற்றிப் போவதைக் காண்பான்.

கல்கத்தா நகர் வங்காளக் கீழ் மாகாணத்தின் தலைநகர். அந்த நாடு முழுவதும் கங்கை ஆற்றின் கால்வாய்களால் நீர் பாய்ச்சப்பெற்ற பாக்கிய பூமி. கல்



கத்தாவைச் சுற்றி எப்பக்கமும் குளிர்ந்த நெல் வயல்களும் சணல் பயிருமே எக்காலமும் விசேஷமாய்க் காணலாம்.

நகரின் பிரதான ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஹௌரா என்று பெயர். ஹௌரா ஸ்டேஷன் கட்டடத்தை எவ்வாறு வருணிக்கலாம்! அதன் நீளம்

அகலம் உயரம், நிகரற்ற தூண் வரிசைகள், அங்குள்ள கடைகள், காப்பி ஹோட்டல்கள், சாப்பாட்டு வீடுகள் எதை எடுத்துக் கூறலாம்! நிமிஷந்தோறும் அங்கே வருவதும் போவதும் கூடுவதுமான ஜனங்கள் ஜாதிக்கார் பாஷைக்காரர் போடும் கூச்சலை எப்படி விவரிக்கலாம்! வண்டித் தொடர்கள் வந்து சேரும் ஓசையும், அவை புறப்படும் ஓசையும், பிரயாணிகளின் அவசர நடையும் இடையறாத காட்சி.

நகருக்குள் போய் உலாவி வரப் புறப்பட்டால் முதலாவது ஹூக்லி என்னும் மகத்தான நதியையும் அதன் மேல் கிடக்கும் அற்புதமான அசையும் பாலத்தையும் கண்டு இமைகொட்டாது நிற்கவேண்டும். பாலம் பல படகுகளால் அமைக்கப்பட்டது. அசைந்தாலும் பயமில்லை! ஆற்றின்மேல் திரியும் பெருங் கப்பல் சிறு கப்பல் ஜப்பானிய கப்பல், சீனக் கப்பல், சீமைக் கப்பல், நதிக் கப்பல், ஆற்றுப் படகு, வீட்டுப் படகு, மீன் பிடிக்கும் சிறு படகு, பெரும் படகு, வியாபாரப் படகு, ஹா! எத்தனை எத்தனை? நகரைப் பார்க்க மோட்டார் வண்டி, குதிரை வண்டி, மோட்டார் பஸ், டிராம் வண்டி முதலிய பலவித வாகனங்கள் கிடைக்கும். நதியில் போய்வர படகுகள் திரிகின்றன. சாப்பாட்டு வீடுகளில் கோதுமையில் செய்த சப்பாத்தி அதிகமாய் வழங்குகிறது.

கடைத் தெருவில் கட்டடங்கள் எல்லாம் பொதுவாய் மூன்று மெத்தை வீடுகள். அவைகளில் பல விதச் சாமான்கள் ஏராளமாய் அடுக்கிக்கிடக்கும் விதம் பார்த்தால் எதை வாங்கலாம் என்று தெரியாது. எத்தனை எத்தனை கடைகள்! எவ்விதம் இவ்வளவு

பொருட்களும் விலையாகின்றன என்பதே பெரிய சந்தேகம். பெரிய பை நிறையப் பவுண் நாணயம் நிரப்பிக்கொண்டு புதுமார்க்கெட் பார்க்கப் போவது சரி. கல்கத்தா நகரின் கடைகளின் மாட்சிமை அங்கே கண்டு களிகூறவேண்டும். பெரிய நாடகக் கொட்டாய் மாதிரி விசாலமான பல கூடங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தினுசுச் சரக்கு நேர்த்தியாய்ப் பரப்பி இருக்கும். இதுதான் தேவேந்திரலோகமோ? அல்லது குபேர பட்டணமோ?

மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சி, திராக்ஷை முதலிய பழத்தினுசுகள் ஒருகூடம். காய்கறிகள், பலசரக்கு கடைகள், மிட்டாய் வகைகள், தோல் பெட்டிகள், இருப்புப் பெட்டிகள், வாத்தியப் பெட்டித் தினுசுகள் ஏராளம் ஏராளம். பிறந்த குழந்தை முதல் வயோதிகர் வரை, மஹாராஜா முதல் கூலிக்காரன் வரை எவரையும் சந்தோஷப்படுத்தும் தினுசுகள்; புஷ்பக்கடைகள் மணவீட்டு அலங்கார முதல் பிரேத ஜோடிப்பு வரை எந்தக் காரியத்திற்கு வேண்டிய புஷ்பங்கள் ஜாதி ஜாதியாய் விதவிதமாய் கட்டித் தயாராய் இருக்கின்றன. நகைக் கடைகள்! குபேரன் கொலுவிருக்கும் மேடை தானோ! திருமகள் நடனமாடும் கல்யாணக் கூடமோ! அறியோம். பொன்னும் நவரத்தினக் கற்களும் கலந்து உறவு கொண்டாடும் விதம் பெரிது. அரசர் நகைப் பைத்தியம் கொண்ட பெருஞ் செல்வர்மட்டுமே அங்கே வியாபாரம் கொள்ளப் போகிறார்.

கல்கத்தாவைத் தோட்டங்களின் நகர் என்பதுண்டு. பிரதான ஆலயங்கள் பொது மாளிகைகளை அடுத்துச் சிறு ஏரியும் அதன்மேல் ஒரு பாலமும்

ஏரிமேல் இன்பமாய் உலாவ ஒரு படகும் காணலாம். புஷ்பங்கள் பாதைகளின் அருகிலும் சட்டிகளிலும் பாத்திகளிலும் பாதுகாப்புடன் வளருகின்றன. சில தோட்டங்களில் மரங்கள் ஜாதி ஜாதியாய்க் கூடி, ஜனசமூகக் காரியாதிகள் பேசும் பெரியோர் மாதிரி நிற்கும் தோற்றம் இனிது. ஆற்றிலிருந்து சமீப தூரத்தில் 'ஏதேன் தோட்டம்' இருக்கிறது. மேல் கண்ட சிறப்புகளும் வாடாத புல் தரையும் ஏரியில் இனிது வாசஞ்செய்யும் நீர்ப் பறவைகளும், மரங்களில் இருந்து மங்களகவி சாற்றும் பறவைகளும் வழியில் போவோரையும் வருந்தி அழைக்கும். புத்தமத கோயில் ஒன்று ஏரி ஓரம் நிற்கிறது. இது பர்மாவில் செய்து துண்டு துண்டுகளாய்க் கொண்டு வந்து பொருத்தப் பெற்றது. அருமையான வேலைப்பாடுகள் அடங்கியது. மாத்திறைல் அமைக்கப்பட்டது.

ஆற்றுக் கப்பல் ஒன்றில் ஏறி ராஜாங்கத்தார் ஆதரிக்கும் நந்தவனம் வரை போனால் நதியில் உலாவும் படகுகளையும், மின்சார யந்திரங்கள் அவற்றில் சாமான்கள் ஏற்றி இறக்கும் அவசரத்தையும், கவனிக்கலாம். கப்பல்களைப் பழுது பார்க்கும் இடம் ஆற்றங்கரையில் இருக்கிறது. சர்வ ஜாதி மரங்களின் நந்தவனம் போய்ச் சேர்ந்தால் அங்கிருந்து வெளியேறக் கால்வராது.

ஒரு பாதையின் இரு கரையிலும் கூந்தற்பனை. வேறு பாதைகளிலும், ஜாதி ஜாதியாய் மரங்கள் வரிசைக் கிரமமாய் நிற்கின்றன. தடாகங்களில் அல்லியும், தாமரையும் அடர்ந்து பாவிக் கிடக்கின்றன. கிழ ஆல மரமொன்று தன் நீண்ட கிளைகளை ஏந்திப் பாரஞ் சுமந்து நிற்கிறது. ஒரு பக்கம் தோழர்

சிலர் கூடி வன போஜனம் செய்ய வந்திருக்கிறார்கள். இந்தச் சோலையின் மரங்களும், மலர்களும், பசும் புல் தரையும் பார்த்தோர் உள்ளத்தில் குடிகொள்ளும் சக்தி யுள்ளவை.

இந்தியரும், ஆங்கிலேயரும் கை கலந்து சண்டை பண்ணிக்கொண்ட ஞாபக சின்னங்களாகப் பல மகா வீரரின் சிலைகள் ஆங்காங்கு காணலாம். அவற்றுள் ஒன்றாகக் கோட்டையையும் மதிக்கலாம். அதனுள் இராணுவமும், அதை அடுத்த பல வீடுகளும் கம்பீர மாய் அமைந்திருக்கின்றன. கோட்டைக்கு வெளியே அரை மைல் தூரம் எப்பக்கமும் புல் வெளிகளும், பல வித பந்தயவிளையாட்டு ஸ்தலங்களும் இருக்கின்றன.

இன்னிசைக் கீதங்கள் முழக்கி எம்பெருமானைப் போற்றும் ஆலயங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. காளி கோயில் அழகிய வேலைப்பாடுகள் பெருகிய கட்டடம். அங்கே அநியாயமாய்க் கொலையாகும் ஆடுகளின் தொகை குறைந்து வருகிறது.

மிருகங்களின் சிறைச்சாலையான காட்சிசாலை மிகச் சிறந்ததோர் தோட்டத்தில் இருக்கிறது. பல பொருட் காட்சிசாலையானது வேறொரு சிறந்த மாளிகையில் இருக்கிறது. அங்கே எகிப்திய மன்னருடைய சட லங்கள் சில ஆயிரம் வருஷங்களுக்கு முன் உயிர் நீத் துப் பக்குவம் பண்ணப்பட்டவை இன்னும் இருப்பது காணலாம்.

விக்டோரியா மாளிகையில் பழைய அரசர் நவாப் கள், இராணிமார் படம் பார்த்துப் பூர்வ சரித்திரம் ஞாபகப் படுத்திக்கொள்ளலாம்.

ஆசியாவின் பெருமை வாய்ந்த நகர்களில் கல்கத்தா மேலானது.

நகரைச் சுற்றிலும் பல மைல் தூரம் வியாபித்து இருக்கும் காகிதமில், அரிசி மில் முதலிய தொழில் துறைகளைப் பார்த்து வரப் பல நாள் செல்லும். எல்லாச் சிறப்புக்களின் நடுவில் ஏழைகளின் வீடுகள், ஈரத்தரை, கூரை வீடு; மலே ஜுரத்துக்கு அனுகூலமானவைகள்.

நாட்டின் குடிகள் பங்காளிகள். மாதரை வெளியே விடார். அங்கே இந்திய மாதரின் கல்வி குறைவுதான் என்று கூறுவது அனுவசியம்.

**வினுக்கள் :**

1. எந்தக் காரியங்களில் கல்கத்தா நீ பார்த்த தென்னிந்திய நகரங்களுக்கு வித்தியாசமாய் இருக்கிறது ?
2. கல்கத்தாவில் நீ காண விரும்பும் காட்சிகள் எவை ?
3. அங்கே பிரயாணத்துக்காக ஏற்பட்ட உபாயங்கள் எவை ?
4. கல்கத்தாவின் தோட்டங்களைப் பற்றிச் சொல்லு.
5. கல்கத்தாவின் கடைகளைப்பற்றிக் கூறு.



## 4. மின்சாரம் - II

மின்சாரமாகிய மகா சக்தியைக் குறித்துப் பேசினால் அது ஒரு பெரிய பூதத்தின் கதை சொல்வது போல் இருக்கும். இப்படிப்பட்ட மனோ வாக்குக் கெட்டாத சக்தி ஒன்று உலகில் இருக்கிறதென 2,500 வருடங்களுக்கு முன் ஒரு வல்லவன் யூகித்தறிந்தான். அது எங்கே கிடைக்கும், எப்படி அதைச் சேர்த்து அடைத்து வைக்கிறது, எவ்விதம் விரும்பிய இடத்திற்கு அதைக் கொண்டு போவது என்பது போன்ற விஷயம் உலகில் சாஸ்திர விசாரணையில் தம் வாழ்நாளைச் செலவிட்ட பெரு மக்கள் பலரின சோலியாயிருந்தது. அவர்களின் பெயரும், அரும் பிரயாசையும், அதனால் விளைந்த பலனும் அறிஞர் பலர் இயற்றிய பிரபந்தங்களில் சவிஸ்தாரமாய்க் காணலாம்.

கடந்த 60 வருஷங்களாய் அதின் நடமாட்டம் மிகவும் கவனிக்கத் தக்கது. அதனால் கல்வியும், நாகரீகமும், மனுஷ ஜீவியத்தை அடுத்த சகல காரியாதிகளும் அடைந்திருக்கும் மாறுதல்களும் மதிப்பிடல் அரிது. போக்குவரத்து சாதனங்கள் அடைந்திருக்கும் அபிவிருத்தியால் இப் பூச் சக்கரம் சிறியதாய்விட்டதென்றே சொல்ல வேண்டும். பெருஞ் செல்வம் படைத்தவர்கள் மட்டுமன்றி, சகல விதமான அந்தஸ்துள்ளவரும் அனுபவிக்கும்படியாகச் சுகங்களை அது ஏற்படுத்திவிட்டது.



திருஷ்டாந்தமாக மோட்டார் வண்டியில் நான்கு அணு கொடுத்தால் பத்து மைல் அரை மணி நேரத்தில் பிரயாணம் போகலாம். ஒரு ரூபாய் கொடுத்து 50 மைல் தூரம் ஆறுகள், மலைகள், கரும்புத் தோட்டங்கள், வயல்கள், காடுகள் தாண்டி அவசரமாய்ச் சென்று, மூன்று மணி நேரத்தில் விரும்பிய இடம் சேரலாம். மனுஷன் பாராத இடமெல்லாம் பார்த்து அறிவு விருத்தி யடைந்து, பலவிதமான ஜனங்களிடத்திலு

மிருந்து நவீன முறைகளைக் கற்றுக்கொள்ளுகிருன். அழகிற் சிறந்த ஏரிகள், சுகத்துக் கிடமான மலைகள், காஷ்மீர தேசம், கங்கை பிரதேசம் போன்ற அருமை யான இடங்களைச் சாதாரண அந்தஸ்துள்ள எவரும் பார்த்து ஆனந்திக்கக் காலமாயிற்று.

ஆஸ்பத்திரிகளில் மின்சாரத்தால் நடக்கும் வேலை மகா அருமையானது. மின்சார ஒளியால் உடலின் உட் பாகம் எதையும் பார்க்கவும், நரம்பு போன்ற நுட்ப சக்தி பொருந்திய பாகங்களை ஒட்டிய சீர் கேடுகளைக் குணமாக்கவும் உபயோகப்படுகிற விதம் ஆச்சரிய மானது.

கடல் பிரயாணிகள் ஒரு மாதம், இரண்டு மாதம் கப்பலில் இருந்தாலும் ஆகாரக் கஷ்டமென்பது இன்ன தென் றுணராமல் வேளை தவருமல் புதிய ஆகாரம் உண்டு சுகமா யிருக்கிருர்கள். முற்காலங்களில் இவ்வித யாத்திரிகள் உப்பிட்ட மாம்சமும், காய்ந்த ரொட்டியும் உண்டு சலித்து நோயாளருமாவார்.

சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் கூடிய ஒரு வியாபார சங்கத்தார் உண்ட விருந்து உணவின் விவரமாவது :—

| | | | மைல் |
|---|---|---|---|
| 1. ஆமை ஸூப் | குயின்ஸ்லாந்து | தேசச்சரக்கு | 12,000 |
| | ஆஸ்ட்ரேலியா | | |
| 2. ஸால்மன் மீன் | கனடா | ,, | 3,000 |
| 3. ஆட்டிறைச்சி | நியுஸீலந்து | சுமார் | 13,000 |
| 4. மாட்டிறைச்சி | ரிவர் ப்ளேட் | | |
| 5. காடை | எகிப்து | | |
| 6. உருளைக்கிழங்கு | கேனரித் தீவுகள் | | |
| 7. அன்னுஸிப் பழம் | ஜமேக்கா | | |

தற்காலம் மாம்சம், மீன், முட்டை, வெண்ணெய், பலவிதப் பழங்கள், உலகத்தில் தேசம் விட்டுத் தேசம் உலாவி வரும் விதம் மதிப்பில் அடங்காது.

மேலும் கப்பல்களும், ரெயில் வண்டி, மோடார் வண்டிகளும் செலவைக் குறைத்து வேகத்தை அதிக ரித்துக்கொண்டே வருகின்றன. பதினைந்து வருஷங் களுக்கு முன் ரூபாய் 4,000 க்கு வாங்கின மோடார் வண்டி தற்காலம் ரூபாய் 1,500-க்கு வாங்கலாம். இன்னும் என்னவாகுமோ அறியோம்.

வேளாண்மையும், கைத்தொழிலும் உறவின்மு றையார் அல்லவா? அவை இரண்டும் கை கோத்த படியே முன் னேறிச் செல்லுகின்றன வென்பதைக் கவனியாதவரும் உண்டோ.

மின்சார சக்தியால் குளிர் வேண்டியபோது குளிர் உண்டாக்கினபடியே, அனல் வேண்டியபோது அனல் உண்டாக்கி உபயோகிக்கிறார். அதில் சமையலாகிறது. பயிர் முதிர்வதற்கான வெயில் இல்லாத இடங்களில் காரியத்திற்கு வேண்டிய அளவான அனல் உண்டாக்கி, வேனிற் காலத்துக்குக் காத்திராமல் தாம் விரும்பிய காலத்தில் தமக் கிஷ்டமான பலன்கள் முதிரச் செய் கிறார்கள். ஒருவன் அமெரிக்காவில் ஒரு வெள்ளரித் தோட்டம் வைத்திருந்தான். காலத்தில் நான்கு தோட் டக்காரரும் சந்தையில் தம் தம் சரக்கைக் குவிப் பார்கள்; எல்லாம் மலிந்து போகும்; என் பழம் முந்திக் கடைக்குப் போனால் நல்ல லாபம் கிடைக்கும் என்று எண்ணித் தோட்டத்தில் பாதியை விட்டு, அடுத்த பாதியில் தரையில் இரண்டு அடிக்கு ஒன்றாய் கம்பி பரப்பிக் கம்பிகளில் மின்சாரம் செலுத்தினான்.

தரை அன லாயிற்று. செடிகளில் பாதி அவன் விருப்பம் போல் பலன் கொடுத்து உதவின. இன்னு மொரு திருஷ்டாந்தம்.

இங்கிலாந்து தேசத்தின் சஸெக்ஸ் நாட்டில் ஒரு பண்ணையில் கோழி, பன்றி, தேனீ முதலிய ஜந்துக்கள் மின்சார சகாயத்தால் வளர்த்து இலாபம் எடுக்கும் விந்தை கவனிக்கத் தக்கது. இதற்குச் சமானமான காரியங்கள் வேறு பல இடங்களிலும் காணலாம். அங்கே குளிர் காலம் பிராணிகள் வெளிப்படாமல் மடங்கிப் படுத்திருக்கும். அதனால் மின்சாரத் தீபங்களேற்றிக் குளிர் நாள் போய் வேனிற் காலம் வந்து விட்டது போல் பாவனை செய்கிறார்கள். பன்றி உற்சாகமாய்த் தீனி தின்று கொழுத்துப் பருத்து விருத்தியடைய ஆரம்பிக்கிறது. கோழியும் தூக்கம் விட்டுத் தனக்குக் கொடுக்கப்பட்ட உணவைப் பிரீதியாய் உண்டு முட்டை யிடுகிறது. தேனீ தனக்கு முன் வைக்கப் பட்ட வேடிக்கை மலர்களைக் கௌரவப்படுத்தி, தூக்கம் மறந்து உஸ்ஸ் என்று பறந்து அலைகிறது. தந்திரமாய் அங்கே படைக்கப்பட்ட மகரந்தப் பொடியிலும், இனிய இரசத்திலும் திருப்தியடைந்து தேன் செய்யும் வேலை ஆரம்பிக்கிறது.

காலையில் சூரியன் உதய மாகுமுன் மின்சார ஒளி அருணோதயம் போலவே பிரகாசிக்கிறது. மாலையில் அங்கே நான்கு மணிக்கெல்லாம் சூரியன் அடைவதால் மனுஷனது ஞானம் ஏற்படுத்திய போலிச் சூரியன் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கதிர் ஒளி வீசி, வேலை செய்யும் பிரியம் பிராணிகளுக்கு ஏற்படுத்துகிறது.

## 5. சிற்றுயிர் ஜீவிகள்

ஜீவராசிகளின் வகுப்புத் தொகை பெரிது. அவற்றைச் சுருக்கி முதுகெலும்புள்ளவை, முதுகெலும்பு இல்லாதவை என்று இரண்டு பெரும் பிரிவுகளாய்ப் பகுத்தார் அறிஞர். எந்தப் பிராணியும் பல நுட்பமான அணுக்கள் சேர்ந்து ஆச்சரியமாய் அமைந்த சொரூபியாகின்றது. அந்த நுட்பமான அணுக்கள் ஒவ்வொன்றும் தம்தம் வேலை செய்ய அறிந்த தொழிலாளிகளாக நாம் மதிக்கவேண்டும். மனித தேகத்தில் தோல் எலும்பு தசை நார் மூளை என்பதுபோல் பலவித அம்சங்கள் உண்டென்பதை அறிவோம். அவை ஒவ்வொன்றுமே லக்ஷக்கணக்கான நுட்பமான உயிர் அணுக்களின் ஒழுங்கான கூட்டங்களாம். பிராணியின் ஜீவகாலத்தில் அதின் உடலை அமைக்கும் ஜீவ அணு ஒவ்வொன்றும் இடையறுது உழைத்து வருவதால் பிராணி தன் ஜீவியத்திற்குரிய கருமங்களை நிறைவேற்றுகிறது.

மேற்கண்டபடி நமது கண்ணுக்குக் காணப்பட்டு நமது கணக்கிலும், மதிப்பிலும் அடங்கிய திரள்கோடி ஜீவன்கள் ஒருவாறு இருக்க, நமது கண்ணுக்குக் காணப்படாத நுட்ப அணு ஜீவிகள் கோடானுகோடியாய் இப் பிரபஞ்சத்தில் உயிர் வாழும் பெருமை பெரிது பெரிது. அவற்றையே நாம் சிற்றுயிர் ஜீவிகள் என்கிறோம்.

சிற்றுயிர் ஜீவிகள் உடலில் ஒரு ஜீவ அணு மட்டும் உண்டு. நிமிஷந்தோறும் அதின் உடல் இரண்டாய்ப் பிரிந்து பிரிந்து சந்ததி கணக்கின்றி விருத்தி

யாகிறது. காலையில் ஒரு ஜீவன் இருந்த இடத்தில் மாலைக்குள்ளாக அதின் சந்ததி ஒரு கோடி யாகலாம். அனலும், அழுக்கும், ஈரமும் உள்ள இடங்களில் அவை விருத்தி யாவது மிகத் துரிதம், அவ்விதமே அவை அழிந்துபோகும் அவசரமும் கவனிக்கக் கூடியது. சுத்த ஆகாயம் சூரிய ஒளிபடுவதாலும், அழிந்து போகும் நிலையி லுள்ள பதார்த்தங்கள் குப்பைகள் நீக்குவதாலும் சிற்றுயிர் ஜீவி லக்ஷக்கணக்காய் மாண்டு அழிகிறது. ஆதலால் அவற்றின் அபிவிர்த்தி மட்டுப்பட்ட நிலையில் இருக்கிறது.

கண்ணுக்குப் புலப்படாத ஒரு அணு அளவில் உரு அமைந்த சரீரத்தைச் சுமந்து திரியும் ஜீவஅணுக்களால் நமக்கு ஆகவேண்டிய தென்ன? அவை புழுதியிலும், நீரிலும் ஆகாயத்திலும் நெருங்கி வாசஞ் செய்தால் நமக்கு ஆவதென்ன, போவதென்ன?

அணுதரிசி என்னப்பட்ட பூதக்கண்ணுடி வைத்திருக்கும் சாஸ்திரப் பண்டிதர் கண்ணுடியால் இந்த மெல்லுடல் சொரூபிகளைப் பார்க்கக்கூடும். அவைகள் நோய்களைப் பரவச்செய்யும் ஆசாமிகள் என்றும், காயங்களை ஆருத ரணமாக்கக் கூடியவை என்றும் திருஷ்டாந்தங்களுடன் அவர்கள் ரூபிக்கிருர்கள்.

அணுதரிசி என்னப்பட்ட அற்புதமான கண்ணுடி இல்லாத முற்காலத்தில், பேரறிவாளரான சாஸ்திரிகள் கண்ணுக்கெட்டாத இந்தச் சிற்றுயிர் ஜீவிகளைப் பற்றி யூகித்தறிந்த வரலாறு சொல்லுவோம்.

சுமார் ஒரு நூற்றுண்டுக்கு முன் சிற்றுயிர் ஜீவிகள் இருப்பது தெரியாத காலம். அக்காலத்தில்

வியன்னு நகரில் சாமல்வீல் என்ற வைத்திய நிபுணன் பிரசவ ஆஸ்பத்திரியின் தலைவராய் இருந்தார். அங்கே வைத்திய வேலை பயிலும் மாணவரும் நடமாடி வந்தார். பிரசவித்த மாதர் பலர் விஷஜுரம் கண்டு மரண மாவது கவனித்து மிக வருந்தினர். அதிலும் மாணவர் கையாடின மாதர் விசேஷமாய் நோய் பெற்று விண்ணுலகம் போகும் காரணம் என்னவென்று மயங்கினர். ஒருநாள் அவருடைய நண்பன் ஒருவர் அதே ஜுரத்தால் திடீரென மரணமானர். அப்போது வைத்தியர் கண்ணுக்குப் புலப்படாத நுட்பமான கிருமிகள் இருந்து வியாதிகளைப் பரவச் செய்வதாய் உத்தேசித்தார். சகல மருத்துவரும் சோப் உபயோகியாமல் கிருமிகளைக் கொல்லக்கூடிய மருந்து நீரில் கை கழுவும்படி உத்தரவு பண்ணினர். அது முதல் தாய்மாருக்கு விஷ ஜுரம் வருவது அபூர்வமாயிற்று. மரணமும் மிகக் குறைந்தது. இதனுல் நோய் பரவச் செய்யக் கூடிய அணு ஜீவிகள் உலகில் நெருங்கி இருப்பதாய்த் தீர்மானித்துக்கொண்டார்.

சற்றேறக்குறைய அதே காலத்தில் அமெரிக்க வைத்தியர் ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் இந்தச் சத்தியத்தை யூகித்தறிந்து அவற்றைத் தொலைக்க உபாயங்கள் தேடிக் கஷ்டப்பட்டார். காரமான மருந்து நீரில் கையும், ஆயுதமும் கழுவின பின்பு காயங்களில் கை வைத்ததினுல் மருந்து நீரின் கடுந் தன்மையால் காயம் வெந்து ஆறுமல் கஷ்டப்பட்டார். பின்பு படிப்படியாய் பல ஆராய்ச்சி செய்து, ஆயுதங்களை வெந்நீரில் போட்டுக் காய வைத்து எடுக்கவும், கைக்கும், முகத்திற்கும் உறைகள் போட்டுக்கொண்டு

ரணவைத்திய வேலைகள் செய்யவும் தெரிந்துகொண்டார்கள். அத்துடன் சிற்றுயிர்க் கிருமிகள் வசிக்க இடம் கொடாத வழுவழுப்பான தரை சுவர் கூரையுடன் வைத்திய வேலைக்கான வீடு கட்டினார்கள். அதன் பலாபலனாகத் தற்காலம் ரணவைத்தியர் வேலை மிக சித்தி பெறுகிறது. கண் விழியானாலும், தலையில் மூளையானாலும் ஜீவரத்த ஓட்டத்தின் மூலஸ்தானமான இருதயமானாலும், நிர்ப்பயத்துடன் அறுத்துப் பிழை நீக்கிக் குணமாக்குகிறார்கள். இதற்குள், உலகம் புகழும் மகா வித்துவான் பாஸ்டீயர் என்பவர் அணுதரிசியாகிய மைக்ராஸ்கோப் என்ற பூதக்கண்ணாடியால் ஆராய்ச்சிசெய்து அணுஜீவிகளின் வரலாறு சவிஸ்தாரமாய் வெளியிட்டார்.

சாதாரண ஜனங்கள், சாஸ்திரம் படித்தோம் என்று மார் தட்டக் கூடிய சாஸ்திர வித்துவான்கள் கூட, அணுஜீவிகள் செய்யக் கூடிய கெடுதிகளைக் குறித்து வைத்தியர் எவ்வளவாய் அழுத்தி உரத்துக் கூவினும், அதைச் சற்றும் கவனிப்பதில்லை. வைத்தியரோ புலி, சிங்கத்திற்கு அஞ்சுவது போல் அணு ஜீவிகளுக்குப் பயந்து அதற்கேற்றபடி ஆயுதங்களை அனலில் காய்ச்சிக் கவனமாய் ஜீவிக்கிறார்கள்.

சாதாரணமாய் ஜலத்தின் அணு ஜீவிகளால் விஷபேதியும், தரையில், உள்ளவற்றால் ப்ளேக் ஜுரமும், ஆகாயத்தில் சஞ்சரிப்பவைகளால் வேறு பல பிணிகளும் தொடருகின்றன. துப்பாக்கிக்காரனுக்குப் பயந்து ஒதுங்குவது போல் அவற்றிற்கு இடங்கொடாது வாழ்வது ஞானம்.

1. அணு ஜீவிகள் ஆகாரத்தில் உட்கார்ந்து அங்கே தானே பலுகிப் பெருகும் தன்மை யுடையன. அப்படியே காயங்களிலும்; அதனால் உணவு பதார்த் தங்களைக் கருத்தாய் மூடிவைக்கவேண்டும்.

2. காலில், பாதரக்ஷை போட்டு நடக்கவேண்டும்.

3. வீடும் வீட்டைச் சூழ்ந்த சகல இடங்களும் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும்.

4. வெற்றிலை, சுருட்டு உபயோகம் பண்ணிக் கண்ட இடமெல்லாம் எச்சில் துப்பும் வழக்கம் நீக்க வேண்டும்.

## 6. தாமஸ் அல்வா எடிஸன்

முன்னொருநாள் பேச்சுக் கருவியின் பயனைக்குறித்துப் பேசினோம். அதை முதலாவது கண்டறிந்த நிபுணனை எடிஸனைக் காணவும், அவன் கதை கேட்கவும் நமக்கு அவாவுண்டானது. அவருடைய பெருமை சிறிது மட்டும் கூறுவோம். எடிஸன் 1847ஆ அமெரிக்காவில் ஒஹியோ நாட்டில் பிறந்தவர். அவர் தகப்பனார் டச்சு ஜாதி. தாயார் ஸ்காட்ஸ் ஜாதி. அவர் சிறுவராய் இருக்கும் போதே குடும்பத்தில் நேர்ந்த பொருள் நஷ்டத்தால் இருந்த இடம் விட்டு மிக்ஷிக்கான் என்ற இடத்துக்குக் குடி போனார்கள். பாடசாலைக்குப் போகக் கிடைத்த சாவகாசம் மிகச் சொற்பம். ஏழு வயது வரை தாயிடம் கல்வி கற்றார். தத்துவ விசாரணைக்குரிய நூல்கள் வாசிக்க அவள் பழக்கிவிட்டாள். பன்னிரண்டு வய

தில் தானே சமாச்சாரப் பத்திரிகை விற்றுப் பொருள் தேட ஆரம்பித்தார். கனடா எக்ஸ்பிரஸ் வண்டியில் சென்று ஆங்காங்கு பத்திரிகை விற்று வந்ததுடன் வண்டியில் வேலேயற்று உட்கார்ந்திராமல் அந்த நேரத்தில் சாஸ்திர ஆராய்ச்சி செய்து கலேகள் பயின்று வந்தார். மின்சாரம் உண்டாக்கும் பேட்டரி என்ற கருவி வைத்திருந்தார்.

அக் காலம் உள் நாட்டுக் கலகம் ஒன்று ஏற்படவே, ஜனங்களுக்குப் பத்திரிகை சமாச்சாரம் மகா அருமையாயிற்று. அவர் அன்றுடம் விளம்பரங்களேத் தந்தி மூலமாய் முன்னதாய் அனுப்பி வருவார். ஜனங்கள் அதனுல் பத்திரிகைக்காகக் காத்திருப்பார். அவர் எடுத்துச் சென்ற பத்திரிகை கட்டு அதிதீவிரமாய்ச் செலவானது. அதோடு வாரப் பத்திரிகை ஒன்று தான் இருந்த மூட்டை முடிச்சு வண்டியில் ஒரு மூலேயில் தன் சொந்த அச்சு யந்திரம் வைத்து அச்சிட்டு அதையும் விற்பனே செய்து வந்தார். இவற்றில் கிடைத்த ஊதியம் யாவும் சாஸ்திர விசாரணேப் பிரயத்தனங்களில் செலவிட்டார்.

ஒரு நாள் தற்செயலாய் காரமான திராவகப் புட்டி ஒன்று வெடித்து சரக்கு ஏற்றின வண்டியில் நெருப்புப் பற்ற இடமானது. வண்டியின் அதிகாரி சீறிச் சினந்து இவரது சாஸ்திர விசாரணேப் பொருட்களே எடுத்து ஜன்னலுக்கு வெளியே எரிந்துவிட்டு அவருக்குக் கன்னத்தில் கொடுத்த அறையில் காது செவிடாகப் போய்விட்டது. அப்புறம் அம்மாதிரி வேலேகளே வீட்டில் செய்து கிடைத்த நேரத்தில் சாஸ்திர சம்பந்தமாய் நிபுணர் எழுதிய சிறந்த நூல்களே வாசித்து வந்தார்.

ஒரு நாள் ஒரு ஸ்டேஷன் அதிகாரியின் குழந்தை ரெயில் வண்டி வரும் சமயம் பாதையில் நிற்கக் கண்டு விரைந்து எடுத்து அதைக் காப்பாற்றினர். அதிகாரி "நன்றி மறந்தவன் மோட்சத்துக்கு அபாத்திரன்" என்ற கருத்தை உணர்ந்தவனாய், எடிஸனுக்குத் தந்திச் செய்தி அனுப்பும் முறையைப் போதித்தான். உடனே ரெயில் பாதையில் மின் தபால் உத்தியோகம் கிடைத்தது. 17 வயதிற்குள் அவ் வேலையிலும் மகா நிபுணன் என்று பெயர் பெற்றார். செவிட்டுக் காதுடன் வேலை செய்வது சற்றுக் கஷ்டமா யிருந்தது. ஆயினும் தனது நுண்ணறிவின் திறமையால் கஷ்டங்களை மேற்கொண்டார்.

இரவு வேலைக்காரன் தூங்காதபடி அரை மணி நேரத்துக் கொரு முறை "ஆறு" என்று தந்தி யடிக்க வேண்டிய கடன் அவருக்கிருந்தது. அவரோ சூழ்ச்சி செய்து அப்படி "ஆறு" என்று செய்தி கொடுக்கும் கருவி ஏற்படுத்தி வைத்துவிட்டுத் தான் நித்திரை செய்துவந்தார். இந்தக் காரியம் வெளிக்கு வந்தவுடனே அவர் வேலையை இழந்தார். இவ்வாறு பல இடங்களில் வேலை பெற்றுச் சிறிது சிறிது காலம் செய்தார். அவர் சாஸ்திர ஆராய்ச்சி, வேலைக்கு இடையூறுகி, வேலைகளை இழக்கலானர். அவர் கீர்த்தி எங்கும் பரவியது. தனது தந்தி ஆபீஸிலிருந்து அடுத்த ஊருக்கு காட்டு வேலிகள்மேல் கம்பி போட்டு இணைத்துத் தந்திச் செய்தி அனுப்ப வழி செய்து, செய்தி ஒவ்வொன்றுக்கு 12 அணு வீதம் வாங்கிப் பொருள் தேடினர். எந்த வேலையிலும் நிலைக்கவில்லை. ஆறு மாதம் பொருள் தேடினல் உடனே அதை சாஸ்திர ஆராய்ச்சிக்காகச் செலவிட்டு மகிழ்வார்.

பாஸ்டன் நகரில் வேலையில் இருக்கும்போது தானுய் 'ஓட்' எண்ணும் இயந்திரம் கண்டு பிடித்தார். வேறு பல யந்திரங்களும் உண்டாக்கினுலும் புகழ் பெருகினதே ஒழிய பொருள் கூடவில்லை. அவ்விடம் விட்டு நியூயார்க் மாநகர் போய்ச் சேர்ந்தார். கையில் காசு இல்லை. உடுத்த உடையன்றி மாற்றுடை கிடையாது. வேலை தேடி வீதிதோறும் அலையும்போது முக்கிய வியாபார வீடு ஒன்றில், தமது செய்திகளை விரைந்து அனுப்பவேண்டிய தருணத்தில் யந்திரம் கெட்டுப் போகவே காரியக்காரர் யாது செய்வதென்று மயங்கி நிற்கக் கண்டார். தான் அதைச் சரி பண்ணுவதாய் ஏற்றுக்கொண்டு அப்படியே செய்து யந்திரம் பழைய படி வேலை செய்யவே அவருக்கு உடனே மாதம் ரூ. 900 சம்பளத்துடன் வேலை கொடுக்கப்பட்டது.

அக்காலங்களில் லேவாதேவிக் கணக்குகளைச் சுலபமாய்க் குறிப்பிடும் உபாயமான யந்திரம் ஒன்று கண்டு பிடித்து அதை 5,000 டாலருக்குக் கொடுப்பதாய் தன் எஜமான்களிடம் சொன்னுர். அவர்களோ அதைக் குறித்த சந்தோஷத்தினுல் 40,000 டாலர் கொடுத்தார்கள். (1 டாலர் $= 3\frac{1}{8}$ ரூ.) இத் தொகை பெற்றவுடனே தனக்கு நியூயார்க் நகரில் தொழில்சாலை ஒன்று நிரூபித்து ரசாயன ஆராய்ச்சிக்கூட மொன்றும் ஸ்தாபித்தார். அவற்றில் தன்னுடன் சேர்ந்து உழைத்த உத்தமி மேரி ஸ்டில்வெல் என்பவளை 1873ஆம் மணந்து கொண்டார். எடிஸனது ஆராய்ச்சியின் பயனுல் இரண்டு செய்திகளை ஒரே சமயத்தில் ஒரே திசையைப் பார்த்துத் தந்தி அனுப்பும் முறை கண்டறிந்தார். அதனுல் ராஜாங்கத்தாருக்குப் பல கோடி பவுன் லாபமாயிற்று. சிறிது காலத்தில் நான்கு செய்தி ஆறு செய்தி

வரை அவ்வாறு போகுமாறு இயந்திரங்களைப் புதுப் பித்தார். தான் கண்டு பிடித்த அருமையான இயந் திரங்களைத் தனது தொழிற்சாலையில் செய்து பின்பு அவற்றை விற்றதின் பயனாக அவருடைய பணப் பை நீளமானது, பொருள் விசாரம் நீங்கினது.

1876-ம் வருஷம் நியூயார்க் மாநகரிலிருந்து 22 மைல் தூரத்தில் உள்ள மென்லோபார்க் என்ற இடத் தில் குடியேறினர். அக்காலத்தில் கிரகாம் பெல் என் னும் அறிஞர், டெலிபோன் என்னும் பேச்சுக் கருவி கண்டுபிடித்தார். அது தொனி குறைவாய் இருந்தபடி யால் வெகு தூரத்திற்குச் செய்தி அனுப்பக்கூடாதிருந் தது. எடிசன் அதைச் சீர்திருத்தி அந்தக் கருவியை எவரும் நினைக்க வொண்ணாத அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தார். அதன்பின் 'பேசுங் கருவி'யாகிய பொனகிராப் கண்டு பிடித்தார். அதன் அருமையைக் கூறுவதும் கூடியதோ! நாம் கேட்டு இன்புறும் அரிய சங்கீதங்கள் அவரால் வந்த வாழ்வன்றோ.

1880 — 1882-ம் ஆண்டுகளில் மின்சார சக்தி யால் ரெயில் வண்டி ஓடும் வழி கண்டுபிடித்தார். மின் சாரத்தீபம் இவருக்கு முந்தியே அறிஞர் கண்டறிந்த போதிலும் இவரே அதைச் சீர்திருத்தப் பலநாள் முயன்று அளவற்ற திரவியமும் செலவிட்டுத் தற் கால நிலைமைக்குக் கொண்டு வந்தவர். அவருக்குப் பின் வந்த பேரறிவாளர் இன்னும் ஆச்சரியமான தீபங்கள் அமைத்தபோதிலும் இவர் பெருமை பெரிது. தீபங்கண்டு பிடிக்கப் பாடுபடுங்கால் தினம் 40, 50 உழைப்பாளர் அவர் கையின் கீழ் இருந்தார்கள். அவரோ உறக்கமும் மறந்து 50 மணிகூடக் கவனத்தை

ஊன்றி நின்று பாடுபட்டுப் பின் பல மணி நேரங்களாய்த் தூங்குவாராம்.

அசைபடக் காட்சி (சினிமா) முன்னமே அரை குறையாய்க் கண்டு பிடித்திருந்தனர். எடிசன் அதைச் சீர்திருத்தின பின்னரே கைக்கெட்டினது யாவருக்கும் வாய்க்கெட்டி யிருக்கிறது. 1912-ம் ஆண்டில் பேசும் படக் காட்சி கண்டறிந்தார். அவருக்கு வயது 73 ஆவதற்குள் 1400 நூதன யந்திரங்கள் கண்டு பிடித்து அவற்றைச் செய்யும் உரிமை ராஜாங்கத்தாரிடம் பெற்றுக்கொண்டார்.

1914-ம் வருஷம் நடந்த மகா போரினால் ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவுக்கு வரும் திராவகம், சாராயங்கள் போன்ற சரக்குகள் நின்று போயின. உடனே அவைகளை யெல்லாம் தாமே செய்து, அவை அமெரிக்கரே செய்து கொள்ளும் வழி ஏற்படுத்தினார். அதனால் எத்தனை திரள் ஜனங்களுக்கு ஜீவனோபாயம் ஏற்பட்டது! அமெரிக்க ராஜாங்கத்தார் தங்களுடைய கப்பல் படைக் காரியாதிகளில் உதவி புரியுமாறு அவரை வேண்ட, அவர் உடன்பட்டு உதவி செய்தார். ராஜாங்கத்தாருக்குப் பலகோடி பவுன் லாபமானது. அவர் உயிரோடு இருக்கும் போதே தேசத்தார் ஏக வாக்காய் அவரைப் புகழ்ந்து சன்மானம் செய்தார்கள். அவர் வாழ்ந்த பல மனைகளின் பெருமை கூறவா?

அவர் 85-ம் வயதில் 1931-ம் வருஷம் அக்டோபர் மாதம் விண்ணுலகின் பேரின்ப பதவி அடைந்தார். பல அறிஞர் அவர் செய்த வேலைகளுக்கும் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தி யிருக்கின்றனர். என்றாலும் அவர் புகழ் மங்காத் தன்மை யுடையது.



## 7. ஒத்தை நகர்

நீலகிரி ஜில்லா முழுவதும் மகா மனோகரமான மலைநாடு. அதின் தலைநகரான ஒத்தைநகர் சமுத்திர மட்டத்துக்கு மேல்7800 அடி உயரத்தில் பல குன்றுகளின் மேல் வீற்றிருக்கிறது. மகாராஜாக்கள், மேன்மக்கள், ராஜாங்க அதிகாரிகள் அங்கே வேனிற் காலத்தில் திரண்டு கூடி அழகிய மலைநாட்டுக்கு அலங்காரம் செய்கிறார்கள்.

ஒத்தையில் உள்ள அழகான வீடுகள், அலங்காரமான கடைகள் மாதிரி வேறு பல இடங்களில் நாம் பார்க்கக் கூடும். ராஜாங்கத்தார் பரிபாலிக்கும் உத்தியான வனம் மிகவும் சிறந்தது. அங்கே கூடும் சந்தைக்கு சென்னை மாகாண கவர்னர் துரைதானும் வந்தாலும்

வந்து விடுவார். மைசூர் மகாராஜா, கவர்னர் துரை, மற்றும் இந்திய அரசரின் சிறந்த மாளிகைகள் பாரா விடினும் சந்தையும் சிங்கார வனமும் அவசியம் பார்க்கவேண்டும்.

ஒத்தையின் சகல தோட்டங்களையும் போல் ராஜாங்கத்தார் தோட்டமும் ஒரு மலையின் சரிவில் இருக்கிறது. ஆகவே புஷ்பம் பாத்திகள் யாவும் பல தளவரிசைகளில் அமைந்திருக்கிறது. அவை பலவித உருவங்களில் அமைக்கப் பெற்று, சுற்றிப் பசும்புல் தரையால் இனிது சூழப்பட்டு இருக்கின்றன.

புஷ்பங்களின் வருணத்தைப் புகழவா, உருவத்தைப் போற்றவா, பாத்திகளில் நெருங்கி யிருக்கும் மகிமையைச் சொல்லவா! சிவப்பு என்ருல் எத்தனை விதமான சிவப்பு, மஞ்சள், ஊதா, நீலம் முதலிய ஒவ்வொரு வருணத்திலும் எத்தனை விதம்! ஒரு பாத்தியில் பல வருணம்: பல பாத்திகளில் ஒரே வருணம்: என்ன அருமை. மேலும் கீழும் சுற்றிச் சுற்றி ஏறுவதும் இறங்குவதும், நிமிஷந்தோறும் புதிய புதிய ஜாதி மலர் முகம் பார்ப்பதுவும் தோட்டத்தின் அனுபோகம்.

குளிர் சகிக்காத செடிகளுக்காகக் கண்ணுடி வீடு ஒன்று இருக்கிறது. அங்கே ஆகாயம் அனலா யிருக்கிறது. மரங்களில் அபூர்வமானவை பல காணலாம். தரையில் பச்சைப் பட்டுக் கம்பளம் போல் பசும் புல் மூடிக் கிடக்கிறது.

கடைகள், சாப்பாட்டு வீடுகள் சகல அந்தஸ்துக்காரருக்கும் தகுந்தபடி அமைந்திருக்கின்றன. செல்

வருக்காய் அமைந்த வீடுகளில் சகல பவுசுகளுடன் அரசர், நவாப்கள் முதலாய் குடித்துச் சூதாடிக் குடி கெட்டுப் போகக் கூடிய ஏதுக்கள் பலவும் உண்டு. ஏழைக் கூலியாள் தாகத்துக்குச் சுடச் சுடக் காப்பி கொடுக்கும் சிறு வீடுகளும் பல காணலாம்.

நீலகிரிக்கு வெயில் காலம் வந்து கூடும் மாந்தர் இளைப்பாறி இன்பமாய்க் காலம் போக்கும் நோக்கம் கொண்டவர். காலை, மாலை, மத்தியானம் எந்த வேளையிலும் அவர் சிறக்க உடை உடுத்து உல்லாச மன நிலையராய்த் தோழர் கைகோத்துக் குலுங்கக் குலுங்க நகைத்துக்கொண்டு சகல மேடுகளிலும், கடைகளிலும், தோட்டங்களிலும் திரியக் காணலாம். கல்கத்தா, டில்லி, பம்பாய், நிஜாம் இராஜ்யம், மலையாளம் முதலிய சகல இடங்களிலு மிருந்து வந்து கூடிய பார்ஸிகள், மலையாளிகள், பிராமணர், கிறிஸ்தவர், இந்துக்கள், ஐரோப்பியர், முகம்மதியர் முதலிய சகல வகையாரையும் பார்க்கலாம்.

சந்தை ஒரு மலைச் சார்பில் தள வரிசைப்பாடான மேடைகளில் கூடுகிறது. எல்லாம் விற்கிறது; எல்லாரும் அங்கே வந்திருக்கிறார்கள். ஆளுக்கும், அந்தஸ்துக்கும், தகுந்தபடி கடைகள் முதல்தரம், இரண்டாம், மூன்றும், நான்காந் தரமாய் விற்கின்றன. அப்படியே நேரம், காலமும் சொல்லலாம். காலையில் 8-30 மணிக்குச் சந்தையானது சக்கரவர்த்தி வீட்டுக் கல்யாண விருந்தர் கும்பல்கள் மாதிரி காணப்படுகிறது. பட்டுப் பட்டாவளிகள், வைர நகைகள், ஜில் என்று பிரகாசிக்கும் செருப்புகள் காணலாம். இவர்கள் சந்தை சாக்கு வாங்க வந்தார்களா? அதைச்

சிறப்பிக்க வந்தார்களா? சாதாரண ஜனங்கள் பிந்தியும், எளியவர்கள் மாலையிலும் சந்தைக்குப் போவார்கள். இங்கிலீஷ் காய்கள், கிழங்குகள், முட்டைக்கோஸ் கீரை கடை சாமான்கள், உடைகள் எதுவும் வாங்கலாம்.

நீலகிரி மலைகளில் உள்ள பைக்காரா, காட்டேரி என்ற இரண்டு நீர் வீழ்ச்சிகளி லிருந்து மின்சாரம் உண்டாக்கி ஜோதி விளக்குகள் ஒவ்வொரு ஊருக்கும் வேண்டிய மட்டும் ஏற்றி யிருக்கிறது. மலைச் சரிவுகளில் யூக்கலிப்டஸ் மரங்கள் நிற்கின்றன. உயர்ந்து ஓங்கிப் பருத்து நின்று சல சலவென இலைகளை அசைத்து நிற்கும் இந்த மரம் ஆங்கிலப் பிரபு செல்வின் துரையால் இங்கே நாட்டப் பெற்றது. இதுவே மலை ஜுரம் மலிந்த இந்நாட்டைச் சுகத்திற்கேற்ற நாடாக்கினது.

இந் நாட்டின் பூர்வ குடிகளாகிய தொதுவர் சிறு கூட்டங்களாய்க் குடிசைகளில் வசிக்கிறார்கள். எருமை வளர்த்து சொற்ப வேலை செய்வார். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த நிலைமையில் இருக்கிறார்கள். விங் மிஸியம்மாள் என்ற அங்கிலேய சீமாட்டியார் இவருக்குப் பாடசாலை கட்டித் தமிழ் எழுத்தை உபயோகித்து வாசகம் வாசிக்கக் கற்பித்துச் சில நூல்களும் எழுதியிருக்கிறார். அவர் முயற்சியின் பயனாகத் தொதுவர் சிலர் நாகரீகமும், நல் வாழ்வும் அடைந்திருக்கிறார்கள்.

ஒத்தையில் புல் மூடிய பள்ளத்தாக்கு ஒன்றில் பந்தய விளையாட்டுகள் நடைபெறும். அங்கே கூடும்

பெரிய புஷ்ப காய் கறிக் காட்சிகள் விவசாய சம்பந்தமான முயற்சிகளை உற்சாகப்படுத்துவதுடன், ஜனங்கள் கூடிப் பழகவும் ஏதுவானவையாகும்.

ஒத்தை நகரின் மாளிகைகளெல்லாம் தலை நிமிர்த்தி உயர்ந்து நிற்கும் மலைகள் மேடுகளைத் தாவிப் பிடித்துக்கொண்டு மாட்டு மேல் ஒட்டிய உண்ணி மாதிரி இருப்பிடம் தெரியாமல் கிடக்கின்றன. அதனால் ஒத்தை நகரை மதிப்பிடுவது கடினம். மைசூர் மகாராஜாவின் மாளிகை பார்த்தால் மற்ற அரசர் பெரியாருடைய மந்திரங்களை ஒருவாறு பார்த்ததற்கொப்பாம்.

அது ஒரு பரந்த மேட்டின்மேல், அரசபெருமான் அந்தஸ்திற்கேற்ற பல வீடுகள் அடங்கியதாய், விதவிதமான பல ஜாதி மலர்கள் நிறைந்த சிறு தோட்டங்கள் மத்தியில் இருக்கிறது. இங்கிருந்து அடுத்து உள்ள பள்ளத்தாக்குகளையும், திருப்பதிக்குப் போய்வந்தவன் மாதிரி ஒரு சிறு மரமும் செடியுமின்றிப் பசும் புல்லால் முக்காடு போட்டு நிற்கும் மலைகளையும் வெகு தூரம் வரை பார்க்கலாம்.

மேடுகளின் பெருமை இவ்வாறிருக்கப் பள்ளத்தாக்குகளே இனிய உணவுப் பதார்த்தங்கள் விளையுமிடம். அங்கே பாலர் பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்த மாதிரி வரிசை வரிசையாய் நார் இல்லாத காய்கறி கீரை பழத் தினுசுகளின் செடிகள் வளருகின்றன. அங்கே உழைப்போரின் கிராமங்கள் உண்டு. சிற்றாறுகள் சலசலவென்று ஓடுகின்றன.

ஒத்தையில் வந்து கூடினவர் தம் இல்லத்திற்குத் திரும்ப மனதில்லாமல் இருப்பதைக் கண்ட மேகங்கள்

கூடி நான்கு நாள் தொடுத்துப் பெரு மழையும், சிறு தூறலுமாய்ப் பெய்வ துண்டு. சகல கூட்டங்களும் கலைந்து அவரவர் ஊர் தேடி விரைந்து போய்விடுவார்.

இரவின் தீபாலங்காரம் விசேஷமானது. மின்சார விளக்குகள் மேடுகளிலும், பள்ளத்தாக்குகளில் சிறு பாதைகளிலும், பெரும் பாதைகளிலும், அரண்மனை களிலும், வீடுகளிலும் கண் சிமிட்டாது ஒளி வீசும் அருமையை வருணிப்பது எவ்விதம்! திருமகள் உலாவும் நந்தவனத்தைக் கலைமகள் நித்தமும் சிங்காரிக்கிருள்.



## 8. மனம்போல் பாக்கியம் - I

ஆங்கிலேய நாடக கவிச் சக்கரவர்த்தி ஷேக்ஸ்பியர் என்பவர் எழுதிய நாடகங்கள் பல உள. கல்விமான்களும், வினோதப் பிரியரும் அவற்றைப் படிக்கிறார்கள். அந்த நாடகங்களில் ஒன்றில் அடங்கிய கதையை நாமும் கூறுவோம்.

பிரான்ஸ் தேசத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன் பல சிற்றரசர் ஆண்டு வந்தனர். அவர்களில் ஒரு மஹாராஜாவை அவருடைய இளையோன் நாடு விட்டுத் துரத்தித் துராகிருதமாய்த் தான் செங்கோல் கைப்பற்றி அரசாட்சி செய்து வந்தான். இந்தக் கொடுங்கோல் மன்னனின் பெயர் சார்லெஸ்.

சார்லெஸ் மன்னனுக்குச் சீலியா எனப் பெயர் கொண்ட ஒரு குமாரத்தி இருந்தாள். தன் தமயனை நாடு விட்டுக் காடாள அனுப்பும்பொழுது அவருடைய நேசப் புதல்வி ரோசலின்ட் என்னும் பெண்மணியைத் தன் குமாரத்திக்குத் துணைவியாய் இருக்கும்படி நிறுத்திக்கொண்டான். நாளடைவில் அவ்விரு பெண்களும் இணை பிரியா நண்பர் ஆனார்கள். ரோசலின்ட் இராஜ குமாரியோ அழகிலும், அருளிலும் நிகரற்றவள் என்ற கீர்த்தி தேசமெங்கும் எட்டியது. இதுவும் சார்லெஸ் மன்னனுக்கு மனநோவுக்கு இடமாயிற்று.

தருமபுத்திரன் போல் வனஞ் சென்ற மன்னரது பிரிவாற்றாத அவருடைய நண்பரான பிரபுக்கள், ஏவலாளர் அநேகர், அப் பெருமான் வாழும் காடே பேரின்ப வீடெனக் கருதிக் காட்டுக்கேகிப் பனியால் நனைந்து வெயிலாலுலர்ந்தும், காய் கனி கந்தமூலம் புசித்தும் மனஅமைதியுடன் நாள் போக்கினார்கள். அரசரோ துன்பத்தில் இன்பம் காண்பவராய், ஒவ்வொரு கஷ்டத்திலும் ஞானோபதேசம் கண்டு வெளியிட்டார். மாரி நாளின் குளிர் காற்று எலும்பைத் துளை போடுவது போல் வீசும்போது, மனம் வருந்தாது, இக் காற்று என் மேல் தாக்ஷணியம் கொண்டு முகஸ்துதி பேசவில்லை. ஆதலின் இதுவே உத்தம மந்திரியாகும் என்பார்.

அக் காலங்களில் ஒருநாள் மல்யுத்தத்தில் கைதேறின ஒரு வஸ்தாதியும் ஆர்லன்ட்டோ என்ற யௌவன புருஷன் ஒருவனும் அரண்மனையில் குஸ்தி விளையாட வந்தார்கள். சீலியா ரோசலின்ட் பெருமாட்டிகளும் அதைக் காணப் போனார்கள். வாலிபனை வஸ்தாதி ஒரு அடியில்வீழ்த்தி உயிர் போக்குவான் என்று பார்த்தோர் யாவரும் பரிதபித்தார்கள். ஆர்லன்ட்டோ, சண்டைக்குப்போய் வீணாய்ச் சாகாதே என்று கண்ட நல்லோ முதியோர் யாவரும் ஆலோசனை சொன்னார்கள். அவனோ கேட்கவில்லை. அப்போது ரோசலின்ட் சீலியா பெருமாட்டியரும் மிகுந்த ஆர்வத்துடன் 'வேண்டாம் அப்பா, வேண்டாம், வஸ்தாதியை எதிர்க்க நீ மிகச் சிறியவன்' என்றார்கள்.

ஆர்லன்டோ அதற்கு உள்ளம் நைந்துருகி, "அம்மையீர், நான் இவனை ஜெயித்தால் வெற்றிமாலை சூட்டப் பெறுகிறேன். அல்லது தோல்வியடைந்து உயிர் துறந்தாலும் எனக்காய்ப் புலம்புவாரில்லை. என் மரணத்தால நஷ்டமடைவார் யாருமில்லை. எனக்காய் வருந்தாதீர்" என்றான்.

மல்யுத்தம் குறித்தபடி நடந்தது. வஸ்தாதி தோல்வியடைந்து கீழே விழுந்து காயப்பட்டான். ஆர்லன்டோவின் வெற்றிக்காய் சபையோர் கைகொட்டி ஆர்ப்பரித்தார்கள். மன்னனும் ஆனந்தம் மேலிட்டு வாலிபனை அணுகி, 'உன்னைப் பெற்ற பாக்கியசாலி யார்?' என வினவினான்.

'நான் ரோலான்ட் பிரபுவின் இரண்டாம் குமாரன்' என்று சொல்லவும், குரூர தூதனான மன்னனின் முக

நாடி வேறுபட்டு, கோபத்தோடு அவ்விடம் விட்டேகினன். ஏனென்றால் ரோலான்ட் பிரபு மரித்து மண்ணுலகம் விட்டேகினவராயினும் அவர் தான் வனத்துக்குத் துரத்திவிட்ட தன் சகோதரனுடைய உத்தம தோழனல்லவா வென்று நினைவு கூர்ந்தான். அவன் கடமைப் பிரகாரம் வெற்றிமாலை சூட்டி ஆர்லான்டோவைச் சன்மானிக்கவில்லை.

ரோசலின்ட் சீலியா இருவரும் அவனது அரிய செயலைப் பெரிதும் பாராட்டி அவனிடம் போய் பட்சமாய்ப் பேசினார்கள். தன் பிதாவின் ஆப்த நண்பனுடைய மைந்தன் ஆர்லன்டோவென அறிந்த ரோசலின்ட் மிக சந்தோஷித்து, தன் கழுத்தில் அணிந்திருந்த தாவடம் ஒன்றைக்கழற்றி அவனுக்குக் கொடுத்து 'அன்பா, இதை நீ அணிந்துகொள். என் நிலை சரியாய் இருப்பின் நான் உனக்கு இதிலும் மேலான நன்கொடை ஈவேன்' என்று சொல்லி, ராஜகுமாரிகள் போய்விட்டார்கள்.

அவர்கள் வீட்டில் ஆர்லான்டோவைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே சார்லெஸ் மன்னன் அவ்விடம் சென்று, ரோசலின்ட் பெருமாட்டி தன்னுடைய நகர்விட்டுப் போய்விட வேண்டுமெனக் கட்டளையிட்டான். சீலியா தனது உயிருக்குயிரான தோழிக்காய் எவ்வளவாய் இரந்துகேட்டும் பயன் இல்லை. "இவள் புகழ் உலகமே ஒன்றுகூடிப் பேசுவதால் உன்புகழ் உரைப்பாரில்லை, பேதாய்; இவள் உன்னைவிட்டகல்வது அவசிய"மென உரைத்தான் வேந்தன்.

சீலியா ரோசலின்ட் இருவரும் இசைந்த மன துடன், ‘கொடுங்கோல் மன்னர்வாழும் நாட்டில் கடும் புலிவாழும் காடு நன்றே’ என எண்ணிக் காடு நோக்கிக் கடுக நடந்தார். அரண்மனைத் தீபங்களாய்ப் பொலி வுறும் அலங்காரவுடை களைந்து, அவர் வேடர் அணியும் துயில் உடுத்தி, ரோசலின்ட் அண்ணனெனப் பெயர் பூண்டு, ஆண் வேஷம்கொண்டு, கானிமீட் என்ற நாமம் எடுத்து, சீலியா பெருமாட்டிக்கு அலிஞ என்ற பெயர் தரித்து, தாம் இன்னாரென எவரும் சந்தேகம் கொள்ளா வண்ணம் நடந்து கொண்டார்கள். வழியில் அலிஞ சோர்ந்து போக, கானிமீட் தான் பூண்ட அண் ணன் வேஷத்துக் கேற்றவாறு தைரியமாய்ப் பேசி அவளைத் தேற்றினாள். இருவரும் தங்க இடமற்று, உண்ண உணவற்று வருந்தும் வேளையில் காட்டில் இடையன் ஒருவன் குடிசை விலையாக்கும் தருணமா யிருக்கக் கண்டு அதை வாங்கி, ஆடு மேய்க்கும் ஏவ லாளும் குடிசையும் பெற்று, அங்கே அமர்ந்தனர்.

ஆர்லான்டோவின் பிதா மரித்தபின் அவன் தமய னிடம் நிஷ்டூரங்கள் சகித்து வரும் நாளில், மூத்தோன் தம்பியின் உயிரை வேட்டையாடக் கருதி அவனை மல் யுத்தத்திற்கு இழுத்துவிட்டான். அதிலும் அவன் மேன்மையடைந்தது பற்றி அவன் இருக்கும் வீட் டிற்கு நெருப்பு வைத்து அவனுக்கு முடிவு செய்ய ஆலோசனை பண்ணினான். இதை அறிந்த அவர்க ளுடைய சீர் தொண்டன் ஆதாம் என்பவன் ஆர்லன் டோவுக்குச் சொல்லி, தான் சிறு வயது முதல் தேடி வைத்த சுமார் ரூ. 1,600-க்கு ஈடான பொன் நாணயங் களையும் பையோடு அவனிடம் கொடுத்தான். ‘அப்

பனே, நான் கிழவன் என்ருலும் வாலிபன் போல் உன்னைச் சேவிப்பேன். உயிர் உள்ளளவும் உன்னை யன்றி வேருெருவனைச் சேரேன், வாரும் எங்கேயாகி லும் போய்ப் பிழைக்கலாமென்ருன்.

ஆதாமும், ஆர்லன்டோவும் அரும் பாடுகளுடன் வனஞ் சேர்ந்தார்கள். ஆதாம் விருத்தனைதால் பசி தாகம் களைப்பு மேலிட்டு, நடக்கச் சக்தியற்று ஒரு மரத்தடியில் படுத்துக்கொண்டு, 'ஐயனே, போதும்; என் காலம் முடிந்தது. நீர் சுகமாய் இரும்' என்ருன். ஆர்லன்டோ அதற்கு 'முதியோனே, நீ படுத்து இளைப் பாற உனக்கு விடை தந்தேன். நீ சாக சம்மதியேன். உனக்கு உணவு தேடி வருவேன். படுத்திரு' என்று சொல்லி ஆகாரம் தேடப் புறப்பட்டான். சற்று தூரம் போய் ஒரு கூட்டம் ஆட்கள் வேட்டையாடிச் சம்பா தித்த மாம்சமும், காட்டுக் கனிகளும் தரையில் பரப்பி விருந்துண்ணத் தயாராய் இருக்கக் கண்டான். அவரே நாடு துறந்து காடுறையும் அரசனும், அவரது உத்தம ஊழியரும்.

ஆர்லன்டோ தன் வாளை உருவி உயர்த்தி வீசி, "அடே பயல்காள், தீண்டாதீர், உண்ணீர் உமது ஜீவன் மேல் ஆணை" என்ருன்.

மாஜி அரசர் இதைக் கேட்டு, வாலிபா, இவ் விதம் நடந்துகொள்ள உன் கஷ்டம் எத்தன்மையதோ! அல்லது நல்லொழுக்கம் தெரியாத குலத்தில் உதித் தனையோ அறியேன். காரியம் எதுவானலும் என் உணவை என்னேடு இருந்து நீ உண்ணத் தடை ஏது மில்லை வா, என்ருர். "ஆர்லன்டோ வெட்கித் தலை குனிந்து, சாந்தபிரபூ, நான் நல்லொழுக்கத்தில் வளர்ந்

தவன் ; என் கஷ்டங்களால் மதிமயங்கி நிற்கிறேன். என்னைச் சேர்ந்த வயோதிபன் ஒருவன் பட்டினியால் வாடி உயிர்விடும் நிலையில் இருக்கிறான்'' என்றான்.

தன் ராஜ்யம் இழந்தும் தரும சிந்தை அணுவளவும் குன்றாத குணக்கடலான வேந்தன், கிழவனை அந்த க்ஷணமே கொண்டு வருமாறு கட்டளையிட்டான். ஆர்லன்டோ அவ்விதமே போய் ஆதாமைச் சுமந்து கொண்டு வந்தான். அதிசீக்கிரம் அவன் களைநீங்கிச் சுகமானான். மேலும் ஆர்லன்டோ இன்னான் என்று தெரிந்தபோது வயோதிப அரசர் அவனைத் தன் பிள்ளைபோல் மதித்து நடத்தினார்.

ஒருவாறு தேறுதலடைந்தும் அவன் எண்ணமெல்லாம் ரோசலின்ட் மேல் இருந்தது. அவள் பெயரை மரங்களிலெல்லாம் வெட்டினான். அவள் மேல் கவிகள் எழுதிக் கண்டகண்ட செடிகளிலும் மரங்களிலும் கட்டித் தொங்கவிட்டான். கானிமீடும் அலீனாவும் அவற்றைக் கண்டு, ஆர்லன்டோவும் அக்காட்டில் ஒரு பக்கம் இருப்பானோ என்று ஆச்சரியப் பட்டார்கள்.

## 9. மனம்போல் பாக்கியம் - II

ஒரு நாள் கானிமீடும், அலீனாவும் காட்டில் உலாவி வருங்கால் ஆர்லன்டோ எதிர்ப்பட்டான். அவன் கழுத்தில் ரோசலின்ட் அவனுக்குக் கொடுத்த சங்கிலி கிடந்தது. கானிமீட் யார் என்று அவன் சற்றும் சந்தேகிக்கவில்லை. அதனால் கானிமீட் அவனைக் கேலி பண்ணுவது இலகுவாயிற்று.

கானிமீட் அவனைப் பார்த்து, நண்பா, இக் காட்டில் யாரோ வேலையற்றவன் மரங்களிலெல்லாம் ரோசலின்ட் ரோசலின்ட் எனப் பெயர் எழுதி மரங்களின் வனப்பைக் கெடுக்கிறான். செடிகள்தோறும் அவள் புகழைக் கூறும் பாடல்கள் தொங்க விடுகிறான். நான் மாத்திரம் அவனைக் கண்டால் காதல் என்னும் கடும் பிணி நீக்கிக் குணமாகச் செய்வேன் என்றாள்.

ஆர்லன்டோ, அப்பா நானே அந்த நோயாளி. பார்க்கலாம் உன் வித்தையெல்லாம் காட்டி என்னைக் குணமாக்கு என்றான். கானிமீட், சரி நாள்தோறும் என் வீடு வரை வந்து போ. நானே உன் காதலி ரோசலின்ட் எனப் பாவித்துக்கொள். அப்பொழுது எனது ஒழுக்கமானது உன் காதலை நீக்கிவிடும் என்றாள். ஆர்லன்டோவும் நாள் தவறாமல் கானிமீட் இடத்துக்கு வந்து போவதாய் ஒப்புக்கொண்டான். ஆனாலும் காதலை நீக்கும் மருந்து அதுவென்று அவன் நம்பவேயில்லை. கானிமீட் என்பவன் கொஞ்சம் ரோசலின்ட் முகச்சாடையாய் இருக்கிறான் என்ற அபிமானத்தால் அவனிடம் போய் உரையாடுவது ஆர்லன்டோவுக்கு அறுதின சோலியாயிற்று. இவ்விதம் சில காலம் இன்பமாய்க் கடந்தது. தகப்பனைத் தேடி அவரண்டை சேரவேண்டுமென்ற எண்ணம் முதலாய் ரோசலின்டுக்கு உண்டாகவில்லை. ஒரு நாள் கானிமீட் மாஜி அரசரைக் காண நேர்ந்தது. அரச பெருமான் அவனைப் பார்த்து, பையனே, உன் பெற்றார் யார்? அவர் எங்கே என வினவினார்.

அவனோ, வேந்தே, என் குடிப்பிறப்பானது உமக்கு எவ்வளவேனும் இரங்கியதன்று என மேட்

டிமையாய் விடை கூறினான். அவர் புன்னகைகொண்டு, இவன் யாரோ அரச குலமகனே எனத் துணிந்தார்.

ஒருநாள் காலை நேரம் ஆர்லன்டோ தனது சிநேகிதன் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான். வழியில் படுத்திருந்த ஒரு மனிதன் கழுத்தில் பசும்பாந்தள் ஒன்று சுற்றியிருக்கக் கண்டான். ஆர்லன்டோ அவனைக் கிட்டிச் சேரவும் நாகமானது விரைந்து நகர்ந்து போயிற்று. சற்றுத் தூரத்தில் சிங்கம் ஒன்று அவன் மேல் பாய்வதற்காய்ப் பதிவிருந்தது. ஆர்லன்டோ தூக்கத்திலிருந்த மனிதன் தனக்கு மூத்தோனே ஒழிய வேறில்லை என அறிந்தான். அவனை அப்படியே சாகவிடுவது நியாயமேயாயினும் அவனை ரக்ஷிக்க சிங்கத்தோடு போராட நிர்ணயித்தான். சிங்கமானது தூங்குகிற அல்லது செத்த பிராணி எதையும் அண்டுவதில்லை. அது ஆர்லன்டோவைக் கண்டதும் அவன்மேல் பாய்ந்தது. அவன் தன் வாளால் அதை மேற்கொண்டு கொன்றபோதிலும் சிங்கமானது அவனுடைய வலது கரத்தைப் பீறிக் கிழித்துப் படுகாயப் படுத்திவிட்டது.

இத்தருணம் ஆலிவர் விழித்து நிகழ்ந்த விஷயங்களைக் கண்டுணர்ந்து, தனது தோஷங்களை நினைவு கூர்ந்தான். ஆஹா! என் பிதாவின் கட்டளையாவும் துறந்து, என் தம்பிக்கு நிகழ்த்தவேண்டிய கடன் எதுவும் நிறைவேற்றாமல், அவனுக்குக் கல்விப்பயன் கிடைக்கவொட்டாது தடுத்தேன். அவன் இன்னுயிர்க்கே வினை பலகாலும் தேடின பாதகன் என்னுயிரை ரக்ஷிக்க சிங்கத்தை எதிர்த்துக் கொன்ற வீரசிகாமணி அவன் என்பதாய் எண்ணமிட்டுக் கண்

ணீர் சிந்தித் தம்பியிடம் மன்னிப்புக்காய் இரந்து நின்றுன். ஆர்லன்டோ உடனே அவனைக் கட்டித்தழுவிச் சகோதர பாசத்தை வெளியிட்டான். ஆலிவரோ தன் தம்பியைக் கொன்றுலொழிய தனக்கு ஆறுதல் கிடையாதென அவனைத் தேடிக் காட்டிற்கு வந்தவன்.

ஆர்லன்டோவின் காயத்தில் இரத்தம் பெருகி அவனைப் பலவீனப்படுத்தியதால் அதைக் கட்டி வைத்திருந்தான்; கானிமீட் வீட்டுக்கு வழக்கம் போல் போகக் கூடவில்லை. தன் சகோதரன் போய் நடந்த விஷயம் யாவும் அறிவிக்கக் கேட்டுக்கொண்டான்.

ஆலிவர் அப்படியே செய்து தான் செய்த குறைகளையும், ஆர்லன்டோவினிடம் காணப்பட்ட குணங்களையும் எடுத்துப் பேசினுன். சிங்கத்தினுல் ஆர்லன்டோ காயமடைந்தான் என்ற செய்தி கேட்டவுடன் கானிமீட் மயங்கி மூர்ச்சையானுன்.

ஆலிவர் தன் குற்றங்களை உணரும்விதம் நோக்கிக் குணசீலியான அலீனு அவன் மேல் அன்பு கூர்ந்து மிகுந்த அனுதாபம் காட்டினுள். அவனும் அவள்மேல் காதல் கொண்டான்.

கானிமீட் மூர்ச்சை தெளிந்து, தன்னை ஆர்லன்டோ ரோசலின்ட் என்று தன் நேசி பெயரால் அழைத்தபடியால் தானும் ஒரு நேசி நடந்துகொள்ளும் பாவனையாய் நடித்ததாகச் சொன்னுன். ஆலிவர், "சரி நீ ஒரு ஆடவன் என்று நடித்து இனி தைரியமாய் நடந்துகொள்" என்றுன்.

கானிமீட் "நான் அப்படியே செய்து வருகிறேன். நியாயப்படி நான் பெண்ணுய் பிறந்திருக்கவேண்டியது" என்றுன்.

இவ்விதமாய் நெடு நேரம் போக்கி ஆலிவர் திரும்பி வந்தபொழுது நிகழ்ந்த நடபடி யாவும் செவ்வனே விரித்துச் சொன்னான். தான் இடைப் பெண் அலீனா மேல் கொண்ட காதலையும், அதினிமித்தம் தான் அவளை விவாஹம் செய்து அக் காட்டில் இடையனாக வாழ்ந்து தன் பிதாவின் ஆஸ்தி யாவும் ஆர்லன்டோவுக்குத் தத்தம் செய்வதாயும் சொன்னான். அவன் அதற்கு நாளைக்கே அரசர் சன்னிதியில் உங்கள் திருமணம் முடிக்கலாமென்றான்.

இச்சமயம் அலீனாவும், அவள் அண்ணன் கானிமீட்டும் அவ்விடம் வந்தார்கள். ஆர்லன்டோ கானிமீட்டை நோக்கி, என் தமையன் நாளைக்கே அலீனாவை விவாஹம் செய்வதாய் இருவரும் மனம் உவந்திருக்கிறார். அப்பொழுதே என் கல்யாணமும் கூடுமானால் என் சந்தோஷம் நிறைவாகும் என்றான்.

கானிமீட், 'உன் மனப்போல் பாக்கியம் ; உன்னுடைய ரோசலின்ட் என்பவளை நீ நேசிப்பது மெய்யானால் உன் விருப்பம்போலவே நடக்கும் ; நானே அவளை உன் முன்பாக நிறுத்துகிறேன் ; எனது மாமா ஒருவர் மந்திரவாதி இருந்தார் ; நான் அவரிடமிருந்து செப்படி வித்தை கற்றுக்கொண்டேன்' என்றான்.

ஆர்லன்டோ, அடே, நீ சொல்லுவதை நம்பலாமா!

கானிமீட், என் கண் ஆணை ; நீ நம்பு ; நாளைக்கு நீயும் மணக்கோலம் பூண்டு வா : அரசரையும் அவர் தோழரையும்கூட அழைத்துவா : உன் அபேக்ஷை எதுவோ அதுவே முடிவாகும் : ரோசலின்டுக்கு

மணமாலே சூட்ட ஆசிப்பாயானுல் அவள் அங்கே நிற்பாள்.

அடுத்தநாள் ஆலிவர் அலீனு ஆகிய இருவரும் அரசர் சன்னிதி வந்து நின்றனர். ஆர்லன்டோவும் அங்கே நெருங்கி நின்ற மித்திரரில் ஒருவனுய் நின்ருன். கானிமீட் செய்யப்போகும் மந்திர வித்தை எவ்வாறு முடியுமென்று எல்லாரும் விழித்த கண் மூடாமல் பார்த்து நின்ருர்கள். அரசர் என் ஏக புத்திரி, உயிருக் குயிரான கண்ணின் கருவிழி. இங்கே இடைப்பையன் செய்யும் மந்திரத்தால் வரப் போகிருளா, நான் அவளே உச்சிமோந்து உள்ளம் பூரிக் கப் போகிறேனு! என்று பெரும்புயலில் அகப்பட்ட கப்பல்போல் மனம் தத்தளிக்கவிட்டு நின்ருர். ஒவ் வொரு நிமிஷமும் ஒரு யுகமாகத் தோன்றினது. ஆர் லன்டோவைப் பார்த்து "அப்பா, இந்த இடைப் பையன் வாக்கை நீ நம்புகிருயா? ரோசலின்ட் வரு வாளா?" என்ருர்.

அவன் பதில் உரைக்கு முன்னதாகவே கானிமீட் தானே வந்து, அவரைநோக்கி, வேந்தே, உமது குமா ரத்தி இப்பொழுது இவ்விடம் வருவாளாயின் அவளே இந்த ஆர்லன்டோவாகிய வனுக்குக் கொடுப்பீரா? என்ருன். அவர் தடையில்லே என்ருர். பின்பு ஆர் லன்டோவைப் பார்த்து ரோசலின்ட் வந்தால் அவளே விவாஹம் செய்துகொள்வாயா? என்று கேட்டான். அவன் நான் பத்து ராஜ்யங்களுக்குத் தலேவனுய் இருந்தாலும் அவளே மணந்துகொள்வேன் என்ருன்.

கானிமீடும் அலீனுவும் அப்புறம் போய் ராஜ குமாரிகளுக்குரிய உடை தரித்துச் சுயரூபமாய்ச் சபை

முன் தோன்றினூர்கள். ரோசலிண்ட் தந்தையைப் பணிந்து ஆசீர்வாதம் பெற்றுத் தானும் சீலியாவும் வனஞ்சென்று இடையரான வரலாறு யாவும் விரிய உரைத்தாள்.

குறித்தபடி கல்யாணங்கள் நிறைவேற்றி யாவரும் குளிர்ந்த மரங்களின் நிழலில் பந்தி யமர்ந்து விருந்துண்டார்கள். அரண்மனைக் கல்யாணத்திற்குரிய ஆடம்பரங்கள் அக்காட்டில் இல்லாதபோதிலும் ஆநந்தக் கொண்டாட்டம் எவ்வளவும் குறைந்திருக்கவில்லை. விருந்து நடக்கும்போதே தூதன் ஒருவன் ராஜ்யத்தை அபகரித்த மன்னனிடமிருந்து செய்தி கொணர்ந்தான். அதாவது :—

சீலியா காட்டுக்கு ஓடிப்போனதும், நாள்தோறும் மேன்மக்கள் பலர் காட்டுக்கு ஓடி நாடு இழந்து வீடற்றுத்திரியும் அரசரோடுகூடி அவரை மேன்மைப் படுத்தி அரியணைமேல் வீற்றிருந்தும் தன்னை அவமதிக்கும் தன்மையும் அவனுக்கு மனநோவுக்கிடமாயின. ஆகவே சேனைகளைக் கூட்டிப் படையெடுத்துச் சென்று காடுறையும் வீரரைச் சங்கரிப்பதுவே சரியெனத் துணிந்து புறப்பட்டான் : காட்டின் எல்லையில் வந்தபோது தவசி ஒருவர் அவனைக் கண்டு நற்போதனை பலவும் கூறியதால் அவன் மனமாறி நற்சிந்தையடைந்தான் : தருமமே உருவெடுத்தாற்போல் உயர்குணம் யாவும் வாய்ந்த தன் மூத்தோனிடம் சென்று பணிந்து, தனது மீதிநாட்களில் அவருடைய ராஜாங்கத்தில் குற்றேவல்செய்து வரத் தீர்மானித்தான் : மேலும் அவருடைய சுகதுக்கங்களில் நிழல்போல் அவரைவிட்டு இணைபிரியாதிருந்த மெய்த்

தொண்டர் நண்பர் யாவருக்கும் அவாவர் நிலங்களே யும் மற்றும் சொத்துக்களேயும் திரும்ப ஒப்புவிப்ப தாக உறுதிபண்ணினுன் என்பதே.

அரசருக்கு மகளும் மருகனும் ராஜ்யமும் சகோ தானும் ஒருங்கே கிடைத்த பாக்கியத்தோடு, தமது உத்தம நண்பரைச் சன்மானிக்கும் சந்தோஷமும் கிடைத்தது. எல்லாரும் தமது மனே சேர்ந்து இன் புற்று வாழ்ந்தனர்.

## 10. இலக்கணப் பாடம்

### 1. தனிக் குறில்முன் ஒற்று

ஒரு குற்றெழுத்தும், ஒரு மெய்யும் சேர்ந்த பதத்தோடு உயிர் எழுத்தில் ஆரம்பிக்கும் பதம் சேர்ந்தால் மெய் எழுத்து இரட்டிக்கும்.

கல் + எடு = கல்லெடு = கல் + ல் + எடு
நெல் + அள = நெல்லள = நெல் + ல் + அள
மண் + உண்டை = மண்ணுண்டை = மண் + ண் + [உண்டை
வெய் + அம்பு = வெய்யம்பு
மெய் + எழுத்து = மெய்யெழுத்து
கொல் + உலே = கொல்லுலே
பொன் + அம்பலம் = பொன்னம்பலம்

### 2. ல, ள வல்லினத்தோடு கூடல்

அது,

ல வோடு வல்லினம் வந்தால் ற வாகும்
ள வோடு வல்லினம் வந்தால் ட வாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ - ம். | கல் | + சாடி | = | கற்சாடி |
| | முள் | + காடு | = | முட்காடு |
| | நெல் | + பொரி | = | நெற்பொரி |
| | எள் | + செடி | = | எட்செடி |
| | முள் | + செடி | = | முட்செடி |
| | கள் | + குடியர் | = | கட்குடியர் |

### 3. ல, ள முன் த வந்தால் த தானும் மாறுதல் அடையும்

| | | | | |
|---|---|---|---|---|
| உ - ம். | கல் | + தச்சன் | = | கற்றச்சன் |
| | சொல் | + தவறுன் | = | சொற்றவறுன் |
| | எள் | + தின்றுன் | = | எட்டின்றுன் |
| | கள் | + தேடா | = | கட்டேடா |

குறிப்பு : புணர்ச்சி விகாரத்தின் விவரம் அறிந்தால்மட்டும் செய்யுள் வாசித்து அறிந்து சந்தோஷிக்கலாம். வசன நடையிலும் புணர்ச்சி விகாரங்கள் வருவதுண்டு. இந்த விதிகள் அறியாமல் அகராதி தானும் பார்க்க முடியாது.

## 11. தமிழ் நூலாசிரியர்

தமிழ் என்ற பத அருத்தம் 'இனிமை' தமிழ் நூல்களில் கடவுளின் கிருபையைப் புகழ்ந்து கூறும் பாடல்களே பெரும்பாலானவை. கவிஞரும் இறைவன் திருவருளைப் பெற்று, அவராலும், அவரவர் காலத்து மன்னராலும் ஆதரிக்கப் பெற்றதாக அறிகிறோம். அவரில் சைவ வைஷ்ணவ சமய நூலாசிரியரைக் குறித்துச் சில விஷயங்கள் தெரிந்துகொள்வோம். எத்தனை கோடி நாமங்களால் அழைத்தாலும் கடவுள் ஒருவரன்றி மற்றல்ல.

சைவ சமயத்து அடியார்களை நாயன்மார் என்றும், வைஷ்ணவ பக்தரை ஆழ்வார்கள் என்றும் சொல்லுவர். அவர்களிலநேகர் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் இருந்ததாய் மதிக்கப்படுகிறது. அக் காலங்களில் இந்தியாவில் இவ்வளவு மதிப்புக்கான கல்விமான்கள் இருந்தது அதிசயமே.

சைவ சமய கிரந்த கர்த்தாக்களில் விசேஷித்தவர் நால்வர் : திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் என்பவரே. முதல் மூன்று பெயரும் சுமார் இரண்டு இலக்ஷத்து இரண்டாயிரம் பாடல்கள் பாடினதாகச் சொல்வார். திருஞானசம்பந்தர் ஐந்து வயதுச் சிறுவனாயிருக்கும்பொழுது ஒரு சமயம் ஆலயத்தண்டை நின்று அழ, பார்வதி தேவியார் அங்கே தோன்றி ஒரு கிண்ணத்தில் பால் கொடுத்து அவருக்கு ஞானம் ஊட்டியதாய்ப் புராணங்கள் கூறுகின்றன. அன்றுமுதல் அவருக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் பெய

ருண்டானது. அவர் சிவபெருமான் கோயில்கள் உள்ள ஸ்தலங்கள் பலவற்றிற்கும் சென்று சிவபெருமான் புகழைக் கூறிக் கவிகள் சாற்றினர். சைவ சமயக் கொள்கைகளை நிலைநாட்டினர். திருநீலகண்டயாழ்ப் பாண நாயனர் என்னும் பாணர் இவர் அருளிய திருப் பதிகங்களை யாழில் அமைத்து வாசித்தார்.

இவர் காலமே திருநாவுக்கரசு நாயனாது காலம். இவர் ஜாதியில் வேளாளர். இருவரும் நண்பராய் இருந்தார்கள். திருநாவுக்கரசு சுவாமிகளுக்குப் பெற்ருேரிட்ட நாமம் மருணீக்கியார். சிறு பிராய முதலே சமய சாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றில் சமண மதமே மேலானதெனக் கொண்டு அம் மதம் தழுவி யிருந்தார். அவருடைய சகோதரி சைவ மத வைராக்கியமுடையவாராய்த் துறவிக் கோலத்துடன் ஆலயப் பணிவிடை செய்து வருபவள், அதைச் சகியா மல் கடவுளிடம்மன்ருடித் தன் மதத்துக்கே தம்பியைக் கொணர்ந்தாள். சமணர் அவருக்கு விரோதமாய் அரசனை ஏவிவிட்டுச் செய்த துன்பம் யாவும் வியர்த்த மாயிற்று. மருணீக்கியார் 'நாவுக்கரசு' என்னும் புதிய நாமம் கடவுளால் கொடுக்கப்பெற்று, கடவுளைப் போற் றும் பதிகம் பல எழுதினர். இதனல் சமண சமயத்தில் இருந்த பல்லவ ராஜன் சைவனகி ஒரு ஆலயமும் கட்டினன்.

திருநாவுக்கரசு, கடவுளால் விசேஷமான அற் புத அடையாளங்களோடு ஆதரிக்கப்பட்டதாயும், பல அற்புதங்கள் செய்து பலருக்கு நன்மை செய்த தாயும் தெரிகிறது.

'தலையே நீவணங்காய்' என்று ஆரம்பிக்கும் திரு அங்கமாலையும், 'அரியானை அந்தணர்தம் சிந்தையானை' என்னும் கோயில் பெரிய திருத்தாண்டகமும் மற்றும் பல இன்னிசைப் பதிகங்களும் இவர் அருளிச்செய்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் எழுதிய பாடல்களில் சிலதைச் சாதாரணமாய்ப் பிள்ளைகளும் பாடக் கேட்கலாம். திருநாவலூரில் பிராமணகுலத்தில் உதித்தவர். இவரது காலம் மேற்கூறிய இருவரது காலத்துக்குப் பிந்தியது. இவரது கல்யாண தினத்தில் மணக் கோலம் பூண்டு விவாகச் சடங்கு நிறைவேற்றுந் தருணம் ஒரு கிழ பிராமணன் வந்து, நாயனார் தமக்கு அடிமையென்று வாதாடிக் கல்யாணத்தை நிறுத்தினார். அவர் சிவபெருமானென்று அறியாமல் அவரைப் 'பித்தா' என்று இகழ்ச்சி செய்த நாயனார், விவரம் அறிந்தபின் சீர் தொண்டனாகி ஸ்தலங்கள்தோறும் சென்று பதிகம் பாடி வரக் கட்டளை பெற்று அப்படியே செய்தார். அவர் பெருமானை 'பித்தா' என்று சொன்னதை நினைத்து வருந்தி, 'பித்தா பிறைசூடி' என்று ஆரம்பித்துத் தமது முதல் பதிகம் பாடினார். 'மற்றுப் பற்றெனக் கின்றி' என்று ஆரம்பிக்கும் பதிகமும், 'பொன்னார் மேனியனே' என்று ஆரம்பிக்கும் பதிகமும், இன்னும் பல பாடல்களும் இவர் அருளியவை.

மாணிக்கவாசகர் என்னும் பெரியார் பாண்டிய அரசன் சமுகத்தில் உழைத்த பிரதானிகளில் ஒருவர். கடவுளின் திருப்பணி விடைமேல் காதல்கொண்டு இராஜாங்கப் பொக்கிஷங்களை அடியார் பணிவிடைக்கும் ஆலயச் சேவைக்கும் செலவிட்டதின் பேரில்

மன்னன் கோபப்பட, கடவுள் அவரை ரக்ஷித்தார். அப்புறம் அரண்மனை உத்தியோகம் துறந்து இறைவன் பணிமேற் கொண்டு பல இடங்களுக்கும் போய்த் திருப்பாடல்கள் எழுதினர். சோழமன்னன் சபையில் பாடி அவனது ஊமைப் பெண்ணைப் பேசவைத்தார். சிவபெருமான் தாமே ஒரு அந்தண வடிவுடன் அவரிடம் வந்து அவர் பாடல்களைத் தொகுத்து அதற்குத் திருவாசகம் என்று பெயர் வைத்தார். மேலும் அவர் திருக்கோவையார் பாடக் கேட்டு அதைத் தாமே எழுதிக்கொடுத்தார். இவர் பெருமை கூற லாகுமோ.

'பூசுவதும் வெண்ணீறு'

என்ற பாடல்களும்,

'முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை'

என்ற பாடல்களும் இவர் எழுதியவைகளே.

சிவபெருமானின் தோற்றத்தையும் அன்பையும் பல பாடல்களில் கூறியுளார். அவாது சேவையால் கிடைக்கும் இன்பம் பெரிதென்பது இவரது கருத்து.

வைஷ்ணவப் பெரியாருடைய பாடல்களில் விஷ்ணுவின் கருணைப் பிரவாகமும், அவர் அவதாரங்களின் மகத்துவமும் கூறப்படுகிறது. வைஷ்ணவ நூலாசிரியரில் சிறந்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவரை அடுத்த அந்தஸ்துள்ளவரை ஆச்சாரியர் என்பார். இவர்கள் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவர். ஆயினும் இவர் செய்த கவிகளின் சொல் நலமும் பொருள் ஆழமும் மதிப்பிற் கடங்கா. அவற்

றைக் குறித்து சிற்சில குறிப்புகளை மட்டுமே இங்கு கவனிப்போம். இவர்களில், பெரியாழ்வார் பிராமண குலத்தில் பிறந்தவர். சிறு பருவமுதல் விஷ்ணு பக்தியில் முதிர்ந்தவர். ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஒரு நந்த வனம் உண்டாக்கி, அதில் பூவெடுத்து, அங்குள்ள பெருமாளுக்கு மாலை சாத்திவரும் வழக்கம் அவருக் கிருந்தது.

ஒரு சமயம் மதுரைக்குச் சென்று அரசன், புலவர் சபை முன் சிறந்த கவிகள் பாடிப் பொற்கிழி பரிசு பெற்று வந்து அப் பொருளால் ஸ்ரீ வில்லி புத்தூர் கோபுரம் கட்டினுர்.

அவருடைய கவிகளில் மஹாவிஷ்ணுவின் பல அவதாரங்களில் நடப்பித்த செயல்களைக் கூறிப் புகழ் கிருர். முதல் திருமொழி முதல் பத்து என்ற பகுதியில் கண்ணன் பிறப்பையும், அவர் குழந்தைப் பிராயத்து லீலைகளையும் கண்ணில் கண்டவர் போல் கூறுகிருர். அவருடைய தாலாட்டுக் கவிகளில் இரண்டு கேட்போம்.

மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப் பொன்னுல் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந் தான்
மாணிக் குறளனே ! தாலேலோ
வையம் அளந்தானே ! தாலேலோ !

உடையார் கண்மணியோ டொண்மா துளம்பூ
இடைவிரவிக் கோத்த வெழிற் றெழுகினேடும்
விடையேறு காபாலி ஈசன் விடுதந்தான்
உடையாய் அழேல் அழேல் தாலேலோ
உலக மளந்தானே தாலேலோ.

(மாணிக் குறளன் - கல்யாணமாகாத குறள் வடிவானவன், வையம் அளந்தோன்-மூன்று உலகங்களையும் அளந்தவன், எழில் - அழகு மிகுந்த, விடையேறு - காளை வாகனமேறி. காபாலி - மண்டை ஓட்டை ஏந்தினவன் - சிவன்.)

பெரியாழ்வார் தோட்டத்தில் ஒரு பெண் மகவு கிடக்கக் கண்டு அவர் எடுத்து வளர்த்து ஆண்டாளெனப் பெயரிட்டார். அவள் அழகிலும், அறிவிலும், அன்பிலும் சிறந்து விளங்கினாள். பல கவிகள் பாடிக் கிருஷ்ணமூர்த்தியைத் தோத்தரித்தாள். பின்பு அவரையே விவாகஞ் செய்ய விரும்பிக் கனவு கண்டாள். விஷ்ணு விக்ரஹத்துக்குச் சாத்த வைத்திருந்த மாலைகளைத் தான் சூடி அந்தரங்கமாய்க் கழற்றி வைப்பாள். கடைசியில் கடவுளோடு கலந்து மறைந்தாள். இவள் பாடிய திருப்பாவை, 'வாரணமாயிரம்' என்ற பாடல்களில் இவளது இன் சொல் பெருமை காணலாம்.

ஆண்டாளுடைய கனவைக் கேட்போம் :

நாளைவதுவை மணமென்று நாளிட்டுப்
பாளைகமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரிமாதவன் கோவிந்தனென்பான் ஓர்
காளைபுகுத கனாக்கண்டேன் தோழிநான்.

இந்திர னுள்ளிட்ட தேவர்குழா மெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழிநான்.

பந்தல்போட்டு, பலவிதமாய் அலங்கரித்து, மணமகன் கிருஷ்ணபிரான் வரவும், தேவேந்திரன் முத

விய தேவர்கள் வந்து பெண் பேசி, மந்திரங்கள் சொல்லி விவாகச் சடங்கு நிறைவேற்றுதலாகவும் கனவு கண்டான்.

பெருமாள் விக்ரஹத்திற்குச் சாத்தும் மாலைகளைத் தான் முந்தி அணிந்ததுபற்றி அவளைச் சூடிக் கொடுத்த நாச்சியார் என்பார்கள்.

குலசேகரர் தமது ராஜ்யபாரத்தையும் துறந்து விஷ்ணு ஸ்தலங்கள்தோறும் திரிந்து பெருமாளை வாழ்த்தினர். பற்பல காலங்களில் இடங்களில் நடந்த பெருத்த லீலைகளை மிகவாய் எடுத்தேத்துகிறார். தாம் திருவேங்கட மலையில் விஷ்ணுவின் வாகனமான கருடனாய் அல்லது சோலையின் தடாகத்து மீனாய், இருந்தால் போதும்; அல்லது அவருக்கு எச்சல்படிக்கம் பிடித்து நிற்பேன்: ஆறாய், பாதையாய், பஹவான் வாழும் திருவேங்கட மலைமேல் கிடந்தாலும் நலம் என்று கூறுகிறார். ராமர் குழந்தைப் பருவத்தைப் பாராட்டி அவருக்குக் கௌசலை பாடியிருக்கக் கட்டிய தாலாட்டு ஒன்று நீலாம்புரி ராகத்தில் பாடப்படுகிறது. ராமரைச் சக்கரவர்த்தி வனத்திற்கு அனுப்பிவிட்டுப் புலம்பிய பாடல்களைக் கேட்ட எவரும் முன்னாள் தசரதரும் அயோத்தி மாந்தரும் அழுதவாறே மெய் மறந்து கண்ணீர் சிந்துவார்.

குலசேகர ஆழ்வார் சேரதேசத்து அரசன். பாண்டிய சோழ மன்னரை ஜெயித்தவன். பிற்காலங்களில் விஷ்ணு பக்தி மூண்டவராய் ராமகிருஷ்ண அவதாரங்களின் பேரில் இனிய பாடல்கள் பாடிப் போற்றியிருக்கிறார்.

தமிழ்ப் புலவர் பெருமைகூற நம்மால் ஆகுமோ ஆகாது ஆகாது.

மேற்கொண்ட குரவரன்றி, கடவுள் ஒருவரே என்ற கொள்கையுடைய பெரியோர் செய்த கவி நூல்களும் வசன நூல்களும் மதிப்பிற் கடங்காதவை உள. அகநானூறு, புறநானூறு, நற்றிணை, நாலடியார் போன்றவை பல பெரியாருடைய உரை ஒன்ருய்ச் சேர்த்து அமைந்தவைகளாம். அவைகளை வாசிக்க விரும்பும் தமிழ் மக்கள் இலக்கண விதிகள் சில தெரிந்திருப்பது அவசியம்.

அச்சுயந்திரம் உபயோகத்தில் வராத காலச் சுவடிகள் பல அழிந்து பல அருமையான தமிழ் நூல்கள் மறைந்துவிட்டன.

## 12. டில்லிமாநகரும், ஷாஜஹான் சக்கரவர்த்தியின் மாளிகைகளும்

வட இந்தியாவில் கங்கையாற்றின் கரையில் பெருமை வாய்ந்த பல நகர்கள் பல வளங்களும் நிறைந்தவைகளாய் நிலைபெற்றிருப்பினும் தேசத்தின் ராஜதானியாக முகம்மதிய சக்கரவர்த்திகள் டில்லியைத் தெரிந்து கொண்டார். அதுவோ யமுனை ஆற்றின் கரையில் நீர்வளம் குன்றியதும் வெயில் காலம் குடியிருக்கத் தகாததுமான பூமியில் அமைந்திருக்கும் விந்தை பெரிது. அது இந்திய முகம்மதிய ஆங்கில ராஜாங்க ஸ்தானமாயிருப்பதற்கும் நியாயங்கள் உண்டு.

டில்லி பார்த்தவருக்கு மூன்று காரியங்கள் மகா விநோதமாய்க் காணப்படும் 1. இடிந்து கிடப்பதும் சீர் சிறப்புடன் நிற்பதுமான கோட்டை கொத்தளங்கள், மசூதிகள், அரசர் மந்திரிமார் பெரியோரின் கல்லறைகள் 2. கடைகளின் பெருக்கமும் அவற்றில் விற்பனையாகும் பொருள்களின் மிகுதியும் 3. புது டில்லி என்னப்பட்ட தற்கால ராஜாங்கத்தாரின் ஆரவாரத்தை யடுத்த மாளிகைகள், அவைக்களங்கள், அரச பெருமான்களின் மாளிகைகள் நெருங்கிய வீதிகள், கல்விக் கழகங்கள், ஆகாயக் கப்பல்களின் ஆர்ப்பாட்டம் முதலியன.

டில்லிமாநகரை அடுத்த பூமி நிலவளம் பொருந்தியதாயினும் ஆங்காங்கு நீர்ப் பசையற்றுப் பசும் புல்லுக்கும் பஞ்சமான மேடுகளும் உள. ஆகிலும் ரெயில்வண்டி விட்டு இறங்கினவுடனே பிரயாணி காணக்கூடிய காட்சி எதுவும் நகரின் செல்வத்திற்கு அறிகுறியாகும். எட்டுத் திசையினு மிருந்துவரும் வண்டித் தொடர்கள் அங்கே சந்திக்கின்றன. அவற்றில் ஒன்று பம்பாய் நகரிலிருந்தும், ஒன்று கல்கத்தாவிலிருந்தும், மற்ருென்று பஞ்சாபிலிருந்தும் வந்து சேருகின்றன. ஏற்றுமதி, இறக்குமதி பொருள்கள் மதிப்பிற் கடங்காதவை. நகரை எட்டிப் பார்த்தாலே பல காரியங்கள் அறியலாம். நகருக்கு வெளியே பல புகைப் போக்கிகள் தலை நிமிர்த்தி நின்று புகைவிட்டு, வேலை நடக்கிறதைக் காட்டுகின்றன. அங்கே சர்க்கரை செய்கிருர்கள். பஞ்சு நூல் வேலை ஆகிறது. மாவு அரைக்கிருர்கள். இன்னும் பல வேலைகள் நடப்பதை பெருத்த மாளிகைகளின் விமானங்கள் காட்டுகின்றன.

கடைகள் அநேகம். அவற்றில் அலங்காரமாய்ப் பரப்பிக் கிடக்கும் பொருட்கள் மனிதரை அவ் வழி நடக்க விடாது. லட்டு, சிலேபி, மிட்டாய், பால், காப்பி வீதிகள்தோறும் கொண்டு திரிகிறார்கள். சிறுபையன்கள் மின்சாரத் தீவட்டிகள், கண்ணாடி சாமான்கள், பாத்திரங்கள், சோப் தினுசுகள், பட்டு நாடா, சொக்காய்கள் வீதியில் பரப்பி வைத்து விற்கிறார்கள். பெரிய கடைகள் பல இலக்ஷ ரூபாய் பெறுமான பொருட்கள் வைத்து நெருங்கி யிருக்கும் நீண்ட கடைத் தெருவின் விவரம் கூறலாகுமோ! பொன், வெள்ளிச் சரக்குகள், மரவேலை, தந்தவேலைகள், பட்டு, சரிகை வேலைப்பாடான ஜவுளிக் கடைகள், ஆடவருக்கும், பெண்களுக்கும் ஏற்ற அலங்காரமான பாதரக்ஷைகள் வைத்து விற்கும் விதம் ஆச்சரிய மானது. நார் வேலைப்பாடான சாமான்கள், சாயம் பூசிய பெரிய மண் பாண்டங்கள் நயமாய்க் கிடைக்கும். கைவேலையில் தேர்ந்த தொழிலாளரின் இருப்பிடமாக டில்லியை மதிப்பது நியாயம்.

தந்தசாமான்களும், சித்திரந் தீர்த்த மரசாமான் களும் விற்கிற கடை ஒன்றுக்குள் போகலாம். கடை யில் ஒரு பக்கம் இவ்வேலைகள் செய்கிறார்கள். ஒவ் வொரு பொருளிலும் அதன் கிரயம் குறித்த சீட்டு தொங்குகிறது. அரசர்பிரயாணச் சுமைகாரனான (தந்த) யானை ஒன்று சுமை ஏற்றி நிற்கிறது. ஒரு கூடாரம் அதற்குரிய சாமான்கள், பெட்டிகள், யானை மேல் ஏறி இறங்க ஒரு ஏணி; எல்லாம் தந்தவேலை!! கிரயம் ரூபாய் 10,000 (பத்தாயிரம்). இதை அடுத்து ரூபாய் 5 வரை உள்ள பல தரமான தந்தசாமான்களும்,

மரச் சாமான்களும் நிரப்பியிருக்கின்றன. ஐரோப்பிய வியாபார வீடுகளின் விவரம் சொல்ல அவசியமோ!

ராஜ பிரதிநிதி துரையின் மந்திரமும், சட்ட பரிபாலன சபைகூடும் மாளிகையும் தமக்குத் தாமே உவமையான கட்டடங்கள், $14\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிட்டுக் கட்டப்பட்டவைகள். இவற்றை அடுத்து நிற்கும் மாளிகை யாவும் மிக்க ஒழுங்காய் அமைந்த புதிய வீடுகள் அரசர் பிரபுக்களான பெருஞ் செல்வரைச் சேர்ந்தவை. ராஜாங்க பிரதானிகள் பலர் அவற்றில் வாழ்கிறார்கள். இக் கட்டடங்கள் இருக்கும் புது டில்லி நகர் 25 சதுர மைல் விஸ்தீரணமாகும்.

நமது பிரதான நகரங்களில் இருப்பதுபோல் டில்லியிலும் பலவிதக் கலைகளும் பயிலும் கலாசாலைகள் இருக்கின்றன. அரபிக் பாடசாலை, வர்த்தகப் பாடசாலை, சர்வகலாசாலை, ஹார்டிஞ் பெருமாட்டியார் வைத்திய பாடசாலை அவற்றில் முக்கியமானதாக மதிக்கலாம். பிந்தியது ஸ்திரீகளுக்காய் ஏற்பட்டது. அதில் பிராமணர், இதர இந்துக்கள், முகம்மதியர், கிறிஸ்தவர், பார்ஸிகள், சீக்கியர் முதலான சகல வருணத்தாரான மாதரும் வாசிக்கிறார்கள்.

முற்காலங்களில் வானஜோதிகளைக் கொண்டு காலங்களைக் கணிக்க நிரூபிக்கப்பட்டு, தரைமேல் அமைந்து உள்ள வேலைப்பாடுகளைக் கண்டோர் அதிசயிப்பார். அக் காலங்களில் தூரதிருஷ்டிக் கண்ணாடி இல்லை. நாள்தோறும் இந்த அருமையான வேலைப்பாடுகளைப் பார்க்கப் போவோர் மகிழும்படி அவை மல்லிகை ரோஜா முதலான அருமையான புஷ்பங்கள் நிறைந்த ஒரு தோட்டத்தில் இருக்கின்றன.

நகரைச் சுற்றி மிகுதியாய்க் காணப்படுகிற பெரிய கல்லறைகளை எண்ணித் தொகையிடுவது கஷ்டம். அவைகளில் முதல்தரமானவைகள் நல்ல பூங்காவனங்களில் இருப்பதாலும் கட்டட மகிமையாலும் வேடிக்கை விநோதமாய்ப் பொழுது போக்க விரும்புவோரின் கூட்டங்களை அனுதினமும் அங்கே காணலாம். ஒருக்காலும் வெளியே போகக்கூடாத அந்தப்புர மாதர் தாமும் ஒரு அன்புள்ள சகோதரன் அல்லது கணவன் தயவால் வெளிப்பட்டு அங்கே போய் ஒரு பகல் ஆனந்தமாய்ப் போக்குகிறார்கள்.



டில்லியை அடுத்துள்ள கோட்டைகள் கவனிக்கத்தக்கவை. ஷாஜஹான் சக்கரவர்த்தி கட்டின கோட்டையும் அதனுள் இருக்கும் மகிமையான அரண்மனையும் மகாவிசேஷமானவை. கோட்டைமதிலும், நகரைச் சுற்றியுள்ள மூன்றேகால் நீளமான மதிலையுமேகொண்டு சக்கரவர்த்தி பெரிய சிற்பி என சாட்சிபகரலாம். அவன்

பாட்டனர் அக்பர் சக்கரவர்த்தி கட்டின சிறந்த மாளிகைகள் பல இன்னும் பூரண அலங்காரத்துடன் ஆக்ராவிலும் பேட்பூர் சிக்ரி என்ற இடத்திலும் இருக்கின்றன. பின் சொன்ன இடத்தில் சக்கரவர்த்திக்குப் பிரியமான குருவின் சமாதியிலும் மற்றும் சில பிரதானிகள் சமாதியிலும் பல வருணக் கற்கள் பதிந்த சித்திர வேலைப்பாடுகளுடன் வெண் சலவைக் கல்லால் ஆன அரிய வேலைப்பாடுகள் கவனிக்கலாம். ராஜாங்கச் சோலிகளை அடுத்த வீடுகள் நாணயம் முத்திரிக்கும் இடம், யானைகளின் கட்டுத்தறி, கொலுமேடைகளாகிய அருமை வாய்ந்த கட்டடங்கள் அவரது வாழ்வின் தன்மையைக் குறிக்கின்றன. தண்ணீர் கஷ்டத்தினிமித்தம் அக்பர் பாதுஷா சிக்ரியைவிட்டு ஆக்ராவில் குடியேறினர். அங்கே அக்பர் ஆரம்பித்த கோட்டையை ஜிஹாங்கிர் சக்கரவர்த்தி முடித்தார். இவர்கள் கட்டின மசூதிகள் மாளிகைகள் அபூர்வ வேலைப்பாடு மதிப்பிற் கடங்கா. ஷாஜஹான் சக்கரவர்த்தியின் வேலைகளோ அவர் பிதா, போன் வேலைகளைவிட மிகவும் மேன்மையானவை.

டில்லிமாநகர் படையெடுத்த பகைவர் கையில் சிக்கிச் சின்னப்பட்டு ஆறு தடவை இடம் மாற்றிக் கொண்டதாய்ச் சரித்திரம் கூறுகிறது. ஆகவே ஜெய ஸ்தம்பங்களுக்கும் இடிந்து நொறுங்கிக் கிடக்கும் கோட்டைகள் ஆலயங்கள் அரண்மனைகளுக்கும் என்ன குறை! யுத்தங்களைக் குறித்தும், வெற்றி வேந்தரைக் குறித்தும் தோற்றுச் சின்னப்பட்டு ஓடின படைகள் வீரரைக் குறித்தும் கதைகள் சரித்திரப் புஸ்தகங்களில் நிறைய உண்டு. ஏடு கொள்ளாமல் நிறுத்திவிட்ட விஷயம் மிகுதி.

ஷாஜஹான் சக்கரவர்த்தி கட்டின கோட்டை மட்டும் சகல ஆபத்துக்கும் தப்பி ஆங்கிலேய அரசாட்சியாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் செல்வச் சிறப்பெல்லாம் கூட்டிப் படம் எழுதிக் காட்டின மாதிரி விளங்கும் திருமாளிகைகளின் வேலைப்பாட்டை என் சொல்வது! தளமும், சுவரும், சலவைக் கல்! சித்திரமெல்லாம் தங்கமும், வைரக் கற்களும் பதியப் பெற்றவை! பாரசீகரும், மஹாராட்டியரும்,



வேறு மனிதரும் பல தரம் கொள்ளையிட்டும் இன்னும் மங்காப் புகழுடன் நிற்கின்றன. சக்கரவர்த்தியின் நியாயாசனம், ஆலோசனை மந்திரம், வீரர் கூடுமிடம் எல்லாம் மகா விஸ்தாரமான கூடங்கள். அந்தப்புரமும், சக்கரவர்த்தி இளைப்பாறும் இடங்களும் சகல சுகங்களும் அடங்கியவை. "பூலோக மோட்சம் ஒன்று உண்டாயின் அது இதுவே, இதுவே" என்று வாசல் மேல் எழுதியிருக்கிறது. அரண்மனைக்குள் வெயி

வின் கடுமை வராதபடி குளிர்ந்த ஜலம் ஓடிக் கொண்டு இருக்கும்படி சிறு கால்கள் தளத்தின் மேல் அமைத்து, அவற்றின் விளக்குமாடங்களில் இரவில் தீபங்கள் ஏற்றி, ஆனந்தக் காட்சியும் காட்டி யிருக்கிறார். ஓர் இடத்தில் தொட்டியில் பன்னீர் ஊற்றி அது ஸ்தம்பமாய் எழும்பிப் பாய விட்டு மாளிகை முழுவதும் பரிமளிக்க செய்திருக்கிறார்.



மொகலாய கட்டடம் எதுவானாலும் வாசம் கமழும் பூந்தோட்டங்களால் சூழப்பெற்று இருக்கிறது. அக்பர், ஜிஹாங்கீர் மன்னர் கட்டடங்கள் சந்தன நிற மான கற்களால் கட்டப்பட்டவை. ஷாஜஹான் கட்ட டங்கள் பெரும்பாலும் சலவைக் கல் மாளிகைகள், நிகரற்றவை.

## 13. ஜீவராசிகளின் சரித்திரம்

இப் பூமியானது முன்னுளில் சூரியனிலிருந்து தெரித்து விழுந்த அக்கினிமயமான துண்டு. அது பின் திரண்டு உருண்டையாகிக் குளிர்ந்து கடல்கள் உண்டாகி, பின்பு புல்பூண்டு பூச்சிகள் உண்டாயின வென்று மேதாவிகள் கூறுகிறுர்கள். சிறு பூண்டுகள் விருத்தியாகி, அநேக ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் பெரிய மரங்கள் உண்டாயின. கோளம் முழுவதும் பெருங் காடுகளால் நிறைந்தது.

ஜீவப் பிராணி வர்க்கம் உண்டாகத் தலைப்பட்ட போது முதலாவது ஓர் அணு உயிர் ராசிகளே இருந் தன. அவற்றிலிருந்து எலும்பில்லா அற்ப உயிர் வர்க்கம் உண்டாகி, காலில்லா ஊர்வனங்கள் வந்து, பக்ஷி ஜாதிகள் உண்டாகி, பின்பு நாலுகால் மிருக ஜாதிகள் உண்டாகிக் கடைசியாக மனிதன் நிகரற்ற தத்துவங்களுடன் உதித்ததாக மேதாவிகள் யூகிக்கி ருர்கள். இதற்குள் பலகோடி வருஷங்கள் கடந்தன.

இந்த மகா அதிசயங்களைக் குறித்து இன்னும் கொஞ்சம் பேசலாம். அக்கினிக் கோளமாய் ஒருக் கால் இருந்த இப் பூமி மிகவும் குளிர்ந்து அக் குளிருக் கேற்ற பிராணிகளுக்கும் செடிகொடி மரங்களுக்கும் இடமாய் இருந்தது. உஷ்ணம் அதிகரித்தபின் அவ் வித உயிர் ராசிகள் இருந்த அடையாளமும் மறைந்து வேறு பல ஜாதிகள் பூமியை நிரப்பி வாழுகின்றன. பூர்வ காலத் தாவரத்தின் தன்மையை, பூமிக்குள்ளி ருந்து தோண்டி எடுக்கும் நிலக்கரியிலிருந்து யூகித் துப் பேசுகிறுர்கள். அப்படியே பண்டை காலத்துப்

பிராணிகளின் சரித்திரம்கூற அவற்றின் எலும்புகள் பல இடங்களிலும் கிடைக்கின்றன. விசேஷமாய் சிபேரியா போன்ற உறைபனி மூடிய தேசங்களில் எடுக்கிறார்கள்.

நமது நாட்களில் நமது கட்புலன்களுக் கெதிரில் நடக்கும் மாறுதல்களைப்பற்றிக் கவனிப்போம். இவை மாங்கொட்டை முளைக்கப் போட்டுச் சற்று நேரத்தில் பூவும் காயும் கனியும் காட்டுகிற மந்திரவாதியின் வித்தைக் கொப்பாய் சில வருஷங்களுக்குள் சாஸ்திர நிபுணரின் சமர்த்தால் உண்டானவைகளாகும். கல்வி மலிந்த தேசங்களின் அபிவிருத்தி கூறுவது அரிது. மலர், கதிர், கனி, கிழங்கு, தண்டு எல்லாம் பெரிதாய் மிகுந்த பலன் கொடுக்க வகை தேடிவிட்டார்கள். வருணங்கள் மரத்துக்கும் புஷ்பத்திற்கும் இஷ்டம் போல் ஏற்படுத்துகிறார்கள். அதிகப் பலன் தரும் வித்துக்களை விருத்தி செய்து பயன் குறைவான ஜாதி வித்துக்களைச் சோவிடுகிறார்கள்.

அதிமதுரமான ஒட்டுக் கனிகள் மனுஷனின் நன்முயற்சிக்கும் அதன் பலாபலனுக்கும் அடையாளம். அவ்விதமே மிருகங்களிலும் மனிதனுடைய நுண்ணறிவால் உபயோக மற்ற பல ஜாதிகள் அழியவிட்டு காரியத்திற்கான புது ஜாதிகள் அபிவிருத்தி யடைந்து வருகின்றன. பசு, மீன், குதிரை, நாய், கோழி, ஆடு, கோவேறு கழுதை போன்ற மனுஷ உயிருக்கு உதவியான ஜந்துக்கள் மிகவும் தேர்ச்சியடைந்து வருகின்றன. எப்படியெனில் சாஸ்திர வல்லார் முயற்சியால் மாடு அதிகப் பால் கறந்து உதவுகிறது. கோழி வருஷத்தில் 300-க்கு அதிகமான முட்டை யிடுகிறது.

னாய் அழகாயும் புத்திசாலியாயும் இருக்கிறது. ஆடு பல குட்டி ஈன்று உதவுகிறது. ஆப்பிள், ஆரஞ்சி, வாழை, மா, பலா, போன்ற பலவகை மரங்களின் கதையும் அதுவே.

மனிதனுடைய சகாயமும் விரோதமும் கவனிக்காது உயிர் வாழும் சில பிராணிகளின் ஆச்சரியமான ஜீவியம் இப்போது கவனிக்கலாம். அவைகள் பலுகிப் பெருகும் வரலாறும், சிற்றுயிர் ஜீவிகளாய் இருந்தாலும் உயிர் எவ்வளவு அழுத்தமாய் பெற்றிருக்கின்றன என்றும் பார்ப்போம்.

ஆகாயம் நிலம் நீரில் வாழும் சிற்றுயிர் ஜீவகோடிகள் அணுதரிசி என்னும் அற்புதமான ஆயுதத்தின் சகாயத்தாலன்றிப் பார்க்கமுடியாத அவ்வளவு சிறிய உருப்பெற் றிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் இரண்டாகிக் கொண்டே இருப்பதால் ஒரு கணப் பொழுதில் ஒரு பூச்சியிலிருந்து லக்ஷக்கணக்கான ஜீவிகள் உண்டாகின்றன.

சில கிருமிகளில் ஒரு விசேஷம். ஒரு கிருமியை இரண்டு துண்டாக்கினுல் இரண்டும் உயிர் நஷ்டமடையாமல் வாலில்லாத் துண்டத்துக்கு வாலும் தலையில்லா முண்டத்துக்கு ஒரு தலையும் சொற்பகாலத்தில் உண்டாகின்றன. பல்லியை என்ன சொல்லலாம். தன் உயிருக்கு ஆபத்து நேர்ந்ததாய் அது நினைத்தாலும் கூட வால் அறுந்துபோகும். சில நாட்களில் வால் வளர்ந்து பல்லியின் விசாரம் நீங்கும்.

அதிதீவிரமாய் சந்ததி விருத்தி பண்ண விருப்புள்ள சில ஜாதிக் கிருமிகளுக்குச் சரீரத்தின் எல்லாப்

பாகங்களினின்றும் குஞ்சுகள் வெளிப்பட்டுக் கிருமியைப் பெரிய குடும்பஸ்த னாக்குகின்றன.

கடல் ஸ்பஞ்ச் பார்த்தீர்களா. அது உயிரோடு இருக்கும்பொழுது அதை இடித்து அரைத்து நெருக்கமான துணியில் வடிகட்டினாலும் கீழ் இறங்கின ஜலத்தில் உள்ள ஜீவ அணுக்கள் ஒன்று சேர்ந்து சற்றும் விசாரமின்றி ஒரு புதிய ஜீவியாகி வளரத் தலைப்படுகிறது.

ஜீவகோடிகளில் காணும் மகிமை அளவிட நம்மால் ஆகாது.

## 14. கப்பல் செல்லும் கால்வாய்கள்

தண்ணீர் போக்குவரத்திற்கு மகா அருமையான சாதனம் என்பது எவரும் அறிந்த விஷயம். கப்பல் செல்லத் தக்க ஆறுகள் மிகவும் உபயோகமானவை. தற்காலக் கப்பல்கள் பருமனிலும், வேகத்திலும் மிகச் சிறந்தவைகள். முன்னோர் உபயோகித்த படகுகளை இவற்றோடு ஒப்பிடல் கூடாது. ஆதலின் தற்கால வல்லவர்கள் தொன்றுதொட்டு வழங்கி வந்த நீர்ப் பாதைகளில் கோணலானதை நேராக்கி, மேடானதை ஆழமாக்கி, இல்லாத இடங்களில் கால்வாய்கள் வெட்டிக் கையாளும் விதம் அற்புதம். அவ்விதக் கப்பல் கால்வாய்கள் அமெரிக்காவில் சுப்பீரியர் ஹியூரன் ஏரிகளுக்கு இடையிலும், ஈரி ஒன்றாரியோ ஏரிகளுக்கு இடையிலும் இருக்கின்றன. தென் அமெரிக்காவுக்கும், வட அமெரிக்காவுக்கும் இடையில் பனமா கால்

வாய் இருக்கிறது. இங்கிலாந்தில் மெர்சி நதியைத் தோண்டி ஆழமாக்கி நோக்கி மான்செஸ்டர் கால்வா



கொரிந்த் கால்வாய்

யாக்கினார்கள். ஜெர்மனியர் வட கடலையும், பால்டிக் கடலையும் ஒட்டும்படி கீல் கால்வாய் தோண்டினார்கள்.

பின்லன்ட தேசத்தில் இப் பெயர் கொண்ட வளைகுடாவையும், உள்நாட்டு சைமா ஏரிகளையும் இணைக்கக் கால்வாய்; கொரிந்து பூசந்தி ஒரு கால்வாயாகி யிருக்கிறது. செங்கடலுக்கும் மத்தியதரைக் கடலுக்கும் இடையில் சூயஸ் கால்வாய். இவை முக்கியமானவை. வேறு பல ஆங்காங்கு இருக்கின்றன. இவையெல்லாம் மின்சார சகாயத்தால் வெட்டப்பெற்று வேலை நடப்பவை. இன்னும் எப்படிப்பட்ட கால்வாய்கள் ஏற்படுமோ!

மேற்கண்ட கால்வாய்கள் விஷயமாய் கவனிக்கக் கூடிய சில குறிப்புகள் உள. கொரிந்த், பனாமாக் கால்வாய்கள் பாறைகளை வெட்டி கப்பல பாதையானவை! சூயஸ் மணலில் தோண்டப்பட்டது. வனந்தரக் காற்றும் மணலும் சேர்ந்தால், முடியாத வேலை உண்டோ? இதைக் காப்பாற்றி சதா கப்பல் ஓடிக்கொண் டிருக்கும்படி வைத்திருப்பது பெருத்த சோலியன்றோ! கால்வாய்களில் மண்சேர்ந்து ஆழம் குறைவுபடாதபடி மண் எடுக்கும் ஆயுதங்கள் அவற்றில் வேலை செய்கின்றன.

இன்னுமொரு பெரிய தொல்லை ஏற்படுவதுண்டு. அதாவது கால்வாய் இணைக்கும் பாகங்கள் ஏறத்தாழ இருப்பதால் வரும் கஷ்டம்தான். அமெரிக்காவின் சுப்பீரியர் ஏரி லாரன்ஸ் நதியைவிட மேட்டிலிருக்கிறது. இவற்றிற் கிடையில் கால்வாய் ஏற்பட்டால் கப்பல் மேடு ஏறுமா? அப்படியே பின்லாந்து குடா பள்ளம், சைமா ஏரிகளி னிருப்பிடம் மேடு. அப்படியே பனாமாக் கால்வாயிலில், அட்லான்டிக் சமுத்திரம் மேட்டிலும் பஸிபிக் மகாசமுத்திரம் பள்ளத்திலும் இருக்கின்றன. ஆகவே போக்குவரத்துச் செய்

யும் பிரமாண்டமான கப்பல்களைப் படி ஏற்றி விடவும் இறக்கிவிடவும் செய்துள்ள ஒழுங்குகள் சிந்திக்க ஒண்ணுச் சிறப்பானவை. 'லாக்' என்னப்பட்ட ஒழுங்குப் படி ஆங்காங்கு ஜலத்தை அவசரத்துக்கு ஏற்ற ஆழமாக்கி கப்பல் அதில் மிதந்து கடந்துபோன உடனே ஜலத்தை வடிய விடுவது ஒரு உபாயம்.

சில இடங்களில் தொட்டியில் ஜலம் பெருக்கி, கப்பலை அதில் மிதக்கவிட்டு அத்தொட்டியையும் கப்பலோடு தூக்கி மேடு ஏற்றி விடுகிறுர். இதனுல் காலதாமதமின்றி கப்பல் செல்லுகிறது. ஒரு சமயத்தில் 60 அடி 65 அடி கூட கப்பலைத் தூக்கி விடுகிற அதிசயம் பெரியதன்றே.

பனமாக் கால்வாய் தற்காலம் உலகத்தில் உள்ளவற்றில் பெரிது. அதன் நீளம் 50 மைல். சமதளத்தில் போகும்போது கப்பல்களைக் கரையில் ஓடும் மோட்டார் வண்டிகள் இழுத்துச் செல்லுகின்றன.

வியாபார வஸதிக்காக பனமாக் கால்வாய் வெட்டப்பட்ட வரலாறு கொஞ்சம் சொல்லுவோம். அதுவே மற்றும் பல கால்வாய்களுக்கும் வெகுவாய் பொருந்தும்.

கி. பி. 1500 முதல் ஸ்பானியர் ஆட்சி தென் அமெரிக்கா மத்திய அமெரிக்க நாடுகளில் வியாபித்திருந்தது. ஸ்பானியர் தென் அமெரிக்காவின் பெரு தேசத்திலிருந்து பொன் வெள்ளியைக் கழுதைகளில் பொதி ஏற்றி மெக்ஸிகோ குடாவுக்குக் கொண்டு போய் கப்பலேற்றி ஸ்பானியாவுக்குக் கொண்டு போவார்கள். அல்லது அங்கே கப்பலேற்றி தென்

அமெரிக்காவின் தென்கோடி முனையைச்சுற்றி நெடு நாள் பிரயாணம் செய்து ஸ்பானியாவுக்குப் போவார்கள். அப்போது பனமா பூசந்தியில் கால்வாய் தோன்டினால் நலம் என்றார்கள். இந்த யோசனை கி. பி. 1881 வரையில் முயற்சிக்கு வரவில்லை. இவ் வருஷம் அமெரிக்க ஐக்ய மாகாணத்தார் இவ் வேலை செய்யப் பிரான்சியரே வல்லவர் என்று அவர்கள் கையில் கொடுத்தார்கள்.

பனமா பூமி வெயிலும் விஷ ஜுரமும், கொசுவும், எறும்பும் பெருத்த இடம். பிரான்சியா 52,000,000 பவுன் செலவிட்டபின், அருமையான பல மனிதரைச் சாகக் கொடுத்து, திடுக்கிட்டுத் திசை தப்பி ஓட்டம் பிடித்தார்கள். கருவிகள், தண்டவாளங்கள், பலவித யந்திரங்களெல்லாம் தேடுவாரற்று விட்டுவிட்டார்.

கி. பி. 1889-ல் அமெரிக்கர் அவ் வேலையை எடுத்து, கொசுவுக்கும் விஷ ஜுரத்துக்கும் முதலாவது நிவாரணம் ஏற்படுத்திக் கொண்டார்கள். வேலையை இருகோடியிலும் ஆரம்பித்து, நீராவி யந்திரங்களால் மண் வெட்டினார்கள். 1914-ம் வருஷம் வேலையை முடித்து மனமகிழ்ச்சிப் பண்டிகை கொண்டாடினார்கள்.

இக் கால்வாயின் உபயோகம் சூயஸ் கால்வாய் போலவே மதிப்புக் கடங்காதது. பூலோக அற்புதங்களோடு இவற்றை மதிக்கவேண்டும்.

## 15. ஹென்ரி போர்ட் என்ற கோடீஸ்வரர்

தற்காலத்தில் உலகமெங்கும் பிரயாணக் கஷ்டங்களைக் குறைத்து, ஜனங்கள் சுலபமாய் பல இடங்களுக்கும் போய்வர மோட்டார் வண்டி ஏதுவாய் இருக்கிறதை நாம் நாள்தோறும் உணருகிறோம். மேலும் மோட்டாரின் விலை முந்தின வருஷங்களில் இருந்ததைவிடக் குறைந்துகொண்டே வருவதால் அதின் பயனை அனுபவிப்போரின் தொகை அதிகரித்து வருகிறது. முதலாவதாக மோட்டார் செய்த சிற்பி யாரென விசாரித்தால் பல தேசத்தாரான பல நாமங்கள் கண்டுபிடிப்போம். அவரில், ஹென்ரி போர்ட் என்னும் அமெரிக்க கோடீஸ்வரர் சரித்திரம் கேட்போர் யாரும் கற்றுணரக்கூடிய நீதிகள் உள்ளடங்கியது.

கி. பி. 1863-ம் வருஷம் வட அமெரிக்காவின் மிச்சிக்கான் ஏரிக் கரையை அடுத்த மிச்சிக்கான் மாகாணத்தில் அவர் பிறந்தார். இளமையில் பயிர்தொழில் வேலைக்காரனான தன் தந்தையின் தொழிலையே பழகி வந்தார். ஆயினும் சிறுவனா யிருக்கும்பொழுதே யந்திரங்களைக் கவனிக்கும் அபிமானியாய், காட்டு வேலையின் கஷ்டமெல்லாம் யந்திரங்கள் செய்து முடிக்க வேண்டியதென நிர்ணயிப்பார். நீராவி யந்திரங்கள் காடுகளில் பயிர் அறுவடை செய்யவரும் பொழுது அவற்றைக் கண்ணுற்று, ஏன் இந்த மாதிரி நீராவி யந்திரம் ஒன்று குதிரை வண்டியை இழுக்கக் கூடாதென எண்ணமிடுவதுண்டு. 17-ம் வயதில் பாடசாலைக் கல்வி நிறுத்தினவுடனே யந்திரசாலை ஒன்றில் கற்றுக்குட்டியாய் சேர்ந்து தீவிரமாய் அங்கே பயில வேண்டிய யாவும் தெரிந்துகொண்டார்.

இரவு காலங்களில் கை கடிகாரங்கள் பழுது பார்க்க விருப்பமுடன் பழகினார். ஒரு சமயம் அவரிடம் 300 கடிகாரம் இருந்தன. பின்பு தானே ஒரு கடிகாரம் செய்ய வல்லவனானார். அக் காலங்களில் அமெரிக்கர் ரெயில் பாதைகளில் கடிகாரங்கள் ஒரு மணியும், வீட்டுக் கடிகாரங்கள் வேறு மணியும் காட்டும் வழக்க மிருந்தது. ஹென்ரி போர்ட் செய்த கடிகாரம் இரண்டு காலங்களையும் காட்டினது. கி. பி. 1879-ம் வருஷம் மணிக்கு 12 மைல் செல்லக்கூடிய அறுப்பு யந்திரம் ஓட்டும் வேலையில் அமர்ந்தார். அது மிஞ்சின கனமாயும், அதிக விலையாயும் இருந்ததென மதித்து, அதைச் சொற்ப செலவில் செய்ய லாகாதா வெனப் பலகாலும் சிந்தித்தார். சாதாரணமாய் பயிர் அறுவடை செய்யும் தொழிலாளரும் மாம் வெட்டுவோருமே இந்த யந்திரம் உபயோகித்து வந்தார்கள். அக் காலம் பாதைகளும் சீரானவை யன்று. ஜனங்கள் போக்குவரத்துச் செய்வது பெரும் பிரயாசையாய் இருந்தது.

இதற்குள் யந்திரம் செய்வதற்கான தொழில் கூடம் ஒன்று அவர் வீட்டோடு அமைத்துக்கொண்டார். எப்படியாகிலும் குதிரை பூட்டாமல் செல்லக் கூடிய வண்டி ஒன்று நிர்மாணிக்கத் தீர்மானித்து, நீராவியால் ஓடும் வண்டி ஒன்று முடித்து அதை ஓட விட்டார்.

1887-ம் வருஷம் வாயுவினால் ஓட்டக்கூடிய யந்திரம் ஒன்று செய்து அதை ஓட விட்டார். அவருடைய தகப்பனாருக்கு இம்மாதிரி வேலைகள் வெறுப்பாய் இருந்தது. இவன் என் பயிரிடும் நல்ல தொழிலைக்

கவனியாது இப்படி வீண்காலம் போக்குகிறுன் என வருந்தி, 40 ஏக்கர் நிலம் கொடுத்து கல்யாணமும் செய்து வைத்து, 'இனியாகிலும் குடித்தனக் காரியம் கவனி' என்று சொன்னுர்.

சிறிது காலத்தில் டிராயிட் நகரில் இருந்த மின் சார தொழில் சாலை ஒன்றில் மாதம் 45 டாலர் சம் பளத்திற்குச் சேர்ந்தார். அக் காலங்களில் மோட் டார் வேலை தன் சொந்த நேரங்களில் செய்து தேர்ச்சி பெற்று 1893-ம் வருஷம் தன்னுடைய கை வேலைப் பாடான முதல் மோட்டார் வண்டியை முடித்து ஓட்டி னுர். அவ் வண்டி பெருந்தொனியுடன் ஓடிப் பல குற்றங்களுக்கும் இடமாயிருப்பினும் அக்காலத்துக்கு அது இணையற்ற அதிசயமாய் இருந்தது. அவர் ஒரு வருக்கே மோட்டார் வண்டி இருந்தது. இதற்குள் போர்டுக்குச் சம்பளம் மாதம் 125 டாலர் ஆயிற்று. அதற்கு மேலும் கொடுக்க மேலதிகாரி தயாராய் இருந் தார். ஆனுல் அவருடைய சொந்த வேலையும் தொழில் கூடமும் விஸ்தாரமாகிக்கொண்டே போவதைக் கண் ணுற்று, அவற்றைக் கட்டோடே நிறுத்தவேண்டும் அல்லது வேலையை விட்டு நீங்கவேண்டுமென வற் புறுத்தினுன். போர்ட் இன்ஜினீர் வேலைவிட்டு நீங்கி மோர்ட்டார் வேலையே செய்ய ஆரம்பித்தார். கையில் பணமில்லை. சில மனிதர் அவரோடு கூடி ஒரு கம் பெனி சேர்த்து, போர்ட் செய்த கார் மாதிரி வண்டி கள் செய்து விற்று சொற்ப லாபம் அடைந்தார்கள். கி. பி. 1902-ல் போர்ட் அந்தக் கம்பெனியை விட்டு நீங்கி, தன் பெயரால் ஒரு கம்பெனி சேர்த்து கார் செய்தார். அக்காலம் மோட்டார் வண்டி செய்து

வந்த உவின்டன் என்பவனுடைய வண்டியோடு பந்தயம் விட்டதில் போர்ட் உடைய வண்டி ஜெயித்தது அவருடைய கீர்த்தி பரவ ஏதுவாயிற்று.

போர்ட் மோட்டார் கம்பெனி விசேஷ அபிவிருத்தி யடைந்தது. நாளடைவில் அது பூரணமாய் அவருக்கே சொந்தமானபடியால் தமது சித்தம்போல் சீர்திருத்தவே, பூவுலகோர் போற்ற வேண்டிய சிறப் பமைந்து இருக்கிறது. கி. பி. 1905-ம் வருஷம் பிரான்சிய மோட்டார் வண்டி ஒன்று உடைந்து போனது. அதில் ஒரு துண்டை எடுத்துப் பார்த்து, அவர், இது விசேஷமான எஃகு: கனம் இல்லாமல் விசேஷமான பலம் அமைந்து இருக்கிறது. என் வண்டிகளுக்கும் இதே இரும்பு வேண்டும் என்று சொல்லி தமது ஊழியருக்குக் கட்டளை யிட்டார். அதுவோ 3000 டிகிரி அனலில் செய்ய வேண்டிய 'வனடியம்' என்னும் இரும்பு. அவர் உலைக் கூடத்தில் 2700° வரை தான் அனல் மூட்டத் தெரியும். என்றும் தடைகளை மேற்கொண்டு தமது உலையில் 3000° அனல் மூட்டி 'வனடியம்' செய்து அவருடைய அபேக்ஷைப்படி பலமான வண்டி, கனமற்றதாய் செய்து முடித்தார்.

நாளடைவில் ஏராளமான கார் விற்றுப் பெருத்த சீமான் ஆனர். கி. பி. 1911-ல் தினம் 1908 வேலையாட்கள் அவருடைய தொழில் சாலையில் வேலை செய்து வருஷத்தில் 35000 கார் விற்ருர்கள். இந்நாட்களில் ஒருநாளில் 4000 கார் செய்து முடிக்கிருர்கள். அவருடைய செல்வத்தை மதிப்பிடுவது அரிது. உலக

முழுவதும் பல தேசங்களில் அவருடைய தொழிற் சாலைகளும் வியாபாரமும் இருக்கின்றன.

காரியத்தில் எப்பொழுதும் கருத்தாயிருப்பதால் நாள்தோறும் யந்திர வேலையில் நூதன சீர்திருத்தங்கள் செய்தும், வேலை வாங்குகிற முறையில் நல்ல ஒழுங்குகளைக் கையாடியும் வருகிறார். அதனால் கூலியை அதிகப்படுத்தி கார் விலையை வருஷந்தோறும் குறைத்துவந்த போதிலும் அவருடைய செல்வம் பெருகுகிறது.

இதில் அவருடைய நுண்ணறிவுடன் தரும சிந்தையும் விடாமுயற்சியும் தைரியமும் கவனிப்போர் எவரும் பயனடையலாம். தன் தொழிலை $2\frac{1}{2}$ ஏக்கர் பூமியில் ஆரம்பித்தவர் 665 ஏக்கர் வரை அதை வியாபிக்க வைத்து, சுமார் 50000 வேலையாட்களை வைத்து நடத்துகிறார். முற்காலங்களில் இதே வேலைக்கு இரண்டு லக்ஷம் ஆட்கள் வேண்டியதாய் இருக்கும்.

அவருடைய தரும சிந்தையின் விவரம் எடுத்துக் கூறுவதும் கேட்பதும் பயனுடையது; தன் கைக்குக் கீழ்பட்ட தொழிலாள் யாராலும் மற்ற இடங்களில் கிடைப்பதிலும் அதிகக் கூலி பெற்று உற்சாகத்துடன் உழைப்பதுடன், லாபத்தில் தனக்கும் பலன் உண்டு என்ற விசுவாசத்துடன் பாடுபட ஏற்பாடு செய்தார். வருஷாந்தரம் 10000000 டாலர் வரை வேலையாட்களுக்கு லாபத்தில் பங்கு கொடுத்தும் திரளான ஊதியமடைகிறார். அவர் வேலையாட்களின் குறைந்த கூலி தினம் 5 அல்லது 6 டாலர். (1 டாலர் $=3\frac{1}{8}$ ரூ. சுமார்) தினம் 29 டாலர் வரை கூலி பெறும் நிபுணரும் அங்கே உளர்.

அங்கே திடகாத்திரர் மட்டுமென்று, எந்தவிதமான ஸ்திதியிலிருப்பவனும் வேலை செய்து கூலிபெற இடமுண்டு. தொழில் கூடத்தின் சோலிகளை 7882 விதமாகப் பாகுபடுத்தி, 949 விதமான காரியாதிகளுக்கு மட்டும் திடகாத்திரர் வேண்டு மென்றும், 4034 வித உழைப்பில் பலசாலிகள்தான் வேண்டுமென்பதில்லை எனக் கண்டறிந்து நாலாவித ஜனங்களுக்கும் வேலை வைத்திருக்கிறார்.

3338 வித வேலைக்குச் சாதாரண மனுஷரும்,

3595-ல் பலவீனர், பெண்கள் பிள்ளைகளும் போதும். 670 வகைக்குக் கால் இல்லாதவர்.

2638 வகைக்கு ஒற்றைக் கால்காரர் ; 2 வகை கை இல்லாதவர்.

715 ,, ஒரு கை மனுஷர்.

10 ,, குருடர்.

1000 ,, காச நோவாளிகள் ; இவர்கள் திறந்த வெளிகளில் வேலை செய்வார்.

எந்த அங்க வீனனும் தனக்கேற்ற வேலை செய்து பூரண கூலி பெற்று வருகிறான்.

இவருக்குச் சொந்தமான நிலக்கரி கனி பருத்தி விளையும் பூமி உண்டு. இவர் பூமியில்தானே வேலைக்கான எரிவாயு கிடைக்கிறது. கப்பல் செல்லும் கால்வாயும் ஏரியும் இவருக்குண்டு. ரெயில் பாதை சொந்த ஆளுகையில் வைத்திருக்கிறார்.

## 16. எவரஸ்ட் சிகரம்

இந்தியாவின் வட பாகத்துக் கோட்டை சுவராக இருந்து, அதற்குப் பல நல்ல நதிகளும் கொடுத்து உதவும் பெருந்தகையான இமய பருவதங்கள் மூன்று தொடர்களேயும், பல தனி மலேகளேயும் அடக்கி யுள்ளது. அதன் நீளம் 1,500 மைல்: அகலம் சிற்சில இடங்களில் 250 மைல் வரை உண்டு. ஐந்து மைலுக்கு அதிகமான (28,000 அடி) உயர்ந்த சிகரங்கள் முப்பதுக்கு மேல் அதில் காணலாம். இவைகளில் வீராதி வீரர்கைக்கும் எட்டாத எவரஸ்ட் பர்வதம் 29,002 அடி உயரமானது. இவ்வுலகில் இதற்கு நிகரான சிகரமே கிடையாது. சதா உறைபனிப் போர்வை மூடி நிற்கும் இம்மலேகள் மகா ரிஷிகளின் வாசஸ்தானமாய், கண்டோர் மெய் மறந்து நிற்கவேண்டிய அபூர்வகாட்சியாய் இருக்கின்றன. இடம், பொருள், ஏவல் குறைவின்றிப் படைத்திருக்கும் துணிகரக்காரர் பலர் அவைகளேக் காணும் ஆவலால் கால் கடுக்க நடந்து, வேர்வை சிந்த மெய் சோர்வுற, காடு தாண்டி மேடு ஏறி அலேகிருர்கள்.

கல்கத்தாவில் ரெயில் வண்டி ஏறிப் போய்க் கங்கைமா நதியும் தாண்டி, கொசுவும், ஜுரமும் கூடி வாழும் தாராய் என்ற நெடு வனமும் தாண்டி மலேயடிவாரம் சேரலாம். மலே மேல் போகும் சிறிய ரெயில் வண்டியில் புகுந்தால் டார்ஜிலிங் என்ற இன்ப நகர் சேரலாம். அது முதல் தொடரில் இருந்த போதிலும் கிண்ணத்தில் இருந்த காப்பிப் பானம் பருகுவதற்குள்ளாகக் குளிர்ந்துபோகும்படி அவ்வளவு குளிர்ந்த இடம். மழைத் தூற்றலும், மேகங்களும் சதா குடிகொண்டிருக்கும் ஸ்தானம். மிகத் தெளி

வான நன்னுள் ஒன்றில் மேகங்கள் வேறு எங்கேயாவது உலாவப் போயிருக்கும் சமயத்தில் எவரஸ்ட் சிகரத்தை வெகு தூரத்திற்கப்பால் மங்கலாய்க் காணலாம்.



டார்ஜிலிங் நகர்

கி. பி. 1841-ம் வருஷம் வரை இந்தச் சிகரத்தின் மகா உயரம் இவ்வளவெனக் கண்டறிந்தவர் இல்லை. அப்புறம் 50 வருஷங்களாய் அதின் சிகரம் வரை ஏறும்படி முயற்சி செய்த வல்லவர் அநேகர். அவர்கள் ஒருவரும் காரியசித்தி அடையவில்லை. இவ்விதமான அரிய செயல்கள் முடிக்கக் கச்சைகட்டி நிற்கும் பூகோள நிபுண சங்கத்தார் கி. பி. 1920-ம் வருஷத்தில்கூட ஆகும் பலன் யாது என்றூர்கள். ஒரு கூட்டம் வல்லவர்கள் மஹா தைரியமாய் 2300 அடி ஏறுவதற்குள் மாரிகாலம் ஆரம்பிக்கவே திரும்பி விட்டனர்.

ஆசைக்கோர் அளவில்லேயே. அதோடு நிற்குமா! இமய பர்வதங்களின் உன்னத பாகங்களில் பார்த்து வந்த அரிய மலர்க ள்,மிருகங்கள், உறைபனிக்காடுகள் முதலிய காரியாதிகளேப் பிரஸ்தாபித்தார்கள். படங்க ளோடு மனதை மயக்கும் வரலாறுகள் பத்திரிகை களில் வெளிக்கு வந்தன. உடனே இந்தச் சிகரம் வரை எப்படியாவது போகாமல் விடுவதில்லே என்ற தீர்மானம், ஆத்திரம் அநேகர் உள்ளத்தில் உதித்தது.

உயர்ந்த மலேகள்மேல் ஏறுவதில் சகித்து மேற் கொள்ளவேண்டிய சில கஷ்டங்களேச் சொல்லுவதும் அரிது. கடல் மட்டத்திற்கு 14000 அடி உயரத்தில் உள்ள இடங்களில் காலூன்றி நடப்பதே மகா கடினம்; அவசரநடை கூடாது. ஏனெனில் ஆகாயம் அங்கே குறைவு. அப்படியானல் அப்படி இரு மடங்கு உய ரத்தில் அடி எடுத்து வைப்பது எவ்வளவு கஷ்டம்! அங்கே கடுங்காற்று உறைபனியோடு வந்து வல்ல வனேயும் வந்து பார் என்கிறது. குளிரோ, அதைக் கூற நாவு துணியாது. கற்பாறைகளும் உறைபனித் திரளு மன்றி ஒரு எறும்புக்கும் ஒதுக்கிடம் உணவு ஈயாத பூமியில் மனிதன் இரவு செலவிடுவது எவ் வாறு, பாதைகண்டு நடப்பது எப்படி? கண்ணுக் கெட்டா உயரமாய் நிர்விசாரியாய் நிற்கும் எவரஸ்ட் கொடிமுடி ஏறிச் செருக்கடைவது எவ்விதம்!

பூகோள நிபுண சங்கத்தாருக்கு இம்மாதிரிக் கஷ் டங்களே மேற்கொள்ள உபாயம் தேடுவதே பெருத்த சோலி. 1923-ம் வருஷம் கோடைகாலம் மேற்படி சங்கத்தார் அனுப்பிய வீரர் மலேயில் வெகு தூரம் ஏறியும் அப்புறம் போக வலியற்றவராய்த் திரும்பி வந்த வரலாறு சற்று சொல்லுவோம்.

எவரஸ்ட் நேபாளத்திற்கும் திபேத் தேசத்திற்கும் இடையில் இருப்பதால் திபேத் ராஜாங்கத்தாரிடம் அனுமதிபெற்று ஏறவேண்டிய பாதையை தீர்மானித்துக் கொண்டார்கள். பின்பு வழிகாட்டித் துணை புரிய மலைநாட்டு வாசிகள் சிலரைச் சேர்த்துக் கொண்டார்கள். உணவு, உடை, கூடாரம், பனிக்கட்டி, வண்டிகளன்றி, உயரம்கணிக்கும் பாராமீட்டர், மருந்து, வைத்தியர் முதலான துணைபலம் பலவும் தேடிக்கொண்டார்கள். மலை ஏறுகிறவர்கள் புறப்படு முன்னதாகக் கூலிக்காரர் அவருக்குத் தேவையான சகல பொருளும் கொண்டுபோய் வசதியான இடங்களில் கூடாரம் அடித்து, உணவு படுக்கை யெல்லாம் சித்தப் படுத்தித் திரும்பிவிட்டார்கள். கூடாரம் I, II, III என்று மூன்று இடங்களில் ஸ்தாபித்துக் கொண்டார்கள்.

டார்ஜிலிங் நகரிலிருந்து திபேத்து சென்று அங்கிருந்து சதாகாலமும் உறைபனி படர்ந்தும் குவிந்தும் நிமிர்ந்தும் கிடக்கும் பாதைகளில் ஏறத் தொடங்கினார்கள். அங்கே ஆகாயம் மேலே போகப் போக மகா குறைவாயிருப்பதால் தாங்களே பிராணவாயு அடைத்த குழாய்களை முதுகில் சுமந்துகொண்டு பனிக்கட்டிப் பாறைகளில் பாதை வெட்டிக் கொள்ளக் கோடாலி ஒன்று கையில் ஏந்திப் புறப்பட்டார்கள். நேபாள தேசத்தாரான கூலியாட்கள் கூர்க்க ஜாதியார் பெரிய பாரமான மூட்டைகள் சுமந்து நமது வீரருக்கு முந்தியே ஏறி வேண்டிய சௌகரியங்கள் ஏற்படுத்தி வைத்தார்கள். ஆகவே மலை ஏறினவர்கள் முதலாம் கூடாரத்துக்குச் சுலபமாய் ஏறினார்கள். வழி நெடுக அழகிய புஷ்பங்கள் பக்ஷிகள் முதலிய மகா இன்பமான

பல புதிய காட்சிகள் நிமிஷந்தோறும் புலப்பட்டன. தோற்றத்தால் கண்ணுக்கினிய விருந்தளித்த சிகரங்கள் எப்பக்கமும் பொலிவுற்று நின்றன. அவைகள் நடுவில் எவரஸ்ட் சிகரம் பட்டிக்காட்டான் மாதிரி பருத்துச் சரிந்து உயர்ந்தோன் என்ற பெயர் பெருமை அன்றி வேறு பெருமையற்று நிற்பதைக் கவனித்தார்.



இமய பர்வதம் — உறைபனி பாகம்

முதலாம் கூடாரத்தில் ஒருநாள் இனி ஆகவேண்டிய சோலிக்காய் ஒழுங்கு செய்வதிலும் பனிக்கட்டி மேல் சறுக்கி விளையாடுவதிலும் செலவிட்டார்கள். கூலியாட்கள் தங்களிலும் குறைந்த வீரரல்ல என்று கண்டறிந்தார்கள்.

இரண்டாம் கூடாரத்துக்கு ஏறும் பாதையில் விசேஷமான கஷ்டம் ஒன்றும் இல்லாதபடியால் சிக்

கிரம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே வீண்பொழுது போக்காமல் வேலையாட்களுக்குப் பனிக்கட்டி மேல் பாதை உண்டாக்கி மலை ஏறும் உபாயம் போதித்தார்கள்.

அடுத்தநாள் இரண்டாம் கூடாரம் விட்டு மூன்றும் கூடாரத்திற்குப் புறப்பட்டார்கள். விசேஷமான சிரமம் இன்றியே மூன்றும் கூடாரமும் சேர்ந்து விட்டார்கள். அது 21000 அடி உயரம். இதற்குள் நாள் ஆறு ஆகிவிட்டது. இங்கே இருந்து நடந்து சற்று தூரம் விரைந்து ஏறி மறுபடி மூன்றுங் கூடாரத்துக்குத் திரும்பிவிட்டார்.

இதற்கிடையில், முதலாவது போன ஒரு கூட்டத்தார் 26800 அடி வரை ஏறி அப்புறம் செல்லக் கூடாமல் திரும்பி விட்டார்கள். அவர்கள் கூடாரம் உறை பனிமேல் நின்றது. படுக்கையோ பெரிய தோல் பைகள், என்றாலும் நித்திரைசெய்து இளைப்பாறினார்கள்.

இரண்டாம் கூட்டத்தார் மூன்றுவது கூடாரத்தை விட்டு மேலே ஏறி 26000 அடி உயரத்தில் கூடாரம் போட எண்ணமா யிருக்கும்போது கடுங்காற்று எழுந்து உறை பனி கொண்டுவந்து கொட்டினது. மகா பிரயாசையோடு அங்கே ஒரு கூடாரம் அடித்தார்கள். கூலியாட்கள் பாடிக்கொண்டே வேலைசெய்ய மலை ஏறும் பெரியோர் காலூன்றி நிற்பதுவும் பெரிதாயிருந்தது. காற்று அடங்கி நல்ல காலம் வரட்டும் என்று எல்லாரும் கூடாரத்துக்குள் தஞ்சம் தஞ்சமென்று அடைக்கலம் புகுந்தார்கள். உறைபனித்

தூள் அவர்களை அங்கேயும் விட்டபாடில்லை. ஜலக் கட்டி உருக்கித் தண்ணீர் உண்டாக்கிச் சமையல் செய்து வயிறு நிறைய உண்டார்கள். அவ்வளவு உயரமான இடத்தில் ஜலம் சொற்ப சூட்டில் கொதிக்குமாகையால் அங்கே சூடான காப்பி சாப்பிட வகையில்லை.

பொழுது சாய்ந்ததும் காற்று எழும்பி அடித்த வேகம் சொல்லுவது எவ்விதம்! தரையில் விரித்த துணியையும், அதன் மேல் படுத்திருக்கும் மனுஷரையும், கூடாரத்தையும் சேர்த்துத் தூக்கிக் கனம் பார்க்கும் நோக்கம் அதற்கு இருந்தது. கூடாரத்தில் பல கிழிவுகள் உண்டானதால் உறைபனித் தூள் தூக்கத்துக்கு உதவின பைக்குள்ளும், அவர்கள் உடைக்குள்ளும் வந்து சேர்ந்தது. கூடாரம் முளைகள் பிடுங்கப்படாதபடி காப்பதுவே உள்ளே இருந்தவருடைய அரும் பிரயாசையாய் இருந்தது. இரவு ஒரு மணிக்கு மேல் காற்று விட்டு விட்டு அடித்ததால் கூடார முளைகளை இறுக்கி அடித்துச் சில நிமிஷங்கள் சற்று இளைப்பாற இடமும் கிடைக்கலாயிற்று.

பொழுது விடிந்த பின்னும் புயல் காற்று நின்றபாடில்லை. பகல் பன்னிரண்டு மணிக்குள் காற்றின் வேகம் தணிந்து ஆகாரம் சமைக்கத் துணிந்தாலும் கூடாரம் நெருப்புப் பற்றிக்கொள்ளுமோ என்ற பயம் ஒருபால் அவர்களை வருத்தினது. மறுபடியும் காற்று வேகங்கொண்டு ஒரு மணி வரை உரத்து அடித்துக் கூடாரத்திலும் சற்றுக் கிழிவுண்டாக்கி, திடீரென்று அடங்கிற்று. மாலையில் போதுமான உணவு இல்லையே என்று கலக்கமாயிருக்குந் தருணம் கூலியாட்கள் அடி



எவரஸ்ட் ஏறுவோர் கூடாரம்

வாசஸ்தலத்திலிருந்து உணவுப் பொருள் கொண்டு வந்து கவலை மாற்றினார்கள். அவர்களுடைய தவிப்பை வருணிக்க யாரால் கூடும்! பிராணவாயுக் குழாயை

எடுத்துக் கொஞ்சம் சுவாசித்ததின்பேரில் எல்லாருக்கும் உயிர் திரும்பி வந்ததுபோல் ஆனது. எல்லாரும் தூங்கி இளைப்பாறினார்கள்.





மலை ஏறுபவர் — பிராண வாயு குழாய்

மறுபடி எழுந்து அரும் பாடுகளுடன் 27,300 அடி உயரம் ஏறினார்கள். இன்னும் 1,700 அடி ஏறினால் கொடுமுடி தொட்டு நாடின காரியம் முடித்துக் களிகூரலாம். அது முடியாத காரியம். இறங்கிவிட்டார்கள்.

## 17. புலவர் சபை

கடந்த தை மாதம் ஓர் இரவு குளிர்காற்று மெதுவாய் வீசினது. சந்திரன் பார்வைக்குச் சிறு பெண் வார்த்த தோசை மாதிரி இருந்தாலும் களங்கமில்லாமல் பிர காசித்து நதியின் அழகைப் பன்மடங்கு எடுத்துக் காட்டினது. ஊரில் ராஜமேளம் நாகசுரம் முதலிய வாத்தியங்கள் எல்லாம் அடங்கிவிட்டன. வீணே குலைத்து வாய்வலிக்கு மருந்து தேடும் நாய்கள் முத லாய் நித்திரை செய்தன. நகர காவல் வீரரான சேவக ரும் குளிர் சகியாமல் சந்து பொந்து தேடிப் படுத்துக் கொண்டார்கள். திருடர் முதலாய் நாள் நன்ருயில்லை யென்று வெளிப்படாமல் நித்திரை போனுர்கள்.

எனக்குத் தூக்கம் வாராதபடியால் ஆற்ருேரம் உலாவப் போனேன். சற்றுத் தூரத்தில் படகு ஒன்று வரக்கண்டேன். சங்கீதக் கருவிகள் பல இசைந்து ஒலிப்பதைக் கேட்டு மயங்கி நின்றேன். கவனித்த போது அத்தொனி படகிலிருந்தே வருவதாய் அறிந் தேன். படகிலிருந்த வித்வான்களின் வார்த்தை அவ் வாறு காதுக்கு இன்னமுது ஊட்டியது! படகு நெருங்கி வரவும் அதிலுள்ள பெரியோரின் முகங்கள் கண்டு உள்ளம் பொங்கினபோதிலும் பகலவனைக் கண்ட இருட்டுபோல் நாணி ஓடி மரங்களுக்கிடையில் ஒளித்துக்கொண்டேன். அவர்கள் அங்கேதானே இறங் குவதைக் கண்டபோது என் ஆவி குதூகலத்தால் நடனமாடிற்று.

ஔவை முதலாவது இறங்கினுள். சகல அறிஞ ரும் அவளுக்குக் கை கொடுத்தார்கள். சூடிக் கொடுத்த நாச்சியார் (ஆண்டாள்) தானும் அவளரு

கில் நின்ருள். அங்கே கம்பர், புகழேந்தி, அகஸ்தியர், ஒட்டக்கூத்தர், குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி நாயனர், தாயுமானவர், ராமலிங்கர், பட்டணத்தடிகள், வில்லிபுத்தூரார், வேதநாயக சாஸ்திரியார், கிருஷ்ண பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, திருவள்ளுவர், கபிலர், திருமங்கையாழ்வார், திருப்பாணுழ்வார், இன்னும் எண்ணுக் கடங்காத பல்லாயிரம் வித்வான்களும் முச்சங்கப் புலவரும் காணப்பட்டார்கள். நான் மதி மயங்கி நின்றேன்.

அவர்கள் சற்றுநேரம் வார்த்தையாடி இனிது பொழுது போக்குவதை என் மறைவிடத்திருந்தே கவனித்தேன். அங்கே வைஷ்ணவர், சைவர்; அத்வைதர் என்ற பேதம் இல்லை. அவர்களில் அக்ராசனம் வகிக்கத் தகுந்தவர் யார் என்று ஆலோசித்த பின்பு எல்லாரும் வரிசைத் வரிசையாய் தங்கமயமான ஆசனங்களில் அமர்ந்தார்கள். ஆசன வரிசைகளுக் கெதிரில் ஏற்பட்ட மேடையின்மேல் இருந்ததோர் ஒளி வீசும் பீடத்தில் ஔவையார் அக்ராசனம் வகித்தாள். யாவரும் கைகொட்டி ஆ கூ என்று ஆர்ப்பரித்தார்கள். என்ன! புலவர் சபையில், பெருமகளா யிருந்தாலும் ஸ்திரீ தானே. அக்ராசனம் இவள் வகிக்கத் தகுமோ என மயங்கினேன்!

கம்பர் எழுந்து நின்று தமிழ்ப்புலவர் நிகழ்த்திய வேலையையும், அதன் பலாபலனையும் குறித்துப் பேச, சபையோர் இமைகொட்டாமல் கவனித்தார்கள். அவற்றில் சிற்சில குறிப்புகள் மட்டும் நான் சொல்லக்கூடும்.

தாயுமானவர் சத்தியத்தின் பாதை நடந்து கடவுளின் கல்யாண குணங்களைப் பாராட்டி மனிதனுடைய பாவ சுபாவம் மாற்ற உழைத்தார், அவர் கவிகள் உலகத்தின் விடிவிளக்காய் மதிக்கலாம் என்றார். சுவாமிகள் தலை கவிழ்ந்து நின்றார். புலவர் சிகாமணிகள் கண்கள் சந்தோஷப் பெருக்கால் கதிரொளி வீசின.

குலசேகராழ்வார் ராமர் அரக்கரைத் தொலைத்து, சிங்காசனமேறிப் பரமபதம் அடைந்தபின்பு வந்து தசரதசக்ரவர்த்தியுடன் அயோத்தி மாந்தரும் புலம்புவதுடன் நூலைப் படிக்கும் எவரும் கண்ணீர் வடிக்கும் படியான நூல் எழுதினர் என்று சொல்லவும், புலவர் பெருமான் தன் குறை எடுத்துரைத்த பெருமானை வணங்கி நின்றார். சபாநாயகியும், மற்றுமுள்ளோரும் ஏகவாக்காய், ஐயனே! தேவரீர் செய்த குற்றம் இன்று நிவர்த்தியாக வேண்டும். தசரதரும், கௌசல்யாதேவியும் இராமருடன் கூடி இன்ப பதவியில் இருக்கும் காலத்தில்,

கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமதலாய், குனிவில் லேந்தும்
மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
மனமுருக்கும் வகையே கற்றாய்
மெல்லணைமேல் முன்றுயின்றாய் இன்றினிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ
காகுத்தா! கரிய கோவே!

அம்மாவென் றுகந்தழைக்கும் ஆர்வச்சொல்
கேளாதே அணிசேர் மார்வம்
என்மார்வத் திடையழுந்தத் தழுவாதே
முழுகாதே மோவாதுச்சி

கைம்மாவின் நடையன்ன மென்னடையும்
கமலம்போல் முகமுங்காணு
தெம்மானை என்மகனை இழந்திட்ட
இழிதகையேன் இருக்கின்றேனே.

எனப் புலம்பலாமோ!

இதனைச் சேர்ந்த கவிகளைப் பாடும்படியாகச் சபையார் கட்டளையிட, புலவர்பெருமான் இடக் கையில் சிப்லாங்கட்டை தாங்கி வலக் கையை வீசி மெல்லடி வைத்து ஆடிப் பாடினார். கிருஷ்ணமூர்த்தி புல்லாங் குழல் வாசிக்க, சாரதை வீணை வாசிக்க, நாரதர்தம் புரு மீட்டினார்.

திருஞானசம்பந்தர் பூங்கோதை அம்மையிடம் பால் அருந்திப் பாடினார். அதுவுமன்றி முத்துப் பல்லக்கு ஏறி ஸ்தலங்களுக்குப் போனார். அவர் இனிய கீதம் பாடுவதும் பெரிதோ என்றார் கம்பர். சபை அது சரியென்று ஆரவாரித்து நகைத்தார்கள்.

பட்டணத்தடிகள் ஞானம் சிறந்தது குழந்தையும் பேதையும் பாடி உணர்வடையுமாறு உலக வாழ்வு அநித்தியமெனக் கூறினார். ஆகிலும் எல்லாம் துறந் தவர் தாயாருக்காகப் புலம்பலாமோ?

'அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்.'

என்று இவர் அம்மைக்காகப் புலம்பலாமோ என்றார் கம்பர். அவரோ, நமது குற்றம் எடுத்துக் கூறின இவர் குணம் மிகப்பெரிது என்றெண்ணி சிரம்வணங்கி நின்றார். உடனே சபையார் எழுந்து நின்று, நண்ப, உம்மை வாழ்த்துகிறோம். நாங்களும் அதே குற்றம்

செய்தவர்கள் என்று சொல்லி உடல் பூரித்தார். மற்றப்படி சபாநாயகி என்ன சொல்லுவாள்? 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று விடிய விடியப் போதித்தும் இவர் இன்னும் அறிந்திலரே என்பாள் என்று பயந்தார் போலும்.

மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் திருவாசகம் எழுதிக் கொடுத்தார்; இவருக்கு என்ன பெருமை என்று கூறப்பட உடனே அவர் மனம் கசிந்து நின்ற நிலையைப் பார்த்தால் இவர் இன்னுமொரு திருவாசகம் கூறப்போகிறாரோ என்று எதிர்பார்க்க நேர்ந்தது!

திருவள்ளுவர் குறள்வடிவாய்ச் சாற்றிய கவியாயும் உலகின் இருள் அகற்றும் பல சிறு தீபங்களுக்கு நிகர் ஆயினும் அவற்றின் கருத்து சொற்ப வாசிப்பாளருக்கு எட்டாக்கனியாய் இருப்பது ஒரு குறை என்று கம்பர் கூறினார். சில பெரியோர் கம்பருக்குப் பதிலுரைக்கும் நோக்கமானார். குணக்குன்றான நாயனார் எழுந்து நான் அக் குற்றத்திற்காய் மனஸ்தாப மடைகிறேன், 'அணுவைத் துளைத்து எழுகடலைச் செலுத்தி, குறுகத் தறித்தவள் ஒளவையேயன்றி நானல்ல என மொழிந்து அவ்வம்மையை நமஸ்கரித்து 'இறந்தாலும் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்' என்ற இன்சொல் வாச்சியே புகழுக்குரியவள் என்றார். ஒளவை என்ன செய்வாள். காது கேளாதவள் போலும் மௌன விரதம் பூண்டவள் போலும் இருந்தாள்.

இதன் பின், ஆனந்தசாகரமே,

பொன்னே மணியே சுகக்கடலே
நித்தியானந்தத்தை நாடு.

எனப் பல கீதங்கள் பாடி ஆடினார்கள்.

இதன் பின் கிருஷ்ணப் பிள்ளை பரமபுருஷன் எடுத்துக் கூறிய ஸ்ரீ இயேசு பெருமானின் அவதாரத்தின் பெருமையைப் பலபேர் சொல்லக் கேட்டேன்.

ஔவையார் எழுந்து, பெருமான்காள் கம்பன் இரண்டு வரி கவிபாடித் தாசியிடம் 500 பொன் பெற்ற குற்றம் பெரிது. அது காரணம் பற்றியோ அல்லவோ தில்லைவாழ் அந்தணர் அவன் பாடிய அமிர்தக் கவிகளைக் கண்ணெடுத்தும் பாராமலே பன்னிரண்டு வருடங்களாய் நடக்க வைத்தார்கள்.

நம் மெல்லாருடைய கவியிலும் பொதுக் குற்றம் கவனிக்கத் தக்கது. எவரும் படித்து உணரத்தக்க நடையில் நாம் எழுதவில்லை.

புலவர் பெருமான்காள்! முருங்கைக் கீரை உண்டு கூழுக்காகவும் திணைக்காகவும் கவிபாடி, தாசிக்கும் ஆவேசத்துக்கும் சிநேகிதியாய் நின்று காலம் தள்ளின என்னை நன்குமதித்து அக்ராசனம் வகிக்கச் செய்தீர். நீர் வாழ்க என்றாள்.

இத் தருணம் வேதவல்லி பூனை என்மேல் குதிக்க நான் விழித்துக்கொண்டேன். என் கனவில் கண்ட பிழை பொறுப்பீர் நண்பரே!

## 18. இலக்கணப் பாடம் - II

### வார்த்தையின் பாகங்கள்

நமது உடலில் தலை, கண்டம், கை, கால் இருந்தும் அவை இசைந்து பொருந்தி ஒரே சரீரமாகிறது. ஒவ்வொரு பாகத்திற்கும் தனித் தனி வேலை உண்டு.

அவ்விதமே பதங்களுக்கும் பாகங்கள் பொதுவாக உண்டு. அவற்றிற்கு வெவ்வேறு சோலியும் உண்டு.

ஓடினான் ஓடு + இன் + ஆன்.

ஓடு பகுதி ; இன் இடைநிலை ; ஆன் விகுதி.

பதுதி இடைநிலை விகுதி

நடந்தான் நட + ந்த + ஆன்.

வார்த்தையின் முதல் பாகம் பகுதி.
நடு „ இடைநிலை.
கடைசி „ விகுதி.

இன்னும் விகாரம், சாரி, சந்தி என்னும் பாகங்களை இலக்கணப் புஸ்தகத்தில் காண்க.

வினைமுற்றில்,

பகுதி — நடந்தேறும் விஷயத்தையும்
இடைநிலை — காலத்தையும்
விகுதி — காரியம் செய்யும் ஆசாமி யாரென்றும் காட்டும்.

1. நடந்தான் — காலத்துக்கு ஏற்றபடி
நடக்கிறான் — இடைநிலை மாறுவது
நடப்பான் — கவனிக்க.

2. ஓடினான் — காரியத்துக்குத் தகுந்தபடி
ஓடுகிறான் — பகுதி மாறுகிறது.
ஓடுவான் —

3. நடந்தாள் — காரியம் செய்த ஆசாமிக்கு
நடக்கிறான் — ஏற்றபடி விகுதி மாறினது.
நடப்பார்கள் —

## 19. ஜூலியஸ் சீசர் - I

பூர்வகாலத்தில் உலக சரித்திரத்தில் பெயர் பெற்ற ராஜ்யங்களில் ரோம ராஜ்யம் ஒன்று. அது மத்திய தரைக் கடலை அடுத்துள்ள ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா என்னும் முக்கண்டங்களிலும் வியாபித்திருந்தது. அது கிறிஸ்து பெருமான் பிறக்க 500 வருஷங்களுக்குமுன் வளர ஆரம்பித்து, கி. பி. 450 வருஷம் வரை இருந்து மறைந்து போனது. ரோம போர் சேவகருடைய புஜபல பராக்கிரமத்தாலும், அவர்களுடைய ராணுவ ஒழுங்குகளின் நலத்தாலும் அவர் காலடி வைத்த இடமெல்லாம் ஜெயித்துத் தமது ராஜ்யத்தை வியாபிக்கச் செய்தார்கள். மேலும் தமக்குக் கிடைத்த ராஜ்யங்களை ஒழுங்குபடுத்திச் சிறந்த ராஜாங்க முறைகளால் அவை அபிவிருத்தி யடையுமாறு செய்தார்கள். கல்வி, நாகரீகம், தேச சட்டங்கள் ரோம ராஜ்யத்தில் பாவி அங்கிருந்து உலகமெங்கும் வியாபித்தன. பல தவறுதல்களுடன் பூர்வ ரோம ராஜ்யத்தில் இவ்வளவு நல்ல வேலைக்கும் வெற்றிக்கும் காரணமாயிருந்த பல மஹாவீரர் நாமங்கள் சரித்திரத்தில் பிரகாசிக்கின்றன. அவரிலும் முதல்வனைப் மதிக்க வேண்டிய ஜூலியஸ் சீசர் என்னும் தலைவனைப்பற்றி இங்கே கூறுவோம்.

ஜூலியஸ் என்ற பெயரைச் சற்று மாற்றி ஜூலை என்ற பெயராக்கி வருஷத்தின் 12 மாதங்களில் ஒன்றுக்குக் கொடுத்திருக்கின்றனர். அவருடைய வளர்ப்புக் குமாரன் அகஸ்டஸ் சக்கரவர்த்தியின் பெயர் ஆகஸ்ட் மாதத்திற்குக் கிடைத்தது.



ஜூலியஸ் கி. மு. 100 வருஷங்களுக்கு முன் பிறந்து, சிறு பிராய் முதல் ரோம அதிகாரி சில்லா என்பவன் கொடுத்த துன்பங்கள் நிமித்தம் நாடுவிட்டு அலேயலானுன். அக்காலங்களில் ஒரு தருணம் கடல் கொள்ளேக்காரர் கையில் சிக்கிக்கொண்டான். அவர்கள் 20 தாலந்து வெள்ளி கொடுத்தாலன்றி உன்னே விடோம் என்ன, சீசர், "அப்பன்மாரே அதற்கென்ன, 50 வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றுன். அவர்களோடு இருந்த நாட்களில் கவிபாடி, கதை சொல்லி, பிரசங்கம் செய்து, அவரைச் சந்தோஷப்படுத்திக் குற்றேவல் அவர்கள் தனக்குச் செய்யுமாறு நடந்துகொண்டான். தான் விடுதலேயானதும் அவர்களேப் பிடித்துக் கழு வேற்றினுன்.

சீசருக்கு ரோமை நகர் குடிகள் உறவுபெற்று உயர்ந்த பதவிபெற விருப்பமிருந்ததாகச் சரித்திரக் காரர் கூறுகிறுர். ரோமருக்குத் தம் தலேவரைத் தெரிந்தெடுக்கும் சுயாதீனம் இருந்தது. அவன் பெருந் தொகைகள் கடன் வாங்கி, ரோமாபுரியின் நடுத்தர அந்தஸ்துள்ள குடிகளுக்குப் பலமுறை விருந் திட்டு, அவர்களுடைய நட்புக்காளானுன்.

ரோம சேனேத் தலேவனுகி, எகிப்து, வடஆப்பி ரிக்கா, சின்ன ஆசியா, இத்தாலியா, பிரித்தானியா முதலிய இடங்களில் போர்செய்து அவ்விடங்களே ரோம ராஜ்யத்திற்குக் கீழ்ப்படுத்தினுன். பத்து வருஷத்தில் 300 ஜாதிகளே ஜெயித்து 800 பட்டணங் களேப் பிடித்து ரோம அதிகாரிகளே அவ்விடங்களில் ஏற்படுத்தினுன். 30 லக்ஷம் போர் வீரர் அவன் கீழ் இருந்தார்கள்.

இவன் ரோமை நகர் ராஜ்ய ஒழுங்குகளை எவ்வித மாய் மாற்றுவானோ, குடிகெடுப்பானோ என்ற பயம் அந்நகரின் பெரியோரான கேட்டோ சிசரோ சில்லா என்பவருக்கு இருந்தது. இதுகாரணம்பற்றியே சில்லா அவனைக் கொல்ல விரும்பினான். என்றாலும் சீசர் சமர்த்தாய் சகல ஆபத்துக்களையும் கடந்து ஜீவித்தான். அவனுக்கு ஜனங்களைப் பிரியப்படுத்தத் தெரியும்.

அக் காலம் ரோமை நகர் பிரஜாதிபத்தியமாய் ஆளப்பட்டது. குடிகள் தெரிந்துகொண்ட இரண்டு அதிகார்ரிகள் சம அந்தஸ்துள்ளவர் இருந்தார்கள். தேசபிரமாணங்கள் நிரூபிக்க பிரபுக்கள் பிரதானிகள் சேர்ந்த ஸெனட் என்னும் மகாசபை ஒன்று இருந்தது.

குடிகள் யாவரும் மூன்று வகுப்பினராய் இருந்தார் கள். முதல் இரு வகுப்பினராகிய பிரபுக்களும், மத்திம வகுப்பினரும் சுயாதீனர். தலைவரைத் தேர்ந்தெடுக்க வாக்கு (வோட்) கொடுக்கும் பாத்தியதையுடையவர் கள். மூன்றாவது வகுப்பினராகிய அடிமைகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. பிரபுக்கள் மாகாணங் களின் கவர்னர்களாயும் மற்றும் உத்தியோகம் வகிப் பவராயும் சகல அதிகாரங்களையும் பெற்று உயர் பதவியில் இருந்தார்கள்.

இரண்டாம் தரத்தார் பட்டாளத்தில் சேர்ந்து பல நாடுகளிலும் போர்புரிந்து ரோம ராஜ்யத்தை வியாபிக்கச் செய்தார்கள். அக் காலத்தில் உலகம் என்றால் மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த நாடுகளும் இந்தியாவும் சீனாவுமே. பின் சொன்ன இரண்டு தேசம் தவிர 'பூலோகம்' என்றெண்ணப்பட்ட பாகம் எல்லாம்

ரோமர் குடைக்கீழ் இருந்தது. ரோமர் பல தேசங்களிலும் அதிகாரிகளாகி நியாயமாயும் அநியாயமாயும் திரள் செல்வம் படைத்து ரோமை நகருக்குக் கொண்டு வந்தார்கள். சேவகர் அழித்துக் கொள்ளையிட்ட பட்டணங்களிலிருந்து அருமையான வஸ்துக்கள் கொண்டு வந்து நகரை அலங்கரித்தார்கள். மாடமாளிகைகள் கட்டினார்கள். நகரின் ஆலயங்கள் பொது வீடுகள் எல்லாம் இனி இல்லை என்ற சிறப்பாய் எழும்பின. உணவு உடை ஸ்நான வகைக்காய் மிகுந்த திரவியம் செலவிட்டு வாழும் பழக்கம் தலையெடுத்தது. எந்த வேலைக்கும் அநேக அடிமைகள் இருந்தார்கள். பயிரிட, ஆடு மாடு பரிபாலிக்க, சுக ஜீவன காரியாதிகள் எதற்கும் அடிமைகளே உழைக்கும் காலம் வந்தது. சாதாரண ஜனங்கள் காட்டு வேலை வீட்டு வேலை தமக்குத் தகாதெனு எண்ணிச் சோம்பராய்த் திரிந்து உணவின்றி வாடினார்கள். ஆனாலும் அவர் வாக்காளர். நாவாட நகர் ஆடும். ராஜாங்கத்தில் அவர்கள் பெரிய சக்தி. சீசர் மேல் அவர்களுக்கிருந்த அபிமானம் பெரிது. அவர்களுடைய தரித்திரம் நீங்கவும், அரசாட்சியில் பெருகிக் கொண்டிருந்த சீர்கேடுகளை நீக்கவும் சீசர் இரவு பகலாய்ப் பாடுபட்டான்.

சீசர் நோக்கம் உணர்ந்த செல்வர் விரோதம் நாடோறும் பெருகினது. "வருஷா வருஷம் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு சம அந்தஸ்துள்ள அதிகாரிகள் ராஜாங்கத்தின் குற்றங்களை நீக்க வல்லமையற்றவராய் இருக்கிறார்கள். அப்படியின்றி, சக்கரவர்த்தி ஒருவன் செங்கோல் ஓச்சி ராஜ்யம் பாதுகாப்பது நலம்" எனத் துணிந்தான். இந்த நோக்கம் எவ்வாறு நிறைவேற்றினான் எனக் கவனிப்போம்.

TB 031(8) N33

சாதாரண ஜனங்கள் அவனைத் தங்கள் இல்லாமை போக்கி ஈடேற்ற வந்த பெருமான் என மதித்தார்கள். சீசர் பெரியோர் சிலரை விவாக பந்தங்களால் உறவாக்கித் தன் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டான். பாம்பே என்ற சேனுபதிக்குத்தன் மகளை விவாஹம் செய்து கொடுத்தான். அவன் கீழ் இருந்த படைகளும் சீசருக்குச் சகாயமாயின. ஆகவே சட்ட சபையில் அவன் சித்தமே நிறைவேறலாயிற்று.

பிரதான குரு பட்டத்திற்கு ஆள் தேர்தலான போது, முதியோர் பலர் அபேக்ஷகராய் நின்றும் வாலிபனுன சீசருக்கு அப் பட்டம் கிடைத்தது.

சீசருடைய முப்பாட்டன் மாரியஸ் என்பவன் 7 முறை ரோமை நகரத் தலைவராயிருந்து காலஞ் சென்றவன். சில்லா என்ற (சீசருடைய) விரோதி, மாரியஸ் என்பவனை நாட்டுக்கு ஆகாதவன் எனத் தீர்ப்பிட்டுக் காடாள அனுப்பின துண்டு. இவ்வளவு காரியம் நடைபெற்றிருக்க, சீசர் மாரியஸின் சிலைசெய்து, நகர தேவதைகள் நடுவில் வைத்தான். இதனுல் சில்லா கட்சியார் அவன் தலையைக் கிள்ளி எறியத் தருணம் தேடினுர்கள். மாரியஸ் கட்சியாரோ, இவனே நமது கலி தீர்க்க வந்த கருணுநிதி என்றுர்கள். இருகட்சியிலும் சேராத பெரியோரும் "இந்தத் துணிகரன் இன்னும் என்ன செய்யான்! இவன் நமது மேன்மையான அரசாட்சி முறைகளைக் கவிழ்த்துத் தானே சக்கரவர்த்தியாவானே" வென்று பேசிக்கொண்டார்கள். செனட் மஹா சபை கூட்டி அவனைச் சிட்சிக்கும் முறைகளை ஆலோசித்தார்கள். அவனைக் கடுமையாய்க் குற்றப் படுத்தினுர்கள். சீசர் எழுந்து வெகு சாதுரியமாய்ப்

பேசி விடைகொடுக்கவே எல்லாரும் அமர்ந்து விட்டனர். மகா குரு உத்தியோகமும் கிடைத்தது.

கேத்திலின் என்னும் ஒரு மனுஷன் ரோம ராஜாங்கத்திற்கு விரோதமாய்ச் சதி செய்ததாய் வெளிக்கு வந்தது. அதற்குத் தகுந்த ரூபகாரமில்லாதிருக்கும் பொழுதே அவன் தப்பி ஓடிப் போனான். ரூபகாரம் கிடைத்து மஹாசபை கூடி அவன் தோழரைத் தண்டிக்கும்படி தீர்மானிக்கும் தருணத்தில் சீசர் எழுந்து அவர்களை ஆதரித்துப் பேசியதின்பேரில் தண்டனைத் தீர்ப்பு மாற்றப்பட்டது! உடனே கேட்டோ என்னும் ஞானி எழுந்து, நடந்த சதி மோச வேலையில் சீசரும் ஒரு கூட்டுக் கள்ளன் என்று பேசினார். குற்றவாளிகளுக்கு மரணத் தீர்ப்பானது.

சீசர் மேல் வேறு குற்றங்களும் சொல்லப்பட்டது. மஹாஜனங்கள் அவற்றைப் பாராட்டிக் கொள்ளவில்லை. அவனுடைய நண்பர் எவ்வளவு பெரிய குற்றங்கள் செய்தாலும் அவர்களையும் ரக்ஷிக்க வல்லவனாய் இருந்தான்.

இனிமேல் சீசருடைய வெற்றிகளின் விவரத்தையும், ரோமராஜ்யத்திற்காக அவன் செய்த பெருஞ் செயல்களையும், உலகில் உதிக்கும் மானிட சந்ததிகள் அவனை நினைக்கத் தக்கதாக அவன் முடித்த அருஞ் செயல்களையும் கவனிப்போம்.

## 20. ஜூலியஸ் சீசர் - II

ஜூலியஸ் சீசர் ஸ்பானிய தேசத்தின் பிரதான அதிகாரி (கவர்னர்) ஆனான். அங்கே போனவுடனே சேனைகள் சேர்த்து, அத்தேசத்தில் ரோமர் ஆளு-கைக்கு உட்படாதிருந்த இடங்களை ஜயித்து, உள் நாட்டுக் கலகங்களை அடக்கி, சமாதானமான அரசாட்சி நிலைநாட்டினான். தானும், சேனைகளும் திரண்ட செல்வம் தேடிக்கொண்டார்கள். சேனைகள் தலைவன் மேல் விசேஷ அபிமானமுடையவராய் அவன் ஆணைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

சீசர் தன் படைகளுடன் ரோமாபுரிக்குத் திரும்பி வந்தபோது நகர அதிகாரி-கான்சல் ஸ்தானம் காலியாய் இருந்தது. சீசர் அதற்கு அபேக்ஷகனாய் நின்று பெற்றுக்கொண்டான். அவன் உடன்பங்காளியான அதிகாரி கல் பர்ணியஸ். ஆனால் சீசர் அவனை எக் காரியத்திலும் வாய் திறக்க விடாமல் தன் இஷ்டம் போலவே அதிகாரம் செலுத்தினான். சட்டசபையார் அனுமதியும் தேடினவன் அல்ல. அவர்கள் ஏக வாக்காய் எதிர்த்தாலும் தான் இட்டதே சட்டமாய் நடந்து கொண்டான். எப்படியெனில், மகா சேனாபதியான பாம்பியும், கோடீஸ்வரனான கிரேஸஸ் என்பவனும் சீசர் கட்சியில் இருந்தார்கள். சீசர் கான்ஸல் பட்டம் பெற்றவுடனே நகரத்தில் ஏதுமற்ற ஏழைகளாய் இடுவார் பிச்சைக்குக் காத்திருந்த ஜனங்களுக்கு நிலமும், பணமும் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்றான். தற் சிந்தையே பெரிதாய்க் குடிகொண்டு தாம் வாழ்ந்தால் போதுமென்று இருந்த பிரபுக்களுக்கு இது கர்னகடூரமாயிருந்தது. சீசர் அவரை நோக்கி, "ஐயன்மீர், என்

வார்த்தை உமக்கு எட்டாதாயின் என் கையால் ஆனதை நான் பார்க்கிறேன்'' என்றான்.

நகரில் முக்கியமானவர் நட்பை விவாகத்தாலோ, உத்தியோகம் கொடுத்தோ அல்லது லஞ்சம் கொடுத்தோ சம்பாதித்துக்கொண்டான். கேட்டோ என்ற பிரபு தைரியமாய் அவனை எதிர்த்து, இவன் நகரின் குடியாசைக் கலைத்துக் கொடுங்கோல் மன்னனாகி அரசாளவகை தேடுகிறான் என்று குற்றஞ்சாட்டினான். அதன் பயனாக கேட்டோ சிறைச்சாலை சேர்ந்தான்.

கான்ஸல் உத்தியோகம் ஒரே வருஷத்தில் முடிந்து போகவும், சீசர் ப்ரான்ஸ் தேசத்து கவர்னராய் நியமிக்கப்பட்டான். அங்கே, அவனுக்கு விரோதமாய் எழும்பின ஜாதிகளை ஜயித்து, தனக்குக் கீழடங்கினவருக்குச் சமாதான அரசாட்சி ஏற்படுத்தினான். தன் குடிகளுக்குத் தீங்கு விளைக்கக் கூடிய அயல் நாட்டாரான ஜெர்மானியர் மேல் படையெடுத்துச் சென்று அவர்கள் ரோமர் பெயரையும் உச்சரிக்காத வண்ணம் திகில் உண்டாக்கினான். அப்படியே பிரித்தானியா மேலும் படையெடுத்துப் போய் ரோமர் படைக்கலம் எப்படிப்பட்டதென்று காட்டித் திரும்பினான். தன் நாட்டில் ஸ்திரமான சட்டங்களும், அரசாட்சியும், கல்வி நாகரீகமும், சுகாதார முறைகளும் தினமும் அபிவிருத்தியடையுமாறு செய்தான்.

சீசர் ரோமராஜ்யத்தை வியாபிக்கச் செய்து அதன் கீர்த்தி எங்கும் தொனிக்கச் செய்வது ரோமாபுரியின் சிறியார் பெரியார் யாவருக்கும் நித்த மகிழ்ச்சிக் கிடமாயிருந்தது. தேவர்களுக்கு ஸ்தோத்திரப் பலி

கிடைத்தது. ஆகிலும் பிரபுக்கள் யாவரும் இவன் இப்படிக் கோபுரமாய் வளர்ந்தால் ராஜாங்க முறைகளைத் தாறுமாறுக்கி என்ன கேடுகள் கொண்டுவருவானே என்ற கவலை மிகுந்தவரானார்.

சீசர் தன்னிடம் இருந்த திரளான கொள்ளைப் பொருளைக் கொண்டு ரோமநகரில் சிநேகிதர் ஏற்படுத்தினான். இத்தருணம் பாம்பி என்ற மகா வீரனின் மனைவி இறந்துபோகவே அவன் சீசருடைய எதிராளியானான். துர்ப் புத்தி மந்திரிமார் பலர் அவனுக்கு இருந்தார்கள்.

பாம்பி தன் சேனைகளுடன் ரோமைநகர் சேர்ந்தான். சீசர் தன் சேனைகளுடன் வருவதைக் கேட்ட ஸெனட் சபையார் சேனையை அனுப்பிவிட்டு வரும்படி ஆஞ்ஞை அனுப்பினார்கள். சீசர் அதற்கு, "பாம்பி தன் சேனைகளை அனுப்பிவிட்டால் என் சேனையை அனுப்பி விடத் தடையில்லை" என்றான். இரு தலைவருக்கும் போர் தொடங்கிற்று. சீசர் சட்டசபையின் தாக்கீதை மீறின குற்றவாளியானான். சேனைகளோடு ரோமை நகருக்கு வந்தபடியால் நகரத்திலும், சுற்றுப் புறங்களிலும் உண்டான திகிலும், கலக்கமும் அளவற்றது. சிலர் அலறி ஓட்டம் பிடித்தார்கள். கிராமத்தார் ரோமை நகருக்கு ஓடினார்கள். சீசருடைய நண்பர் தாமும் பாம்பியிடம் அடைக்கலம் புகுந்தார்கள். ஸெனட் மகாசபைப் பிரபுக்கள் தாமும் தமக்கு வேண்டிய பொருள் எடுத்தும், எடாமலும் ஓட்டம் பிடித்தார்கள். சீசர் ராஜாவாகி ஆள, நாம் அவன் கீழ்ப்பட்ட அடிமைகளாய் இருக்கவா! அதைவிடச் சாகலாம் என்பது அவர்கள் கொள்கை.

சீசர் இத்தாலியாவின் பட்டணங்களை ஒவ்வொன்ருய்க் கைப் பற்றி ரோமை நகருக்கு வந்தான். பிரபுக்கள் பாம்பியை ஆதரித்தார்கள். சீசர் படையெடுத்து வந்த அன்னிய நாட்டரசன் போல் தோன்றினுன்; அவன் எவருக்கும் எத் தீங்கும் விளைத்தவனன்று. பாம்பியும் அவனை எதிர்க்காமல் தென் திசை சென்று பிரிண்டிஸி நகரில் கப்பலேறித் தன் சைனியங்களுடன் க்ரேக்குத் தேசத்துக்குப் போய்விட்டான்.

வீணே ஜனங்கள் சீசருக்குப் பயந்த விதம் காட்ட வேடிக்கைக் கதையொன்று உண்டு. சீசர் கார்பினியம் என்ற பட்டணத்தைச் சேனைகளால் சூழ்ந்துகொண்டதும், அங்கேயிருந்த பாம்பி கட்சிக்காரன் ஒருவன் தன் வைத்தியனை அழைத்துத் தனக்கு விஷம் கொடுக்கும்படி கேட்டான். வைத்தியனும் ஏதோ திராவக மருந்து கொடுத்து குடிக்கச் செய்தான். சாப்பிட்ட பிரபு நினைத்தபடி சாவு வரவில்லை. அப்போது, சீசர் ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் சர்வ சாந்தத்துடன் நடந்துகொள்வதாய் அறிந்து, "ஐயோ, வீணுய் என்னுயிர் போகிறதே" என நொந்து அழுதான். அப்போது வைத்தியன், 'தலைவ, நீர் நீடூழி வாழ்க. நீர் உண்டது விஷமன்று' என்ருன். இவ்விதச் செய்திகள் கேட்டு, நகரை விட்டுப் போயிருந்த பலரும் திரும்பி வந்துவிட்டார்கள். பாம்பி கட்சியார் மட்டும் வரவில்லை.

இவையாவும் கண்ணுற்ற ரோமை வாசிகள், அவன் சர்வாதிகாரியாகி ராஜ்ய பாரம் தாங்குமாறு கேட்டுக் கொண்டார்கள். 11 நாள் அப்படியே நடந்தது. பின்பு அவர் மனம் நோகாதபடி பழைய வழக்கத்தை அனுசரித்து, தனக்கு ஒரு கூட்டாளி சேர்த்து

இரண்டு அதிகாரிகளாய் ஆண்டார்கள். என்றாலும் தனக்கு ஒப்பு உயர்வற்ற வீரசிகாமணியான அவனிடம் நியாயம் பேச வல்லார் அங்கே இல்லை. ராஜாங்கத்தில் அப்போது இருந்த சீர் கேடுகளை ஒரு மஹா புருஷன் திருத்தக் கூடியதாய் இருந்ததே ஒழிய நாலு பேர் கலந்து நிதானித்துச் செய்யக் கூடியதாய் இருக்கவில்லை. ஆதலின், சீசர் என்ன பட்டம் வகித்தாலும் தன் சித்தப்படியே ஆளுகை செய்தான். பிரபுக்களுக்கு அவனை எதிர்க்கச் சக்தி இல்லாதபடியால் பகைத்தார்கள். மஹா ஜனங்களோ அவனைச் சர்வாதிகாரி யாக்கினார்கள்.

சீசர் நகரின் பொக்கிஷம் எடுக்கப் போனபோது அதிகாரி ஒருவன் தடை செய்தான். சீசர் அப்போது, "இது யுத்த காலம். சமாதான காலத்துச் சட்டங்கள் இங்கே செல்லா" என மொழிந்து, சாவியும் கிடையாமல் கொல்லனைக் கொண்டு பொக்கிஷசாலையைத் திறந்து பொருள் எடுத்துச் செலவு செய்தான்.

சர்வாதிகாரியான சீசர் செய்த நன்மைகளைச் சிறிது உரைப்போம். சத்துருக்களுக்கும் நன்மை செய்தான். சில்வா என்ற கொடிய கான்சல் காலத்தில் தேசப் பிரஷ்டரான பிரபுக்கள் பலரையும் திரும்பி வரச் சொல்லி அவர்களைத் தகுந்த பதவிக்கு உயர்த்தினான். வேலையின்றி அலையும் மூன்று லக்ஷம் ஏழைகளுக்குத் தானியம் கொடுத்தான். தன் உயிர் அத்தியந்த அபாய நிலைமையில் இருக்கும்போது இவ்வளவு நன்மை செய்தான்.

பாம்பியுடன் இரண்டு தரம் போர் செய்து பூரண ஜெயமடைந்தான். பாம்பி மரித்த பின்பு தன்னிடம்

வந்த எதிரிகள் யாவருக்கும் மன்னிப்புக் கொடுத்தான். பழிவாங்கவில்லை.

தன் எதிரிகளை ஜெயித்து முடித்த பின்பு ரோம ராஜ்யத்தின் குறைகள் நீக்கும்படி உழைத்தான். அக் காலத்தில் ரோமை வாசிகள் மகா சிலாக்கியம் பெற்றவர்கள். அவர்களுக்கு வரி இல்லை. குற்றம் செய்தாலும் தண்டனை சொற்பம். அவர்களில் அநேகர் ராஜ்யத்தின் மாகாணங்கள் பலவற்றிலும் உயர்ந்த உத்தியோகங்கள் வகித்து, பெருஞ் செல்வம் திரட்டி, பல அடிமை வேலையாட்கள் வைத்து ஜீவிக்கவே, கைப்பாடு படுவது ரோமருக்குத் தகாதென மதித்தார்கள். இதனால் பெருகிய வறுமை நீங்கவே சீசர் அரும்பிரயாசை எடுத்தான். அவன் உண்டாக்கின சீர் திருத்தங்களாவது.

1. ரோம பிரஜைகளுக்குரிய சுதந்தரத்தை நாடுகளின் குடிகளுக்கும் கொடுத்தான். இதனால் மாகாணக் குடிகளும் சட்ட சபையில் சேர இடமாயிற்று.

2. சகல குடிகளும் வரிகொடுக்கத் தீர்ப்பிட்டான்.

3. எவரும் 15,000 பவுனுக்கு மேல் பணம் வைத்திருக்கக் கூடாது. மீந்த பணத்திற்கு நிலம் வாங்கவேண்டுமென விதித்தான்.

4. காட்டு வேலைகளுக்குக் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பங்கு சுயாதீனக் குடிகள் இருக்கவேண்டும்.

5. போர் வீரருக்கு நிலங்கள் கொடுத்துக் குடியேற்றினான்.

படிப்படியாய் வேலை யற்றவர்களுக்கு வேலையும் தரித்திருக்கு உணவும் கிடைக்க உபாயம் தேடினான்.

6. குடிகள் ரோமாபுரியில் அடைந்து கிடக்காத படி அவர்கள் நாட்டில் குடியேற ஒழுங்கு செய்தான்.

கடன்பட்டுக் கலங்கி நின்றவரின் தொகை பெரிதாயிருந்தது.

7. கடும் வட்டிகளைக் குறைக்கவும், பெருந் தொகைக் கடனுல் செலுத்தின வட்டியை முதலிலிருந்து நீக்குமாறும் விதித்தான்.

8. அக் காலத்துப் பஞ்சாங்கம் பிசகாய் இருந்தது; வருஷத்திற்கு 355 நாள் தான் கணக்கில் இருந்தது. கிரஹங்கள் பார்த்து அனுஷ்டிக்கும் பண்டிகை நாட்கள் தப்பான காலங்களில் வந்தன. விதைப்பு அறுவடை காலம், மாரி காலமும் அப்படியே. இக் குறை தவிர்க்கத் திடீரென்று ஒரு மாதம் கூட்டிக் கொள்வார்கள். ஆகவே சில வருஷங்களுக்கு மாதம் 13 ஆகும். சீஸர் க்ரேக்க கணித சாஸ்திரி ஒருவனைக் கொண்டு காலங்களைக் கணித்து வருஷத்துக்கு $365\frac{1}{4}$ நாட்கள் என்று தீர்மானித்தான்.

சத்துருக்களை வென்று, அடைந்தாரை ஆதரிக்கும் காலத்தில் பெரு வள்ளலாய் விளங்கின சீஸரின் பெருமை உரைப்பது அரிது. ஜனங்கள் அவனைச் சர்வாதிகாரியாக்கிப் பல கௌரவப் பட்டங்களை அவனுக்காகப் புதிதாய் ஏற்படுத்தினுர்கள். சக்கரவர்த்தி என்ற பெயர் ஒன்றுதான் இல்லை. ஓயாத் தொனியாய் அவனுக்கு ஸ்துதி சொன்னுர்கள். பொருமைக்காரர் நெஞ்சில் பகை பற்றி மூண்டது.

கி. மு, 44-ல் ஒரு நாள் அவன் ஸெனட் மகா சபைக்குப் போனபோது விரோதிகள் பலர் ஆயுத

பாணிகளாய் வந்து நிராயுதபாணியான சீஸரைத் தாக்-கிக் கொன்றூர்கள். அவனுடைய ஆஸ்திக்குப் பங்காளியும், அவனல் மரணத்திலிருந்து இரக்ஷிக்கப்பட்டவனுமான புருட்டஸ்தானும் எதிரில் வந்து குத்தினன்.

சீஸருடைய மரணசாசனத்தில் அவன் தோட்டங்களும், செல்வமும் வெகுவாய் ரோமை குடிகளுக்கே எழுதப்பட்டிருந்தது.

சீஸருடைய நண்பர் சேனைகள் திரட்டி விரோதிகளிடம் பழி வாங்கி, சீஸருடைய வளர்ப்புக் குமாரனை ஆகஸ்டஸ் என்பவனைச் சக்கரவர்த்தியாக்கினூர்கள். ரோமை நகரின் குடியரசும், பல சீர்கேடுகளும் முடிவடைந்தன.

## 21. தீபங்களின் வரலாறு

நமது நாட்களில் தீபங்களின் சிறப்பு நகரங்களில் மிகவும் புகழத் தக்கது. இரவோ பகலோ என்று சந்தேகிக்கவேண்டிய விதமாய்த் தீபங்கள் ஜொலிக்கின்றன. கெரொஸின் எண்ணெய் விளக்குகள், கரி வாயு விளக்குகள், மின்சாரத் தீபங்களாகிய விளக்குகள் வீட்டிலும், வீதியிலும் இருள் நீக்கி மனதைப் பரவசமாக்கும் அலங்காரங்களாகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நமது பூர்வத்தார் ஜீவியம் வேறு விதமாய் இருந்தது.

அவர்கள் வீடு கட்டத் தெரியாமல் குகைகளிலும், சில வேளை மரங்களிலும் வாசம் செய்தார்கள். பகல் வெளிச்சத்தில் மிருகங்களை வேட்டையாடிக் கொன்று

மாம்சம் உண்டு வந்தார்கள். இரவில் மிருகங்கள் அவர்களை வேட்டையாடி மகிழ்வுற்றன.

ஒரு நாள் ஒரு நல்ல மனிதன் தன் வேட்டைக்கான அம்பைச் சீனிக் கல்லால் செய்யும்போது தற்செயலாய் அதிலிருந்து நெருப்புப் பொறி பறந்து அயலில் கிடந்த காய்ந்த இலையில் நெருப்பு பற்றிக் கொண்டது. அது வரையில் அவன் அக்கினி பார்த்ததேயில்லை. காய்ந்த இலை மூண்டு எரிய அனல் அவனுக்கு உறைக்கவும் ஆனந்தபாவசன் ஆனான். மேலும் மேலும் குச்சியும் கட்டையும் போட்டு நெருப்பைக் காப்பாற்றினான். அவன் சாப்பிட வைத்திருந்த இறைச்சியைச் சூடாக்கினான். கட்டை நெருப்பை எடுத்துக் குகைக்குள் வைத்துக்கொண்டான். இரவில் நெருப்பு வெளிச்சம் கொடுத்தது. அவனுக்கும், மனைவி மக்களுக்கும் மகா சந்தோஷம். அயலகத்தார் இந்த மகா அதிசயம் பார்க்க வந்தவர் கொஞ்சம் நெருப்பு எடுத்துக்கொண்டார்கள்.

சில காலத்துக்குப் பின் ஜனங்கள் கொழுப்பை உருக்கி நெய் எடுத்து விளக்கு ஏற்றும் வழக்கம் உண்டானது. சில காலம் செல்லவே ஒரு பையன் தட்டைப் பருப்பு ஒன்று எடுத்து அதனைக் காய்ச்சி எடுத்து வைத்திருந்த கொழுப்பு நெய்யில் தோய்த்து எடுத்தான். அது குளிர் காலம். குளிர்ந்த கொழுப்பு வர்த்தியானது. பையன் அதில் நெருப்புக் கொளுத்திப் பார்த்தான். நல்ல வேடிக்கை. அவன் தாயார் அம்மாதிரியே வர்த்திகள் இன்னும் சிறப்பாய்ச் செய்து இரவில் எரிக்க வைத்துக்கொண்டாள்.

தேன் மெழுகிலும் சில காலம் வர்த்தி செய்தார்கள். அது கிடைப்பது அரிது. கொழுத்த காடிகளின் மாம்சம் நாவுக்கு இன்பம் கொடுத்தது போல் கொழுப்பு ஏன் வீட்டுக்கு விளக்கு ஏற்றக் கூடாதென்றார் பலர்.

நாளடைவில் மனுஷனுடைய ஆயுதங்கள் பெருகிப் பலத்து சமுத்திரத்தில் அரசாட்சி செய்யும் மகா திமிங்கிலங்களை வேட்டையாடும் துணிவு உண்டான போது கொழுப்பு நெய் மலிந்துபோனது. ஒரு திமிங்கிலம் அநேக பீப்பாய் நிரப்பக் கூடிய கொழுப்பைக் கொடுத்தது. மெழுகு வர்த்திக்கு இனி என்ன குறை!

தட்டைப் பருப்புத் திரியை விட்டு, நூல் திரி, சணல் திரி போடும் காலமானது. மெழுகு வர்த்திகள் செய்ய ஒரே அளவான குழாய்கள் உண்டாக்கி, அவற்றின் நடுவில் அந்தமான திரிகளை ஒழுங்காய் நிறுத்திக் காய்ச்சின கொழுப்பைக் குழாய்களில் ஊற்றி நூற்றுக் கணக்காய் வர்த்தி செய்து தீபாலங்காரம் செய்யும் காலமானது. இராவில் கை வேலைகள் செய்யத் தீபங்கள் உதவியாயின. மெழுகு வர்த்தி செலவான அளவைக் கவனித்து காலவரை கண்டறிந்தார்கள். பின்பு காலம் காட்டத் தக்கதாய் வர்த்தி ஒரே அளவாய் எரியும்படி செய்துகொண்டார்கள். கடிகாரம் இல்லாத காலங்களில் அது காலம் காட்டினது.

தேங்காய், எள், ஆமணக்கு வித்து, புன்னை வித்து, இலுப்பை வித்து போன்ற பலவித வித்துக்களும் எண்ணெய் உதவித் தீபமேற்ற அனுசரணையாய் இருந்து வந்திருக்கின்றன.

நமது நல்ல நாட்களுக்கு நூறு வருஷத்திற்கு முன் வரையில் அமெரிக்கரும், நமது ஜனங்களும் தம் தமது வீட்டிற்கு வேண்டிய விளக்கெண்ணெயும், வர்த்திகளும் தாமே செய்து உபயோகித்து வந்தனர். இம்மாதிரி விளக்குகள் சுமார் ஆறுயிரம் வருஷ காலமாய் வழங்கி வந்திருக்கின்றன.

கெரோஸின் என்னப்பட்ட மண் எண்ணெய் சற்றேறக்குறைய 2,500 வருஷங்களுக்கு முன்னமே ரோமருக்கும், வேறு பல ஜாதிகளுக்கும் அறியப்பட்டிருந்தபோதிலும் அதைப் பூரணமாய்ப் பயன்படுத்தும் வகை அறியாதவராய் இருந்தார்கள். மண் எண்ணெய் சுத்தம் பண்ணுமுன் எரித்தால் அதில் உண்டாகும் வாசனை சகிக்க முடியாது. விளக்கு படீர் என வெடித்துத் தீங்கு விளைக்கும். ஆதலின் அது பயன் படாது, மறைபொருளாகவே இருந்தது.

1859-ம் வருஷத்திலிருந்து கிணறுகள் வெட்டி எண்ணெய் எடுத்து சுத்திசரித்துக் கெரோஸின் என்னும் நாணயமான எண்ணெயாக்கி வருகிறார்கள். இதற்குள் கண்ணுடி சிம்னிகளும் தலையெடுத்துக்கொண்டன. நல்ல விளக்குகள் வீடுகளிலும், கடைகளிலும் ஜொலித்தன. இதன் பின், வீதிகளை வீடுகளைச் சிங்காரிக்க வந்த கரிவாயு விளக்குகளும், மின்சார விளக்குகளும் கிடைத்த வரலாறு இன்னொரு நாள் பேசுவோம்.

## 22. சர்வஜன கூட்டுறவு சங்கம்

ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள சுவிட்சர்லாந்து தேசத்தையும், அதின் ஆல்ப்ஸ் மலைகளையும் படத்தில் பாருங்கள். மேலும் ஜெனிவா ஏரியையும் அதன் கரையில் உள்ள ஜெனிவா நகரத்தையும் பாருங்கள். அது, செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் பீடம் போல் பல மலைச் சிகரங்கள் நடுவில் கிடக்கும் அழகிய ஏரியின் கரையில், சுகத்தை ஆசிப்போர் தேடிவரும் பல அழகிய மாளிகைகள் அடங்கிய நகராய் விளங்குகிறது. இன்று நாம் அங்கே போனால் மனதை மயக்கும் பல நலங்களோடு பூவுலகின் குடிகள் அனைவருமே நோய் ஒழிந்து, வறுமை நீங்கி, போர் ஒய்ந்து ஜீவிக்கும்படி ஏதுக்கள் தேடி உழைக்கும் பேரறிஞர் மகா சபையைப் பார்க்கலாம். அங்கே நடைபெறும் கடிகார வேலையாவது, குழுமித்திரியும் ஆட்டு மந்தைகள் மாட்டு மந்தைகளையாவது, கடைகளில் மிகுந்துகிடக்கும் கடிகாரங்களையாவது கவனிக்கமுடியாது. மலைகள்மேல் ஏறியும், ஊடுருவியும் செல்லும் வண்டித் தொடர்கள் பல இருந்தும் ஆல்ப்ஸ் மலைநாடு சுற்றிப் பார்க்க இது தருணமல்ல. சர்வ ஜனக் கூட்டுறவு சங்கத்தார் மாளிகைகளைப் பார்த்து அங்கே நடக்கும் வேலைகளைக் கவனிப்பதே போதும், அவற்றில் முதலாவது பார்ப்பது பெரியதோர் அரண்மனை, பல விஸ்தாரமான கூடங்கள் அடங்கியது. அதில் மேல் வீட்டறைகளுக்குக் கால்நோகாமல் ஏறிப் போகத் தூக்கு யந்திரம் உண்டு. வீட்டைச் சூழ்ந்து கண்ணுக்கினிய உயர் மரங்கள் இருக்கின்றன.

மாளிகைக்குள் நானுவித ஜாதிக்காரரும் பாஷைக்காரரும் போக்குவரத்தாய் இருக்கிறார்கள். இங்கே

குமஸ்தா வேலை செய்யும் சீமாட்டியைத் துணையாகக் கொண்டு உள்ளே போகலாம். புஷ்பப் பாத்திகளின் பெருமைவாய்ந்த சிங்காரத் தோட்டம் ஒன்றைக் கடந்து, சலவைக் கல் தூண்களால் அமையப் பெற்ற ஒரு கூடத்தில் பிரவேசிக்கிறோம். அங்கே பல ஆசனங்களில் வீற்றிருக்கும் கலை வல்லோரையும், அவரிடம் செய்தி எடுத்துவரும் வில்லை அணிந்த ஊழியர் திரளையும் கண்டு பெருவியப்படைகிறோம். பல ஆசனங்கள் பரப்பிய வேறோர் கூடத்தில் பூவுலகின் நாலா திசைகளினு மிருந்து வந்த பத்திரிகைக்காரர் கூடியிருக்கிறார். சங்கத்தின் தீர்மானங்கள் அவ்வப் போது உலகத்திற்குத் தெரிவிப்பது இவர் வேலை. அவர்கள் கவைக்காக அடுத்த அறைகளில் தபாலாபீஸ், தந்தியாபீஸ், டெலிபோன் ஆபீஸ் ஆகிய துணைக் கருவி பலவும் இருக்கின்றன.

மேல் வீட்டுக் கூடம் ஒன்றில் பலர் சமாச்சாரப் பத்திரிகைகள் வாசிப்பதும், அவற்றில் துணுக்குள் வெட்டி பைல் என்னப்பட்ட வெற்றுப் பிரதிகளில் ஒட்டி வைப்பதுமாய் இருக்கிறார்கள். இந்த மகாசபையின் ஆலோசனைகளையும், தீர்மானங்களையும் குறித்துப் பத்திரிகைகள் கொள்ளும் அபிப்பிராயம் யாவும் இவ் விதம் திரட்டிச் சேர்க்கப்படுகிறது. உலகத்தில் உலாவி வரும் 4000 பத்திரிகைகளி லிருந்து எடுத்த துணுக்குகள் இங்கே உண்டு.

அடித்தளத்தில் ஒன்பது பெரிய கூடங்களில் ஒன்பது விதமான பெரிய விஷயங்களை ஆலோசிக்கும் அறிஞர் சபைகள் கூடுகின்றன. ஒரு அறையில் சேனைத் தலைவர்கள் ஆலோசனை சபை நடைபெறுகிறது.

தரைப் படைகள், கடல் படைகள், ஆகாயக் கப்பற் படைகள் நடத்துவதில் வல்லார் இவர் ஆயினும் இவர் நோக்கம் யுத்தங்களை ஓயச்செய்து சமாதானத்தை நிலை நாட்ட வேண்டுமென்பதே. ஒவ்வொரு தேசத்தாரும் தம்மிடம் இருக்கும் யுத்தக் கப்பல், வெடி மருந்து துபாக்கி, சேனைகளாகிய நாச கருவிகளுக்குச் செல விடும் பொருளைக் குறைக்கவேண்டுமென்பது இவர் நோக்கம். இவரது வேலை கடினமானது. சர்வ ஜனங் களுக்கும் செலவு குறைவது சம்மதமாயினும் சேனை களைக் குறைக்கத் துணிவு வருவதில்லை.

அடுத்த கூடத்தில் வைத்தியமுறை வல்லார் கூடி நோய்களை அகற்றும் முறைகளையும் ஏதுக்களையும், நோய்க்குக் காரணமான கஷ்டங்களையும் குறித்து ஆலோசிக்கிறார்கள். இன்னொரு அறையில் ரெயில் பாதை ஆற்றுப் பாதைகளாகிய போக்குவரத்து விஷ யங்களில் சகல தேசத்தாரும் தருமநெறி பிறழாமல் நடந்துகொள்ள உதவியான சட்டங்கள் ஆலோசிக்கிறார் கள். சுமார் 55 தேசத்தார் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

உழைப்பாளர் ஆதரவுச் சங்கம் அடுத்த மாளிகை யில் நடைபெறுகிறது. நமது சிநேகிதியான குமஸ்தா அம்மை ஒரு புஸ்தகசாலைக்கு அழைத்துச் செல்லு கிறாள். அங்கே உலகத்தின் நானா தேசங்களிலும் கைபாடுபடும் குடிகளது க்ஷேமத்துக்காய் ஏற்பட்ட தீர்மானங்கள் சட்டங்கள் யாவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த வீட்டில் இக் கூட்டுறவு சங்கத்தாரின் கடிதப்போக்கு வரத்து சோலிகள் நடைபெறுகின்றன. இங்கே உள்ள வேலைக்காரர் பல பாஷைகளும் தேர்ந்

தவர் 35 அல்லது 40 பாஷைகளில் கூடக் கடிதங்கள் வரும். ஒரு தினத்தில் 600 கடிதம் வரை வரும். 600 கடிதம் வரை போகும்! இதனுல் சகல நல்ல சட்டங்களும் முறைகளும் அவற்றை விரும்பும் எத்தேசத்தாரும் பெற்றுக்கொள்ளுகிறுர்கள். தம்மை ஒத்த அந்தஸ்துள்ள அயல் தேசத்தாரிடம் இருக்கக்கூடிய உபயோகமான முறைகளைத் தெரிந்து கொள்ளுகிறுர்கள்.

உழைப்போர் சங்கத்தின் வேலை போற்றத்தக்கது. அதில் தொழில்சாலைகளில் வேலை செய்யும் ஆட்களுக்கும் அவருக்குக் கூலி கொடுக்கும் முதலாளிமாருக்கும் பொருத்தமான சட்டங்கள் உண்டாக்குகிறுர்கள்.

திருஷ்டாந்தமாக, சென்னை, பம்பாய், கல்கத்தா, கான்பூர் போன்ற நகரங்களில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் நாள்தோறும் நூலாபீஸ்கள், தோல்தொழில் சாலைகள், முதலிய சாலைகளில் வேலைசெய்கிறுர்கள். அவர்கள் பொதுவாய் காலை 6 மணி முதல் மாலை ஆறு மணி வரையில் உழைக்கிறுர்கள். இடையில் ஒரு மணி நேரம் மட்டும் இளைப்பாறுகிறுர்கள். அதனுல் ஸ்திரீகளும் சிறுவரும் அவ்வளவு நேரம் உழைக்கக் கூடாதென்றும் சிறுவர் பாதிநேரம் பாடசாலைக்குப் போக வேண்டும் என்றும் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் வேலைக்காரருக்குக் கொடுக்க வேண்டிய கூலி நோய்பட்டால் கிடைக்க வேண்டிய சகாயம் போன்ற குறிப்புக்களைப்பற்றித் திட்டமான சட்டங்கள் இருப்பது மிக்க அனுகூலமாய் இருக்கிறது.

சர்வஜன கூட்டுறவு சபை உலகத்தின் ஐக்யத்தைக் காக்க ஏற்பட்டது. உலகத்தில் யுத்தங்களை

செய்யாமல் பஞ்சாயத்தார் நியாயங்களை எடுத்துக் கூறி இருகட்சியாரையும் நீதி வழியில் நிறுத்த வேண்டு மென்று இச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அப்படியே சிற்சில விவாதங்களும் விசாரிக்கப்பட்டுப் பெரும் போருக்கு இடமின்றி நிறுத்தப்பட்டன.

## 23. ஹேக் நகர் சமாதான சபை

ஐரோப்பாவில் உலாந்து தேசம் இருக்கும் இடம் படத்தில் பாருங்கள். இந்தச் சிறிய தேசம் தாழ்ந்து, கடல் தன்னை மூடிக் கொள்ளாதபடி அதற் குக் கரை கட்டிப் பயந்து ஜீவிப்பதாகும். தேசமெங் கும் கால்வாய்களையே ராஜபாதைகளாய் உபயோகித்து, வீதிகள்தோறும் படகுகள் உலாவும் தேசம். அங்கே போனால் நல்ல பூந்தோட்டங்கள் கவனிப்பதோடு, ஹேக் நகரில் சர்வ தேச சமாதான சபை கூடும் மாளி கையையும் பார்க்கலாம்.

மாளிகையின் பல சாமான்களும் படங்களும் நாலாதேச ஜாதிக்காரரால் கொடுக்கப்பட்டவைகள். அப் படங்களில் விசேஷமானது 'ஆண்டீஸ் கிறிஸ்து' என்பதே. அதின் வரலாறு என்னவெனக் கேட் போம். இது தென் அமெரிக்காவி லிருந்து வந்தது.

தென் அமெரிக்காவின் படத்தில் ஆண்டீஸ்மலை கூஷில்லி அர்ஜன் டைன் என்ற இரண்டு தேசங்களுக்கு இடையில் அசையாது படுத்து இருக்கிறதல்லவா. இதே காரணமாய் அவர்கள் தேச எல்லையைக் குறித் துத் தர்க்கங்கள் உண்டாகி, தர்க்கம் சண்டைக்கு வழி காட்டினது.

இரு கட்சியாரும் யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டார்கள். எவ்வளவு தொகை செலவிட்டாகிலும், எத்தனை கஷ்டங்களை உத்தரித்தாகிலும், ஜெயித்து தமது உரிமையை நிலை நாட்டாது விடுவதில்லை என நிர்ணயித்துக்கொண்டார்கள்.

இவற்றை யெல்லாம் கவனித்திருந்த தேசத்துப் பிரதான குரு (அத்தியக்ஷர்) தம்முடைய மேன்மையான வீட்டையும் உடைகளையும் ஏவலாளரையும் சுகங்களையும் துறந்து, ஏழை சன்னியாசிக் கோலம் பூண்டு, ஜனங்கள் சாந்தம், அன்பு, பொறுமை, இச்சை யடக்கம் முதலிய சுகுணங்களைக் கிறிஸ்துவினிடம் கற்றுக்கொள்ளுமாறு அரிய பிரசங்கங்கள் நிகழ்த்தினர். தேசமெங்கு மிருந்து ஜனங்கள் புறப்பட்டு வந்து அவர் சொற்பொழிவை வாஞ்சையோடு கேட்டு மனமாறுத லடைந்தார்கள்.

இச் செய்தி க்ஷில்லி தேசத்தாருக்கு எட்டினது. அத்தேசத்து அத்தியக்ஷ குருவும் தமது ஜனங்களுக்கு சகல சற்குணத்தின் கட்டாகிய அன்பைக் குறித்தும், சமாதானத்தால் விளையும் பயன்களைப் பற்றியும் உபதேசம் செய்தார். ஆகவே க்ஷில்லி தேசத்தாரும் போர் செய்யும் நோக்கம் ஒழித்து, சமாதானத்தை விரும்பினர்கள்.

இருதேசத்தாரும் சமாதான ஒழுங்குகளைத் தீர்மானித்துக் கொண்டார்கள். அவர்கள் மெய்மறந்து உடல் பூரித்துத் தாம் தயார் செய்து வைத்திருந்த பீரங்கிகளைச் சேர்த்து உருக்கி ஒரு பெரிய சிலை செய்தார்கள். அது பகையைத் தவிர்த்து நேசத்தைக்

நாட்ட அவதரித்த ஸ்ரீ இயேசுகிறிஸ்து பெருமானின் சொரூபம். அதை ஆன்டீஸ் பருவத்தில் 13000 அடி உயரத்தில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அச் சிலை யின் படமே 'ஆன்டீஸ் கிறிஸ்து'. இதன் பின்பு, அவ்விரு தேசத்தாரும் தாம் போருக்காகச் சேகரித்த திரவியக் குவியல்களைச் செலவிட்டுப் பாடசாலைகள் கட்டினார்கள். ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தினார்கள். இன்னும் பல சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

உலகத்தின் வலிய ராஜ்யங்கள் சிறிய தேசங்களுக்கு அநீதமாய் வருத்தம் கொடுக்காதபடிக்கும், தேசத்தின் குடிகளில் கக்ஷிக்காரர் ஒருவருக் கொருவர் தீங்கு செய்து நஷ்டமடையாதபடிக்கும் சர்வ தேச சமாதான சங்கத்தார் உழைக்கிறார்கள்.

## 24. இலக்கணப் பாடம் - III

### ஆகுபெயர்

சுருங்கச் சொல்லி விளங்க வைக்க ஏற்பட்ட பதங்களே ஆகுபெயராம். இது பொருளுக்குரிய இயற்கையான பெயரை நீக்கி ஏதாவது காரணத்தால் ஏற்பட்ட புதுப் பெயர்.

| | இயல்புப்பெயர் | ஆகுபெயர் |
|---|---|---|
| உ-ம். | பஞ்சம் | கருப்பு |
| | கார் காலநெல் | கார் |
| | நீர் வற்றும்படி காய்ந்த காய் அல்லது பழம் | வற்றல் |

| இயல்புப்பெயர் | ஆகுபெயர் |
|---|---|
| சுத்தம் செய்த துணி | வெள்ளை |
| நான்கு படி தானியம் | நான்கு படி |
| திருவள்ளுவர் எழுதிய நூல் | திருவள்ளுவர் |
| ஊர் ஜனம் (அடங்கினர்) | ஊர் (அடங்கினது) |
| மனம் வருந்துகிறது | நெஞ்சு நோவு |
| நூலின் கருத்து | உரை |
| ரோஜா மலர் | ரோஜா |
| வெற்றிலைக் கொடி | வெற்றிலை |

**வினாக்கள் :**

1. மேற்கண்ட ஆகுபெயர்களை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.
2. பத்து ஆகுபெயர் சொல்லு.
3. ஆகுபெயர் உள்ள பத்து வாக்கியம் எழுது.
4. ஆகுபெயருக்கும், இயற்பெயருக்கும் பேதம் என்ன?

## 25. கூக் என்னும் சிந்து யாத்திரிகன் உலகம் சுற்றிவந்த வரலாறு

தற்காலத்தில் நாம் பூலோகத்தின் எந்தப் பாகத்திற்குப் போக விரும்பினாலும் போய்வர ஏதுக்கள் அமைந்திருக்கின்றன. அப்படியில்லாத முற்காலங்களில் அமெரிக்கா, ஆஸ்த்ரேலியா கண்டங்களும் வேறு பல இடங்களும் உண்டென்பதே தெரியாதிருந்தது. அஞ்சா நெஞ்சு படைத்த நிபுணரான மாலுமிகள் பலர் ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சமாய் அறி

யாத இடங்களுக்குப் போய்க் கடலில் பாதை கண்டு பிடித்தார்கள். பூமியின் உருவைக் காட்டும் பிளான்கள் வரைந்தார்கள். அப்படிப் போன இடங்களில் உயிர் விட்டவர் எத்தனையோ பேர். இவ்விதமான புகழ்படைத்த வீரர்களின் முதல் வரிசையில் உள்ள காப்டன் கூக் என்னும் சிந்து யாத்திரிகன் வரலாறு சிறிது தெரிந்து கொள்ளுவோம்.

அவர் இங்கிலாந்தில் யார்க்ஷையர் மாகாணத்தில் ஒரு குடியானவன் பிள்ளையாய் அவதரித்துக் கிராமப் பாடசாலை ஒன்றில் கல்வி ஆரம்பம் செய்தார். பின்பு ஒரு கடையில் வேலை செய்ய அமர்ந்தார். அவ்வேலையில் எண்ணம் செல்லாதபடியால் அதை விட்டு 18-ஆம் வயதில் கப்பல் வேலையில் சேர்ந்து இரண்டு வருஷம் சென்ற பின்பு உத்தியோகஸ்தரானார்.

இரண்டு வருஷ காலமாய் இங்கிலாந்திலிருந்து நார்வேக்குப் போக்கு வரத்தாய் இருந்த வர்த்தகக் கப்பலில் இருந்த வேறொரு கப்பலுக்கு பின்பு மாற்றப்பட்டு அதிலும் இரண்டு வருஷம் உழைத்தார். இதற்குள் அவருடைய விசேஷித்த லக்ஷணங்களாகிய விடா முயற்சியும் நுண்ணறிவும் சகலருக்கும் தெரியவந்தன.

கி. பி. 1756-ம் வருஷம் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் போர் உண்டாகவே 'கழுகு' என்ற பெயர் கொண்ட கப்பலில் உத்தியோகம் பெற்று, கப்பல் தலைவருடைய விசேஷ நண்பனானார். அவருக்கு வயது 30 ஆகும்போது 'மெர்குரி' என்ற பெயர்கொண்ட கப்பலில் வேலை செய்தார். இந்தப் போரின் வெற்றியால் அதுகாறும் பிரான்சியரிட மிருந்த கனடாதேசம் ஆங்கி

லேயர் வசமாயிற்று. விசேஷமாய் லாரன்ஸ் நதிக் கரையே போர்க்களமா யிருந்தது.

லாரன்ஸ் நதியானது அகன்று ஆழ்ந்து பிரவாகித்துச் செல்லும் மகிமையுடையதாயினும் பல தீவுகளுக்கும் இடங்கொடுத்தது. ஆகவே அதில் உள்ள மேடு பள்ளங்களைக் கண்டறிந்து கப்பல் செல்லக் கூடிய பாதை காட்டும் பிளான் கையில் இல்லாமல் சமுத்திரக் கப்பல்கள் அங்கே செல்வது அபாயத்துக் கிடமாய் இருந்தது. அப்பாதை கண்டுபிடிக்கும் வேலை கூக் என்பவருக்குக் கிடைத்தது. அது ஒரு அபாயகரமான வேலை. பிரான்சியர் கண்டால் தகுந்தபடி சிக்ஷை செய்வார்கள். ஆதலின் இரவில் வேலைசெய்து பகலில் ஒன்று மறியாதவர்போல் எங்கேயாகிலும் பதுங்கிக் கிடக்க வேண்டியது. ஒருநாள் ரகசியம் தெரிந்து கொண்ட எதிரிகள் பதிவிருந்து அவர் படகில் சட்டெனப் பாய்ந்தபோது அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் நதியில் குதித்து நீந்திக்கரை சேர்ந்தார்கள். இம்மாதிரிப் பாதை கண்டுகொள்ளும் முறை அக்காலங்களில் உத்தியோகஸ்தருக்கு முதலாய் நன்ருய்த் தெரியாது.

போர் முடிந்து யுத்தக் கப்பல்கள் இங்கிலாந்துக்குத் திரும்பினபோது அங்கே காவலுக்காய் நிறுத்தப் பட்ட கப்பல் ஒன்றில் சற்று உயர்ந்த உத்தியோகம் பெற்று, செய்ய வேலையின்றிக் குளிர்காலம் போக்கும் பொழுது நிலஅளவு நூலாகிய யூக்லிட் முதல் தடவையாகக் கற்றுக்கொண்டார். அதோடு வான சாஸ்திரமும் மாலுமிகள் அறிய வேண்டிய வேறு கலைகளும் கற்றுணர்ந்தார்.

கி. பி. 1762-ல் ஆங்கிலேயர் நியூபௌண்ட்லாந்து தீவைக் கைப்பற்றினவுடனே கூக் தீவின் கடற்கரையையும் துறைமுகத்தையும் ஆழம்பார்த்துக் கடல் அடித்தளத்தின் தன்மை அறிந்துகொள்ள விரும்பினார். அவ் வருஷக் கடைசியில் ஜன்ம தேசம்போய் விவாகஞ்செய்து இரண்டு வருஷம் அங்கே இருந்தார்.

1764-ம் வருஷம் அவர் விருப்பம்போல் நியூபௌண்ட்லாந்து கடற்கரையை ஆழம் பார்க்கப் புறப்பட்டார். அவ் வேலை முடித்துத் தீவின் உள்நாட்டு மர்மமும் வெளியிட்டார். அதனால் அத் தீவும் அடுத்த கடல்களும் மிகவும் விலையேறப் பெற்றவையென உணர்ந்து, பிரான்சியர் அவ்விடங்களில் கால் வைக்க இடங்கொடாமல், அவரோடு அங்கிலேயர் செய்த உடன்படிக்கையிலும் குறித்துக் கொண்டார்கள்.

கி. பி. 1764ஞ ஆகஸ்ட் மாதம் சூரிய கிரண காலத்தில் சூரியனில் தான் கவனித்த விஷயங்களை வான சாஸ்திர சங்கத்தாரின் பத்திரிகையில் வெளியிட்டார். இது கணித நூலில் அவருக்கு இருந்த அபிவிருத்தியைக் காட்டுகிறது.

அக்கால மன்னன் ஜார்ஜ் III என்பவனுக்குப் புதிய தேசங்களைக் காணவும் கடல்களில் பாதை கண்டறியவும் விருப்பம் இருந்தது. அதன்படி கி. பி. 1768-ம் வருஷத்தில் ஒரு கப்பல் தயாரானது. அதில் தாவர நூல் ஞானிகள், வைத்தியர், வான சாஸ்திரிகள், கொல்லன், தச்சன், தையல்காரன், சமையல்காரன் போன்ற பலவித வேலையாட்கள் 84 பேருடன் அவ

ருக்கு வேண்டிய சகலவித உணவுப் பதார்த்தங்களும் 12 பீரங்கியும் இருந்தன.

தென் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள தாஹித்தி தீவிலிருந்து வீனஸ் என்ற கிரஹத்தைக் கவனிக்க வேண்டுமென்பது அவரது நோக்கம். காப்டன் கூக் முதலியோர் ஆகஸ்ட் மாதம் 15வ இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு முதலாவது மடைராத் தீவிற்குப் போய் அங்கிருந்து தென் அமெரிக்காவின் பிரேஸில் தேசம் சேர்ந்தார்கள். அத் தேசத்து மன்னன் போர்த்துக் கேஸியன் அவர்களை அலட்சியமாய் நடத்தினுன். பொருமைப் பிணி யாரை விட்டது!

அங்கிருந்து பாக்லாந்து தீவுகள் சேர்ந்து சில நாள் இளைப்பாறி தாஹித்தித் தீவுக்குப் போய் வீனஸ் கிரஹத்தைக் கவனித்தார்கள். பின்பு நியூசீலந்து தீவுகள்வரை போய் அவைகளைச் சுற்றி இரு தீவையும் பிரிக்கும் ஜலசந்தியைக் கடந்து சென்றனர். இதனுல் நியூசீலன்ட் ஒரே தீவு அல்லவென்பது விசிதமாயிற்று. அத் தீவாருக்குக் கத்தி, மணி, பொம்மை போன்ற பொருள் கொடுத்து ஆகாராதிகள் வாங்கினுர்கள்.

பின்பு ஆஸ்திரேலியாவுக்குப் போய் அதின் கீழ் திசையைச் சுற்றிக் கடல்களின் ஆழம் குறிப்பிட்டு, அவ்விடம் நாடுகளின் அபரிமித செழிப்பையும் கண்ணுற்றனர். தற்காலம் குயீன்ஸ்லாந்து என்னப்படும் நாட்டில் உஷ்ணமண்டலத்துக்குரிய சீர் சிறப்போடு, எறும்பு, கொசு போன்றன் பூச்சிகளி அமுலேயும், பல வருணத் தோகைகாரப் பக்ஷி ஜாதிகள் வாழும் விதத்தையும் கண்டு மகிழ்ந்தார்கள்.

இத்தனை சுகங்கள் நடுவில் கப்பலாட்கள் இன்பக் கடலில் முழுகிப் போகாவண்ணம் அவர்களுடைய கப்பல் ஒரு பவளத்தீவில் தாக்கிப் பழுதுபட்டது. அதைப் பழுது பார்க்கச் சில வாரம் ஒரு தீவில் தங்கினார்கள். அது அவர்கள் இளைப்பாறும் காலமாயிற்று. நவமான காய் கறி உண்டு இரத்த புஷ்டி அடைந்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டார்கள். கப்பலை அவசரத்துக்குத் தகுந்தபடி செப்பனிட்டு அங்கிருந்து ஜாவாத் தீவு சேர்ந்தார்கள். அங்கே சில வாரங்கள் தங்கி இளைப்பாறி, கப்பலைச் செம்மையாய்ப் பழுது பார்த்தார்கள்.

காப்டன் கூக் காலத்தில் மேற்சொன்ன இடங்களெல்லாம் ஏறக்குறைய அறியப்படாத பூமியாய் இருந்தன. ஆதலால் பிரிட்டிஷ் ராஜ்யக் கொடி அவ்விடங்களில் நாட்டுவது மிக எளிதாய் இருந்தது. ஆஸ்திரேலியர் எவ்வளவேனும் உடை தரியாமல் பிறந்த கோலமாய் இருந்தார்கள். தமது நாட்டில் ஜயக் கொடி பறக்க விட்டவர்முன் தாழ்ந்து பணிந்துகொண்டார்கள்.

காப்டன் கூக் காட்டின சமயோசிதமான நுண்ணறிவினால் கப்பலாட்கள், புதிய காய்கறிகள் உண்டு, கப்பலைச் சுத்தமாய்ப் பாதுகாத்து ஸிந்து யாத்திரிகர்களை வேட்டையாடும் கொடிய ரோகங்களுக்குத் தப்பினார்கள்.

மேலும் இயற்கை வளம் பொருந்திய தீவுகளில் தாம் வைத்திருந்த வித்துக்களை நாட்டி அவ்விடங்களின் சிறப்பைப் பன்மடங்கு அதிகப்படுத்தினார். அப்படியே மிருக ஜாதிகளையும் காடுகளில் விட்டு

அவை பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பும்படி ஆசீர் வாதஞ் செய்து போனுர். ஆங்காங்குள்ள தாவர வர்க்கங்களின் தன்மையைக் குறித்து விவரமான விஷயக் குறிப்பு வெளியிட்டார்.

ஜாவா தீவிலிருந்து இங்கிலாந்துக்குப் பாதை அக் காலம் கப்பல்கள் நடமாடும் ஸ்தலமே ஆதலால் அவர்கள் விசாரமின்றி ஆப்பிரிக்காவின் தென் முனை வரைசென்று, மறுமுறை அட்லாண்டிக் சமுத்திரத்தை அடைந்து கி. பி. 1771ஆ இங்கிலாந்து சேர்ந்தார். அங்கே அவரை ஜயசீலனுய் மிகவும் கொண்டாடினுர்கள். ஒரு வருஷம் வீட்டில் இருந்து தென் சமுத்திரத்தின் விசேஷங்கள் பார்க்குவா அனுப்பப்பட்டார்.

அந்த முறை அவர் வேலை வெயில் இல்லாத குளிர் மலிந்த இடங்களில் நடைபெற்றதால் மாலுமிகள் பட்ட கஷ்டம் நினைப்பதும், உரைப்பதும் அரிது. ஆகினும் அதிலும் ஜயசீலராய்த் திரும்பினுர்.

மூன்றும் முறை வட அமெரிக்காவின் மேல் கரையான பஸிபிக் சமுத்திரக் கரையைக் கவனித்து வரப் போனுர். அக் காலத்தில் கப்பலாட்களுடைய தப்பிதத்தால் ஹாவாய் தீவாருடன் கலக முண்டாக, கலகம் அமர்த்தப் பிரயத்தனப்பட்ட கூக் தலைவர் கொல்லப்பட்டார். புதிதாய்ப் பார்த்த இடங்களில் அவர் சிநேகம் பாராட்டி நியாயமாய் நடந்துகொண்டார். அவர் உலகத்தை இரண்டு முறை சுற்றி வந்த திறமையும், தமக்கு நிகர் இல்லாதவரான குடிகளுடன் பாராட்டின பெருந்தகையும் எக் காலமும் நினைவு கூறக் கூடியது.

# 26. சுகந்தா

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| 1. அதிகுண பாண்டியன் | — ஐயம்பட்டி ஜமீன்தார் | |
| 2. ரஞ்சினிதேவி | — ஜமீன்தார் மனைவி | |
| 3. விநயா | — ,, | மகள் |
| 4. விசித்ரவீரியன் | — ,, | மகன் |
| 5. வீரராகவன் | — நியாயாதிபதி | |
| 6. ஜெயசீலன் | — ,, | மகன் |
| 7. அனந்தன் | — ஜமீன் தோட்டக்காரன் | |
| 8. சுகந்தா | — ,, | மகள் |
| 9. ராஜசேகரன் | — ,, | மகன் |
| 10. பத்ரகாளி | — தாதி | |

ஜமீன் ஊழியர் சேவகர் முதலியோர்.

இடம் - தென்னிந்தியா : காலம் - 19-ம் நூற்றுண்டு

## அங்கம் - I

### களம் - 1

இடம் ஜமீன் தோட்டம்: காலை நேரம்

[அனந்தன் வேலை செய்கிருன். சுகந்தா தலையில் சாப்பாட்டுக் கூடை, கையில் புஷ்ப அலங்காரமுள்ள சிறு கூடையும், இரண்டு சிறு மாலைகளும் தொங்க விட்டு வருகிருள். அனந்தனைக் கண்டவுடன் அவனுக்கு மாலை சூட்டுகிருள்.]

**சுகந்தா** — 'அண்ணு முகத்தில் எவ்வளவு வேர்வை! இதோ மோர், சாப்பிடுங்கள். இதோ, இரும்புச் சோளரொட்டி, பசு வெண்ணெய் தடவிச் சுட்

டேன். வெகு ருசியாய் இருக்கிறது. சாப்பிடுங்கள். ராஜா எங்கே?''

[சுகந்தா அனந்தன் முகத்தைத் துடைக்கிருள்.]

**அனந்தன்** — என் மரகதவல்லி பெற்ற மாணிக்கமே, மகிமைச் சொரூபமே, எனக்கேது பசி. (மாலையைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளுகிருன்.) ஆஹா என்ன அழகு, என்ன வாசனை! சுகந்தா, செல்லம், உன் பெயர் மணமும், கை மணமும் இந்த மலர்களுக்குக் கொடுத்தாயா!

**சுகந்தா** — அண்ணு, என் கையில் வெங்காயவாசனை தான் அதிகம்! தம்பி எங்கே? உச்சிப் பொழுதாகிறதே.

**அன** — இதோ வருகிருன். செல்லம் இத்தனை மலர் எப்படி சேர்த்தாய்?

**சுக** — நமது தோட்டத்தில் புஷ்பத்திற்கென்ன குறை. வனமாய்ப் பூத்துக் கிடக்கிறதே!

**அன** — ராஜா நாட்டிய பூச் செடிகளே மிகுதி. எந்த மலரும், அக்காளுக்கு, அக்காளுக்கு.

**சுக** — அப்பா, இனிமேல் நானும் உங்களோடு வேலை செய்வேன்.

[ராஜா வருகிருன். சுகந்தா அவனுக்கும் மாலை இடுகிருள்.]

**ராஜா** — அக்கா! நீ சமையல் வேலை செய்வதே எனக்குக் கஷ்டமா யிருக்கிறது. காட்டு வேலையும் செய்யவா!

**சுக** — சரி, சரி ; ராஜா, சுறுசுறுப்புள்ள கை செல்வத்தை உண்டாக்கும் : இங்கே வா, தலை மயிர் முகமெல்லாம் பறக்கிறது. பள்ளிக்கூடம் போகாமல் வேலை செய்கிருய், அம்மை கண்டாளா !

**ராஜா** — சுகந்தா, நான் பெரியவன் ஆனபிறகு உன்னை வேலை செய்ய விடமாட்டேன்.

**சுக** — யார் சமையல் செய்வார் ? தயிர் வடை யார் பண்ணுவார் !

**ராஜா** — பிரபு வீட்டுப் பெண்ணைக் கல்யாணம் பண்ணுவேன். அவள் வேலை செய்வாள்.

**அன** — ராஜா, வேலை செய்வதால் காடு வயலாகும், பழங்கள் நிறைந்த தோட்டமாகும்.

**ராஜா** — அக்கா, நீ கஷ்டப்படக் கூடாது. பிரபு வீட்டார் என்ன வேலை செய்கிருர்கள் ?

**சுக** — நான் இன்று பிரபு வீட்டுக்குப் போகிறேன்.

**அன** — எதற்காக ?

**சுக** — நாளைய தினம் ஜமீன்தார்ணி பிறந்த நாள் இந்தப் புஷ்பக் கூடையை அவருக்குக் கொடுக்க வேண்டும்.

**அன** — அம்மை, நான் கூடையின் அழகை இன்னும் சற்று நேரம் பார்க்கவேண்டும். இங்கே வை. அப்புறம் போகலாம்.

[எல்லாரும் போய் விடுகிருர்கள்.]

## களம் - 2

இடம் - ஜமீன்தார் வீடு: காலம் - மாலை நேரம்

[ரஞ்சினிதேவி வருக.]

**ரஞ்சினி** — அடீ காளி, பத்ரகாளி.

**காளி** — அம்மா,

**ரஞ்சினி** — நமது காரியதரிசியை அழைத்து வா.

[காளி போய்க் காரியக்காரனை அழைத்து வர]

**ரஞ்சினி** — காரியக்காரா, பிறந்த நாள் விருந்து ஏற்பாடுகள் என்ன செய்தீர்?

**காளி** — அம்மணீ, வாத்தியக்காரரை மாலை ஐந்து மணிக்கே இங்கே இருக்கச் சொன்னேன். முந்நூறு பேருக்கு விருந்துக்கு உத்தரவு பண்ணினேன். வெண்பொங்கல், கிச்சடி சாதம், மஞ்சள் அன்னம், எலுமிச்சம் சாதத்துடன், வாழைக்காய் வறையல், உருளைக்கிழங்குப் பிட்டு, பறங்கிக்காய் சாம்பார், மாங்காய் சட்னி, இஞ்சி சட்னி யாவும் செய்யப் பதார்த்தங்கள் சேகரித்திருக்கின்றன. அப்பளம் அதிரசம், சிலேபி, லட்டு எல்லாம் செய்தாகிறது.

**ரஞ்சினி** — யார் கச்சேரி.

**காரி** — பிடில் கிருஷ்ணையர்; மிருதங்கம் - கொன்னை வாயன், வீணை வெங்கடேசையர்; பிரசங்கம் - ஐயாதுரை பாகவதர்.

**ரஞ்சினி** — போகலாம்.

[கதவு தட்டும் சத்தம் கேட்கிறது.]

**ரஞ்சினி** — காளி, கதவு தட்டுகிறது யார்?

**காளி** — தோட்டக்கார அனந்தன் பெண் வந்திருக்கிருள். அவளேப் பார்க்கச் சாவகாசம் இல்லே என்று சொல்லட்டுமா?

**ரஞ்சினி** — நல்ல காரியமாச்சுது. அடி காளி, உனக்கேன் இத்தனை கெடுமதி? சுகந்தாவை வரச் சொல்.

**காளி** — போகிருள். (தனக்குள்) சுகந்தா, சுகந்தா! இந்த எளிய குட்டிக்கு இளக்காரம் பார்! அவளே அடி என்றுகூட அழைப்பதில்லே.

[சுகந்தா வருகிருள்.]

**தேவி**—சுகந்தா வா, வா. என்ன கையில்! புஷ்பக்கூடை.

**சுக** — அம்மா, தங்கள் பிறந்த நாள் வாழ்த்துதலுடன் கொண்டுவந்தேன்.

[விநயா வருகிருள்.]

**விந** — அம்மா, எவ்வளவு அழகான கூடை. எவ்வளவு புஷ்பம் செலவிட்டு இதை முடித்தாய்? இதோ அம்மை பெயர்!

**தேவி** — என்ன நேர்த்தி.

**சுக** — அம்மா, இரண்டு நாளில் முடித்துவிட்டேன்.

**தேவி** — நான் உனக்கு என்ன பதில் செய்யலாம்!

**சுக** — அம்மா, பதிலா! தாங்கள் சந்தோஷப்படுவதே பரிசு.

**தேவி** — உனக்கு ஒரு சேலே தருகிறேன்.

சுக — உங்கள் தயவே போதும். விலே உயர்ந்த சேலே உடுத்த என் பிதா விரும்பார்.

விந — என் ஊதா பீதாம்பரம் எனக்குச் சின்னனதாயிருக்கிறது.

சுக — அம்மா பட்டு உடுப்பு எனக்கு வேண்டாம்.

தேவி — நீ சிறக்க உடுத்துவது எனக்குப் பிரியம். எப்போதும் அழகாய்த்தான் இருக்கிருய்.

காளி — (பக்கமாய்) அடி அம்மா, அழகாய் இருக்கிருளாம்! காலக் கொடுமை! என்னிடம் ஒரு நாள் இப்படிப் பேசுவாளா? அடி, உன்னைப் பார்த்துக்கொள்ளுகிறேன். என் வயிறு எரிகிறது.

தேவி — காளீ, அம்மணியுடைய ஊதா சேலே கொண்டுவா.

காளி — அம்மா எஜமாட்டிகளுடைய பழம்புடவைகள் அடியாளுக்கல்லவோ வர வேண்டும். இந்தப் பீதாம்பரம் இன்னும் புதுமை மங்கவில்லே.

தேவி — உனக்கிட்ட வேலே செய்.

[காளி போய் முணுமுணுப்புடன் சேலே கொண்டு வருகிருள்.]

விந — சுகந்தா, உன் நிறத்திற்கு இது நன்ருயிருக்கும்.

[தேவி, விநயா காளி போய்விட]

சுக — அப்பா இதை விரும்பார்: ஐயோ இந்தக் காளியால் என்ன மோசம் வருமோ?

[போய்விட]

## களம் - 3

[தேவி, காளி வருகிறார்கள்.]

**தேவி** — ஐயோ, என் மோதிரம் காணோம். என் கணையாழி! எஜமான் கேட்பாரே!

**காளி** — அம்மா, அந்தத் தோட்டக்காரப் பெண் எடுத்திருப்பாள். அவள் தவிர வேறு யாரும் வரவில்லை. உங்கள் அறைக்குள் போகக் கண்டேன்.

**தேவி** — அடீ, ஏழைப் பெண் மேல் பழி போடாதே.

**காளி** — நான் கண்டதைச் சொன்னேன்.

**தேவி** — அவள் ஒருக்காலும் திருடமாட்டாள். ஐயோ, யாது செய்வது என்று தோன்றவில்லை.

[இருவரும் போய்விட]

---

## அங்கம் - II

## களம் - 1

இடம் - அனந்தன் வீடு: காலம் - காலை

[அனந்தன், சுகந்தா, ராஜாசேகரன்]

**அன** — செல்லம் இதை ஏன் வாங்கி வந்தாய்!

**சுக** — தேவி பெருமாட்டி கட்டாயமாய்க் கொடுத்தாள்.

**அன** — மிதமிஞ்சின உடையும், உணவும் தொல்லைக்குக் காரணம். சுகத்துக்குத் தோழர் அல்ல.

**ராஜா** — அப்பா, நான் பெரியவன் ஆனபின்பு சுகந்தா இதைவிட நல்ல உடை எப்போதும் உடுத்துவாள்.

**அன** — ராஜா பணம் எங்கிருந்து வரும்?

**ராஜா** — நான் வேலைசெய்து சம்பாதிப்பேன்.

[ஒரு சேவகன் வருகிறான்.]

**சேவ** — அம்மணி, பெருமாட்டியார் உன்னை அவசரமாய் அழைத்து வரச் சொன்னார்.

**அன** — என்ன காரியம்?

**சேவ** — தெரியாது. நான் இப்போதுதான் வந்தேன்.

**அன** — அரண்மனையில் என்ன விசேஷம்?

**சேவ** — நான் நேற்று போனவன், தலைவலி ஜுரம்.

**அன** — குழந்தையைப் பெருமாட்டி அழைக்கும் காரணம் என்ன காண்?

**சேவ** — எனக்கு எப்படித் தெரியும்? பொடி கொடு.

**அன** — நான் பொடி போடுகிறவனா? கேட்ட விஷயம் சொல்லு.

**சேவ** — எனக்கென்ன தெரியும்? மோதிரம் காணோம் என்று சொல்லுகிறார்கள்.

**அன** — குழந்தை சுகந்தா அதற்கு என்ன செய்வாள்?

**சேவ** — காளி இருக்கிறாளே நீலி; அவள் சுகந்தா கையில் மோதிரம் கண்டேன் என்கிறாள். பெருமாட்டி அதை நம்பவில்லை.

**அன** — சுகந்தா, பிரபு வீட்டார் ஏதோ மோதிரம் காணாமல் தேடுகிறாராம், பிள்ளை புத்தியாய் எடுத்ததுண்டானால் கொடுத்துவிடு அம்மை.

**சுக**— அப்பா, நான் பிறர்பொருளை எடுத்து வருவேனா?

**அன** — செல்லம், நான் ஒரு கணமேனும் உன்னைச் சந்தேகியேன்.

**ராஜா** — அக்கா, நீ போய்வா. பழி பாவிகளைத் தொடரும். நீ குற்றமற்றவள்.

**அன** — அப்பா, குழந்தையைப் பத்திரமாய் அழைத்துப்போ, கபடற்றவரைக் காக்கும் மேலோன் அவள் துணை.

[யாவரும் போய்விட]

## களம் - 2

இடம் - ஜமீன்தார் வீடு : காலம் - காலை

[ஜமீன்தார் ஆசனத்தில் வீற்றிருக்க, சுகந்தா, அனந்தன் வருகிறார்கள்]

**ஜமீன்தார்** — சுகந்தா, ஜமீன்தாரினியின் வைர மோதிரம் பார்த்தாயா ?

**சுகந்தா** — எஜமான்களே, பார்த்தேன்.

**ஜமீன்** — எடுத்ததுண்டா ?

**சுக** — பெருமாட்டி விரலில் அது பிரகாசிக்கக் கண்டேன். நான் அதைத் தொட்டதுமில்லை.

**ஜமீன்** — உன் விரலில் போட்டுப் பார்க்க விரும்பினையா?

**சுக** — அம்மாதிரி எண்ணம் எனக்கு வெகு தூரம்.

**ஜமீன்** — ஏ அனந்தா, என்ன சொல்லுகிறாய்.

**அன** — எஜமானே, குழந்தை, பொய் பேசக் காதினால் கேட்டறியேன்.

**ஜமீன்** — சட்டப்படி இந்தக் குற்றத்திற்குச் சிரசாக்கினை வரும்.

**சுக** — ஒன்றும் திருடாத எனக்கு என்ன ஆக்கினை வரும். அப்பாவுக்கு ஒன்றும் செய்யவேண்டாம். நான் இல்லாவிட்டால், ஐயோ, அப்பா எப்படி இருப்பார் !

**அன**—கண்ணே கலங்காதே, கடவுள் நம்மைக் காப்பார்.

**காளி**—இந்தப் பெண் மகா பாசாங்குக்காரி. இந்தக் கிழவனை நம்பவேண்டாம். எஜமான்களே, இவள் தவிர வேறு ஒருவரும் அந்த அறைக்குள் போகவில்லை.

**ஜமீன்** — அனந்தா, மோதிரம் என் பூட்டன் காலத்து சொத்து. அதைக் கண்டுபிடிக்கவேண்டியது என் கடமை.

[இரண்டு சேவகரும், போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமையரும் வருகிறார்.]

**ராமையர்**—பெண்ணே, நீ நல்லவள்மாதிரி இருக்கிறாய். மோதிரம் எடுத்தாயா? உள்ளதைச் சொல்லு.

**சுக** — உள்ளதைச் சொல்லுகிறேன். நான் மோதிரம் எடுக்கவில்லை.

[ராமையர் சுகந்தா கையில் விலங்கிடுகிறார்.]

## களம் - 3

இடம் - சிறைக்கூடம் : காலம் - மாலை 7-மணி

[சுகந்தா வைக்கோல் படுக்கைமேல். இரண்டு சேவகர் காவல். சுகந்தா படுக்கையில் தன் வீட்டில் இருப்பதாய் கனவு கண்டு எழுந்து அழுகிறாள்.]

**சுக** — ஐயோ அப்பா எங்கே? ராஜா எங்கே? நான் எங்கே இருக்கிறேன்? புஷ்பங்கள் நடுவில் அவர்

களோடு உலாவுவதாய்க் கனவு கண்டேனே! குற்றம் செய்யாத எனக்கு என்ன தண்டனை வரும்! என்னைக் கள்ளி என்றும், பொய்காரி என்றும் தீர்ப்பாரோ! ஜகதீசா! அன்பர் நடுவில் குடிகொள்ளும் அரசே, என் உடலை எப்படிச் சுமந்து உயிர் வாழ்வேன்?

[பாடுகிறாள்.]

நீலாம்புரி ராகம் - ஆதிதாளம்

1. அப்பனே அனாதிவாழ்வே அருளாழி தம்பிரானே
இப்புவியோர் இடர்கள் தீர்க்கும் எம்பிரானே சரணம்

2. கண்ணினால் மோதிரத்தை கண்டதுமுண்டோ நாதா
எண்ணரிய பாடுகள் எவ்விதம் வந்த து காண்

3. கள்ளியென் றெனையடிக்க கவலை யற்றிருந் தீரோ
கண்ணீர் வடிக்கும் எழை கவனிப்பதில் லையோ

4. உந்தன் காவலிருக்க உண்டுமோ மோசங்களும்
எந்தை பிரான்சரணம் இறைவா ஆ நின் சரணம்

[அனந்தன் வருகிறான் சுகந்தா ஓடிக் கழுத்தைக் கட்டிக்கொள்ளுகிறாள்.]

**அனந்தன்** — கண்ணே, சுகந்தா, எவ்வளவு வாடியிருக்கிறாய் அநியாயமாய்த் துன்பம் வந்தால் அதுவே பெருவாழ்வைக் கொண்டுவரும்.

**சுக** — ராஜா என்ன செய்கிறான்.

**அன** — தோட்டத்தில் வேலை செய்கிறான்.

[அனந்தன் அழுகிறான்.]

## களம் - 4

இடம் - நியாயஸ்தலம் : காலம் - காலே 11-மணி

[நியாயாதிபதி, போலீஸ் இன்ஸ்பெக்டர், சுகந்தா விலங்குடன் இரண்டு சேவகர் நடுவில் வருகிருள். வாதி விசித்திர அதிகுணபாண்டியன் ஐயம்பட்டி ஜமீன்தார் பிரதிவாதி, அனந்தன் குமாரத்தி சுகந்தா, அவரவர் ஸ்தானத்தில்]

**நியாயாதிபதி** — (ஜமீன்தாரை) நடந்த காரியம் என்ன ?

**ஜமீன்** — கடந்த ஆவணி மாதம் 26வ வீட்டில் நமது பத்தினி ரஞ்சினிதேவியின் அறையில் மேசை மேல் இருந்த வைர மோதிரம் காணுமல் போனது. சுகந்தா அந்த அறைக்குள் போனதாய் சாட்சிகள் சொல்லுகிருர்கள்.

**நியா** — சுகந்தா, என்ன சொல்லுகிருய். நீ மோதிரத்தை எடுத்ததுண்டா ?

**சுக** — மோதிரம் பெருமாட்டியார் விரலில் அணிந்திருக்கக் கண்டதே ஒழிய அவர் மேசை மேல் பார்த்ததில்லே.

**நியா** — சேவகா, வண்ணுன் கோபாலேக் கூப்பிடு.

[சேவகன் கூவி அழைக்கிருன், வண்ணுன் வருகிருன்.]

**நியா** — உன் பெயர் என்ன? தொழில் என்ன?

**கோபால்**—நான் முத்துசாமி வண்ணுன் மகன் கோபால்.

**நியா** — இந்த வழக்கில் உனக்கென்ன தெரியும் ?

**கோபால்** — நான் ஜமீன்தார் வீட்டுச் சலவைகொண்டு வந்தேன். அன்று ராணி பிறந்த நாள்.

நியா — சுகந்தா தெரியுமா ?

கோபால் — தெரியும். அன்று ராணி ஸ்நான அறை வாசலில் நின்ருள்.

நியா — ஏதாகிலும் கவனித்தாயா ?

கோபால் — கையில் ஏதோ வைத்து மூடியிருந்தாள்.

நியா — நீ போகலாம். சேவகா இரண்டாம் சாட்சியைக் கூவி அழை.

[சமையல்காரன் முத்துசாமி வருகிருன்.]

நியா — நீ யார் ?

முத்து — சாமி நான் ஜமீன்தார் வீட்டு மடப்பள்ளி வேலையாள்.

நியா — நீ எவ்வளவு காலமாய் இங்கே வேலை செய்கிருய் ?

முத்து — எனக்குக் கணக்கு வராது. சின்ன பிள்ளேயா யிருக்கையில் சட்டி கழுவ வந்தவன்.

நியா — இந்த வழக்கு விஷயமாய் உனக்கு என்ன தெரியும் ?

முத்து — ராணி பிறந்த நாளில் இவளேக் கண்டது போலிருக்கு.

நியா — அடே, கண்டாயா ? திட்டமாய்ச் சொல்லு.

முத்து — ஒருக்கால் பார்த்திருக்கலாம். எனக்கு ரொம்ப வேலே. காளி சொன்னுள். இவள் திருட்டுப் பொண்ணு; சாமி.

[காளி வருகிருள்.]

நியா — நீ யார் ?

காளி — நான் ஜமீன்தாரிணியின் உண்மையுள்ள தாதி என் பெயர் பத்திரகாளி. என் தகப்பன் பெயர் பொன்னுசாமி சேவை.

நியா — உனக்கு அரண்மனையில் மோதிரம் காணுமல் போன சங்கதி தெரியுமா ?

காளி — தெரியும். தேவி காலையில் மோதிரம் அணிந் திருந்தார். நான் அவர் கூந்தலில் மலர் முடிக்கும் பொழுது விரலில் இருந்தது. பின்பு குளிக்கப் போனவர் கழற்றி வைத்தார்கள். சற்று நேரம் கழித்து சுகந்தா வந்தாள். அவள் கையில் மோதிரம் கண்டேன்.

நியா — நீ ஏன் அதை உடனே பெருமாட்டிக்குத் தெரிவிக்கவில்லை ?

காளி — சீமாட்டி அவளுக்குப் பட்டுப் புடவை கொடுத்தார்கள்.

நியா — அதனுல் என்ன ?

காளி — காளி மோதிரமும் கொடுத்தார் என்று நினைத் தேன். என்னைக் கண்டவுடனே மறைத்தாள்.

நியா — சுகந்தா, நீ என்ன சொல்லுகிருய் ?

சுக — அவள் மோதிரம் என்னிடம் கண்டதில்லை. என்னை வீணே அடித்தீர்கள். நான் மோதிரம் எடாமல் அதைக் கொடுக்க முடியுமா ? ஒஹோ, ஜமீன்தார் வீட்டாரால் எனக்குத் தீங்கு வருவது யார் செயல் ?

[அனந்தன் வருகிருன்.]

நியா — அனந்தா, உன் மகள் பிள்ளைப் புத்தியாய்ப் பேசலாம். நீயாவது உண்மை வெளியிடு.

அன — நீதிபதி துரைகளே, என் மகள் வார்த்தையில் பிசகு இல்லை. நேற்று என் வீடு பரிசோதித்தீர்கள். ஏதாகிலும் ஜமீன் சொத்துக் கண்டீரோ? பாவம் அறியாக் குழந்தையைச் சவுக்கால் அடித்தீர். இன்னும் என்ன ஹிம்சை செய்தாலும் சொல்லக்கூடிய வாக்கு வேறொன்றும் இல்லை.

[நியாயாதிபதி தீர்ப்பு வாசிக்கிறார்.]

நியா — ஐயம்பட்டி ஜமீன்தார் வீட்டில் களவு போன மோதிரம் சுகந்தா எடுத்ததாய் போந்த சாட்சிகள் இருக்கிறார். அவள் பிதா அனந்தன் அவளை ஆதரித்துப் பேசுகிறான். சிறு பெண் ஆதலின் அவர் மூன்று நாளில் இந்த நாடு விட்டுப் போகும்படி மன நெருக்கத்துடன் தீர்ப்பிடுகிறோம்.

---

## அங்கம் - III

### களம் - 1

இடம் - மலை நாடு: காலம் - மாலை

[ஒரு வாலிபனும், இளம் பெண்ணும் கூடையில் பலா, கொய்யா, வாழை, சீத்தா, ஆப்பில், ஆரஞ்சிப் பழங்கள் கொண்டுவந்து இறக்குகிறார்கள். ஒரு கிழவன் வீட்டை அடுத்த தோட்டத்தில் கிளை பிடுங்குகிறான்.]

கிழவன் — ராஜா, ஏன் இவ்வளவு நேரம்? மலைப் பாம்புகள் உலாவிப் புலிகள் விளையாடும் காடு இது.

பெண் — அப்பா, நாம் வந்து பத்து வருஷமாச்சுது. இன்னும் பயமா? எனக்குக்கூட வில் வித்தை

தெரியும். நாங்கள் ஓடையில் குளித்து நீந்தி விளையாடினேம்.

**கிழவன்** — எனக்கு நடக்கப் பலம் இல்லை......

**வாலிபன்** — அப்பா, இனி நான் எல்லா வேலையும் செய்வேன். பெரியவன் ஆகிவிட்டேன். நீங்கள் வேலை செய்யக் கூடாது.

**கிழவன்** — இன்று பாடம் வாசித்தீர்களா?

**வாலிபன்** — அதிகாலையில் விளக்கில் எண்ணெய் இல்லாமல் கட்டை வெளிச்சத்தில் வாசித்தோம்.

**கிழவன்** — நமது துணியெல்லாம் கிழிந்துவருகிறது. குளிர் காலம் என்ன செய்வோம்?

**பெண்** — அப்பா, ஆட்டுத் தோலால் உங்களுக்குப் போர்வை செய்தேன். பனை ஓலையால் பட்டு மாதிரிப் பாய் செய்தோம்.

**கிழவன்** — பசிக்கு இப்போது பதில் சொல்லு.

**பெண்** — தினை மாவும் பாலும் பிசைந்து அடை தட்டினேன். பலாப் பழமும், தேனும் இருக்கிறது. குடிக்கப் பசுவின் பால் இருக்கிறது. வேறு பழங்களும் இருக்கிறது.

**வாலிபன்** — இந்த இடம் மகா சௌக்கியமாய் இருக்கிறது. ஜமீன்தார் நடந்த பிழையை உணர்ந்து அழைத்தாலும் இந்த சுகங்கள் எங்கும் கிட்டா.

**பெண்** — இந்த மஹாராஜாவைத் தேடி அலைகிறார்.

**வாலிபன்** — அலையாரா?

**பெண்** — வாருங்கள் சாப்பிடுவோம்.

## களம் - 2

இடம் - மலைநாடு : காலம் - மாலைமங்கும் நேரம்

[ஜெயசீலன், விசித்திரவீரியன், பழனி வருக.]

**ஜெயசீலன்** — வழிதப்பி விட்டோம். சீக்கிரம் இருட்டிவிடும்.

**விசித்திரவீரியன்** — கையில் துப்பாக்கி யிருக்கிறது. வாழைக் கனி கிடைக்கும். தூங்கவே கூடாது.

**ஜெய** — தூங்கினால்?

**விசி** — புலிக்கு நல்ல விருந்து.

**ஜெய** — இங்கே வாழும் குடிகள் இருக்கும் இடம் தேடுவோம்.

**விசி** — அவர்கள் நம்மை நம்புவாரா?

**ஜெய** — கொன்றால் வீரசுவர்க்கம் போகலாம். தூங்க இடம் கிடையாது, கதை சொல்லுவோம்.

**பழனி** — சுவாமி, அதோ புகைதெரிகிறது.

**ஜெய**—ஆஹா, வாழைத் தோட்டம் பார்! யாரோ நாகரீகமான குடிகள் வாழுமிடம். இந்த இடம் மகா ரமணியமாய் இருக்கிறது. பழனி, கதவைத்தட்டு.

[பழனி தட்டுகிறான்.]

(உள்ளிருந்து சத்தம்) 'யார் அது?'

**பழனி** — ஜமீன்தார் குமாரனும் நியாயாதிபதி துரைகள் மகனும் வேட்டைக்கு வந்தவர் வழிதவற விட்டார். இரவு போக்க இடம்வேண்டும்.

உள்ளிருந்து 'இது எளிய வனவேடர் குடிசை பிரபுக்களுக்கான இடமில்லை' உணவில்லை.

ஜேய — காட்டு ஜந்துக்களுக்குத் தப்பி ஒதுங்க வந்தோம். இந்த ஸ்தலத்தின் இறைவன் நீ. உன் ஆணை கடவோம்.

[ஒரு கிழவன் வெளியே விளக்குடன் வருகிறான்.]

கிழவன் — வாரும், உள்ளே வாரும், இளைப்பாறும். விடியும் வரை நாங்கள் உமது அடிமைகள். இது உமது வீடு.

[ஒரு பெண் வருகிறாள். கதவு திறந்து ஒரு வாலிபனும் வருகிறான்.]

பெண் — வாரும், உணவருந்தும். கதிரவன் குண திசையைச் சிங்காரிக்கும் வரை நித்திரை செய்து இளைப்பாரும்.

ஜேய — (தனக்குள்) இவர்களா வனவேடர்! என்ன தீங்குரல்! என்ன அறநெறி! இவள் தெய்வ கன்னிகையோ! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். பையன் முருகவேள் மாதிரி இருக்கிறான். கிழவனை வஸிஷ்டர் என்றே சொல்ல வேண்டும். இது ரிஷிகள் ஆசிரமம்போல் இருக்கிறது.

விசி — வேடரெல்லாரும் இம்மாதிரி வாழ்வாராயின் நானும் ஒரு வேடனாக விரும்புகிறேன்.

வாலிபன் — பெருமான்காள், பந்தி அமரும். தாங்கள் ஏழைகளின் இருப்பிடம் வர, நாங்கள் பெற்றதே பாக்கியம்.

[பந்தியமர்ந்து பாலும், பழமும் உண்கிறார்கள்.]

**ஜெய** — பழனி ஒரு கதை சொல்லு.

**பழனி** — பத்து வருஷத்துக்கு முன் நமது அரமனையில் அனந்தன் என்று ஒரு கிழவன் தோட்ட வேலை செய்தான். பாவம் நல்லவன். அவனுக்கு ஆண் ஒன்று பெண் ஒன்று குழந்தைகள் இருந்தார்கள். அப்பனைப் போலவே மக்களும். அக் காலம் தேவி கணையாழி காணுமல் போனது. தோட்டக் காரன் பெண் தான் எடுத்தாளென்று தீர்ப்பானது. பாவம், அவனும் மக்களும் நாடு விட்டுப் போய் விட்டார்கள். தேவியும் விநயா அம்மணியும் விட்ட கண்ணீர் சொல்லமுடியாது. நியாயாதிபதி துரைகூட அழாத குறை ஒன்றே. காளி, தாதி மட்டும் சந்தோஷமாய் இருந்தாள். ஒரு வருஷம் கழித்து ஒருநாள் காற்று மழையில் அரமனை முற்றத்தில் நின்ற பெரிய மாமரம் சாய்ந்துபோனது.

**விசி** — நாம் அப்போது ஜெர்மனியில் இருந்தோம். விநயா கடிதங்களில் தப்பும், தவறுமாய்க் கொஞ்சம் எழுதினள்.

**பழனி** — மரத்தை வெட்டும்படி எஜமான் உத்தரவு பண்ணினர். மரம் வெகு நாள் கனி கொடுத்த சிநேகிதன். அதை வெட்டுவதைப் பார்க்க எல்லாரும் கூடி நின்றூர்கள். வெட்டின பெருங் கிளை ஒன்று ஒடிந்து விழ, கணையாழி அதிலிருந்த ஒரு குருவிக் கூண்டிலிருந்து நழுவி, தேவி பாதத் தண்டை விழுந்தது. கையில் எடுத்ததுதான், தேவியின் மனநிலையைக் கூறலாகாது. ஆள் விட்டு சுகந்தாவைத் தேடாத திசையில்லை......

**பேண்** — நானே சுகந்தா.

**கிழவன்** — (கண்ணீருடன்) நானே தோட்டக்கார அனந்தன். இப்போது நான் மரிக்க ஆயத்தமாய் இருக்கிறேன்.

**வாலிபன்** — நானே ராஜசேகரன். பழி பாவிகளைத் தொடரும். எங்களைத் தொடரவில்லை.

[அனந்தன் மகளைக் கட்டி அழுகிறான். ஜமீன்தாரும் நியாயாதிபதியும் ரஞ்சினிதேவியும் வேலையாட்களும் தீவட்டிகளுடன் வருக, அவர் பிரமித்து நிற்க, விசித்திரவீரியன் இரகசியமாய் அவர்களிடம் பேச.]

**நியாயாதிபதி** — அனந்தா, சுகந்தா. எனக்குத் தீர்ப்பிடுங்கள்.

**ஜமீன்தார்** — குணநிதியே, சத்தியவிரதம் பூண்டவரே, என் செய்வேன்!

**சுக** — எல்லாம் ஈசன் செயல்.

**அன** — வாழ்வும் தாழ்வும் தோற்றம். துக்கம் ஒழிக.

**ஜமீன்** — நீங்கள் என்னோடு வந்து என் வீட்டில் சமநிலையாய் வாழவேண்டும்.

**தேவி** — இந்தக் கணையாழி நீயே தரிக்கவேண்டும்.

**நியா** — சுகந்தா என் மகனை விவாகம் செய்து எனக்கு விமோசனம் கொடுக்கவேண்டும்.

**அன** — உங்களுக்குச் சர்வமங்களம்.

முடிவு

# செய்யுள் பாடம்

## I. நான்மணிக்கடிகை

(சுருக்கம்)

கள்ளிவயிற்றில் அகில் பிறக்கும் மான்வயிற்றில்
ஒள்ளரிதாரம் பிறக்கும் பெருங் — கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி. (1)

கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம் காதலித்தொன்(று)
உற்றார்முன் தோன்றா உறுமுதல் — தெற்றென
அல்ல புரிந்தார்க்கு அறந்தோன்றா எல்லாம்
வெகுண்டார்முன் தோன்றாக் கெடும். (2)

கன்றாமை வேண்டும் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும் — என்றும்
விடல்வேண்டும் தன்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை. (3)

பறைநன்று பண்ணமையா யாழினிறை நின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின் — பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
தீர்தலில் தீப்புகுதல் நன்று. (4)

இன்னுமை வேண்டி விரவெழுக இன்னிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக — தன்னோடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். (5)

கோனோக்கி வாழுங் குடியெல்லாம் தாய்தருநற்
பானோக்கி வாழுங் குழவிகள் — வானத்
துளிநோக்கி வாழு முலகம் உலகின்
விளிநோக்கி இன்புறாஉங் கூற்று. (6)

திருவிற் றிறலுடைய தில்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை — எற்றுள்ளும்
இன்மையின் இன்னுத தில்லை இலமென்னும்
வன்மையின் வன்பட் டதில். (7)

பிறக்குங்கால் பேறெனவும் பேரு இறக்குங்கால்
நில்லெனவும் நில்லா உயிரனைத்தும் — நல்லாள்
உடன்படில் தானேபெருகும் கெடும் பொழுதில்
கண்டனவும் காணுக் கெடும். (8)

நாற்ற முரைக்கும் மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலம் — தூக்கின்
அகம் பொதிந்ததீமை மனம்உரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப் பதில். (9)

ஆறுள் அடங்கும் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள — தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள. (10)

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டாணின்
துன்னிய கேளிர் பிறரில்லை — மக்களின்
ஒண்மைய வாய்ச்சான்ற பொருளில்லை ஈன்றாளின்
என்ன கடவுளு மில். (11)

நல்லார்க்குத் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்லார்க்குத் தம்மூரென் றூரில்லை — அல்லாக்
கடைகட்குத் தம்மூ ரென்றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரும் ஊர். (12)

கல்லா வொருவர்க்குத் தம்வாயின் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற — காய்க்கூற்றம்
அல்லவை செய்வார்க்கறம் கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். (13)

கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டும் தகுதி — யுடையன
நள்ளாமை வேண்டும் சிறியாரோடு யார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. (14)

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை — குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம் குற்றம்
தமர் அல்லார் இல்லகத் தூண். (15)

எல்லா விடத்தும் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடல்தீது — நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பில் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை. (16)

மாசுபடினும் மணிதன் சீர் குன்றுவாம்
பூசிக் கொளினும் இரும்பின்கண் — மாசோடும்
பாசத் துளிட்டு விளக்கினும் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும். (17)

எள்ளற்க வென்று மெளியார் என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேல்வா — உள்சுடினும்
சீறற்க சிற்றில் பிறந்தாரைக் கூறற்க
கூறல்ல வற்றை விரைந்து. (18)

**அரும்பதவுரை :**

1. முதல் மூன்று வரிகளில் அடங்கிய மூன்று உவமானங்களும் நாலாம் வரியின் பொருளுக்குத் திருஷ்டாந்தங்கள்.

கள்ளிக்கட்டை நடுவில் வாசனை பொருந்திய அகில் கட்டை இருக்கிறது. மான் வயற்றில் அரிதாரம் இருக்கிறது; கடலில் முத்து கிடக்கிறது. அப்படியே எளியவர் குடும்பத்தில் உத்தமி பிறக்கலாம்.

2. கழிவிரக்கம் - கடந்துபோன விஷயத்திற்காக மனம் வருந்தல்; உருமுதல் - குறைவு; தெற்றென அல்ல தீர்மானமாய்ப் பாவம் செய்பவர்; அறம் - தருமவழி; வெகுண்டார் - கோபிகள்; எல்லாம் - நன்மை தீமை வித்தியாசம்.

3. வெகுளி - கோபம்; அடல் - கெடுத்தல்; பகைத்தல், ஆக்கம் - செல்வம்; சிதைக்கும் - கெடுக்கும்.

4. பறை - தம்பட்டம்; பண் - சுதி; யாழ் - வீணை; பீடு - கௌரவம்; பண்ணழிந்து - மதிப்புக்குறைந்து; பசைந்தார் - சிநேகிதர்; தீர்த்தல் - பிரிதல்.

5. மன்னுதல் - நிலையானது; இசை நடுக - புகழ் சம்பாதி; வெகுளி - கோபம்.

6. கோல் - செங்கோல்; நீதியான ராஜாங்கத்தின் அடையாளம், விளி - சாவு; கூற்று - யமன்.

7. திரு - செல்வம்; திறல் - வலிமை; இன்மை - தரித்திரம்; இன்னாதது - கஷ்டம்; இல மென்னும் வன்மை - இரப்பவருக்குக் கொடுப்பதில்லை என்னும் கண்டிப்பான சொல்.

9. மாற்றம் - பேச்சு; முகத்தின் தோற்றம் இருதயத்தின் எண்ணத்தை வெளியிடும்.

10. வீறுசால் - பெருமை பெற்ற; தொன்மரபின் - பழைய வேத முறுவன - ஆகமப் பொருள் கொண்ட; வேளாண்மை - தருமம்; வேள்வி - யாகம்.

11. கொண்டான் - கணவன்; துன்னிய - நெருங்கிய.

12. கைத்து - பொருள்.

13. கூற்றம் - துன்பம் கொண்டுவரும் ஏது; அல்லவை - பாவம்.

14. கள்ளல் - திருடுதல்.

15. வள்ளன்மை - கொடுக்கும் குணம்.

## II. இமய மலைகள்

குடதிசை குணதிசை தழுவிய குரைகடல்
இடைநுழை யிருதலை இமயம தெனுமலை
வடதிசை யுளதது மலையரசிது வென
இடமுடை உலகவ ரிடுபெய ருடையது. (1)

மயிலிய உமையினை மகளென வுடையது
குயில்மொழி யவளொடு குளிர்சடை அரனுறை
கயிலை யொரு புடையது கதிரவன்
வெயினுழை வருமா மிடைதட முடையது. (2)

பகுமுக மொடுதிகழ் பகிரதி யிழிதரு
மொடுமொடு மெனமொலி முழவொலி யதுவா
அகமகி ழுறுபத வளியிசை முரறா
மிகமயி னடமுறு விரிபொழி லுடையது. (3)

எறிகதிர் மணிமுடி இமையவர் பொழிலுடை
வெறிமலர் மதுநுகர் விரிசிறை மதுகரம்
உறுதலு மதுநுக ரிவரென உவகையோ
டறுபத மெதிர்கொளு மரவம துடையது. (4)

மலைத லின்மனமென வரியர வெழபதி
குலைகுலை குளைதரு குடுமிய துடையது
கலகல வெனவெழு கழைமொலி யொடுபுனல்
சலசல வெனவிழு தடவொலி யுடையது. (5)

## III. குயில்

வண்ணக் குயிலே வாளுெரு
மயங்கவார்க்கும் பண்ணமுதம்
உண்ணத் தெவிட்டாத் தேனுகி
உளத்துளோங்கியப் பற்றுதலின்
வண்ண மதனைச் சொல்வேனே
மதிமாய்ந்தே ஒய்வதன்றி
எண்ணு மொழியாற் புகல்வேனே
எதிரில்கீதப் பாகினையே. (1)

பால் வெண்மதியின் பானிலவு
பாரிற்பரவும் யாமினியில்
வால் விண்ணவர்தம் வானிருந்து
பாயுமழைபோன் மாமரக்கா
மால் கொம்பிடையிற் கூங்குயிலின்
மாண்டவமுதப் பாண்மழையும்
சால்போடுளங் கொண் மன்னுயிர்கள்
சாலத்துயிலப் பெய்திடுமே. (2)

சோலைக் கயலிவிருப் பார்க்குச்
சோர்வைத் தீர்க்கும்அமுதானாய்
சாலை வழியில் நடப்பார்க்குச்
சாலைதன்னைக் குறைக்கின்றாய்
வேலை தளர்வான் மெலிவார்க்கு
வேண்டும்வல்ல உயிரானாய்
மாலைப் பொழுதின் மகிழ்வார்க்கு
மட்டில் காதலிசையானாய். (3)

**அரும்பதவுரை :**

1. வண்ணக்குயில் - அழகிய குயில்; பண்ணமுதம் - பாடலாகிய அமுதம்; எதிரில் - ஒப்பற்ற; கீதப்பாகு - சர்க்கரைப்பாகுபோல் ருசியான உணவு;

2. பார் - பூமி; யாமினி - இராத்திரி; வால் - பெரிய குயிலின் கீதம் அமுதிற்கும், மழைக்கும் ஒப்பிட்டிருக்கிறது.

3. சாலை - பாதை, தூரம்.

திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த

## IV. திருக்குறள்

திருவள்ளுவநாயனார் ஒவ்வொன்று பத்துக் கவிகள் அடங்கியதாய 133 அத்தியாயங்களில் உலகில் மனுஷன் அறியவேண்டிய கல்வி, செல்வம், நல்லொழுக்கம், தருமநெறி முதலிய சகல வித பொருள்கள் பேரிலும் எழுதியுள்ளார். அவற்றில் சில கவிகள் மட்டும் நாம் இங்கே கூறுவோம்.

## கடவுள் வாழ்த்து

கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (1)

வாலறிவன் - பெரிய அறிவாளி, கடவுள் ; நற்றாள் - திருப்பாதம்; கொல் - அசைநிலை.

கற்றவன் கடவுளுக்குப் பயந்தவனாய் இருந்தால் அவன் கல்வியால் பயனடைந்தான் என்பது கருத்து.

## தருமத்தின் பலன்

அறத்தினூஉங் காக்கமு மில்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. (2)

அறத்தினும் - தருமத்திலும் (தருமம் கொடுப்பதிலும்) ; ஆக்கமும் இல்லை - பொருளைப் பெருக்கும் வழி (வேறு). (இல்லை) அதனை மறத்தலினும் - தருமத்தை விட்டுவிடுதலிலும் ; இல்லை கேடு -

ஊஉங் - அளபெடை. கவிநலத்திற்காய் நீட்டி உச்சரித்தல்.

## உத்தமரான பிள்ளைகள்

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற. (3)

பெறுமவற்றுள் - ஒருவன் அடையக் கூடிய நன்மைகளில் ; அறிவறிந்த - அறியவேண்டியவற்றை கற்றுணர்ந்த ; மக்கட்பேறு - குழந்தைகளைப் பெறுதல் ; அல்ல பிற - அன்றி வேறொன்றுமில்லை.

## குழந்தைகளின் அருமை

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கண்
மழலைச்சொல் கேளா தவர். (4)

தம்மக்கள் - தமது குழந்தைகளின்.

தமது குழந்தைகளின் மழலைச் சொல் வீணை, புல்லாங் குழல் வாத்தியங்களின் இசையிலும் இனிமையானது.

## அன்பின் மாட்சி

அன்பிலார் எல்லாந்தமக் குரியர்அன் புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. (5)

அன்பில்லாதவர் தமக்காகவே ஜீவிக்கிறார். அன்புள்ளவர்கள் எலும்புகூட பிறருக்கு உரியதாக உபயோகப்படுகிறது.

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. (6)

மாசற்றார் - குற்றமற்றவர்கள்; கேண்மை - சிநேகம்; துறவற்க - விட்டுவிடாதே; துப்பாயார்-உதவி செய்தவர்கள்; நட்பு - சிநேகம்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. (7)

நன்றல்லது - தீமை (ஒருவர் செய்த குற்றத்தை); அன்றே - செய்த அதே நாளில்.

பிறர் தவறுதல்களை உடனே மறப்பது, நல்லது நன்மை நன்மைகளை ஒருக்காலும் மறக்கக் கூடாது.

அடக்கம் அமரரு ளுய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (8)

அமரர் - தேவர்; ஆரிருள் - நரகம்; உய்த்துவிடும் - ஆழ்த்திவிடும்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (9)

தன்நெஞ்சு அறிவது - தனது மனச்சாட்சி அறிந்த விஷயத்தை, பொய்யற்க - (மாற்றி) பொய் சொல்லவேண்டாம், சுடும் - சுட்டதுபோல் வருத்தப்படுத்தும்.

நெஞ்சு + அறிவது - நெஞ்சறிவது ; குற்றியலுகரமும் உயிரும் கூடும்போது உகரம் கெட்டது காண்க.

பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும். (10)

பொய்யாமை-பொய் சொல்லாது, (சத்தியம் பேசுதலின்) அன்ன - ஒப்பான, புகழில்லை - கீர்த்தியில்லை ; அதனால் எய்யாமை - கஷ்டமில்லாமல்.

## தீங்கு செய்யாமை

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (11)

ஈனும் - கொடுக்கும், இன்னா - தீங்கு ; கோள் - துணிபு, நம்பிக்கை.

## கல்வியின் மேன்மை

கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (12)

கல்வியறிவுடையவர் கண்ணே கண். கல்வி கற்காதவனுக்குக் கண்கள் இருந்தும் விஷயங்களின் தன்மை அறிய அவை உதவியாய் இல்லை. அவை புண்ணுக்கே சமம்.

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். (13)

பழிநாணுவர்-பாவங்களுக்குப் பயந்தவர், தினைத்துணையாங் குற்றம் வரினும் - மிகச் சிறிய குற்றம் தம்மிடம் காணப்பட்டாலும், அதை பனைத்துணையாகக் கொள்வர் - மிகத்திரளாய் பாவம் செய்ததாய் எண்ணி விசனப்படுவோர்.

### நல்ல செய்கை

துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாம் தரும். (14)

துணைநலம் - நல்லதுணை, (பந்து, மித்திரர், பொருள் சகாயம்) ஆக்கம்தரும் - செல்வம் உண்டாக்கும், வினைநலம் - நற்செய்கை, வேண்டியவெல்லாம் - சகல நலன்களையும்.

### பொருளின் உபயோகம்

அறனீனும் இன்பமும் ஈனும்திற னறிந்து
தீதின்றி வந்த பொருள். (15)

திறனறிந்து - சம்பாதிக்கும் நியாயமான வழியறிந்து, தீதின்றி - நீதிவழி பிசகாமல் வந்தபொருளானது, அறன் - தருமத்தையும், இன்பம் - சந்தோஷத்தையும் கொடுக்கும்.

### சிநேகம்

உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு. (16)

நட்பு - சிநேகத்தின் தன்மையாவது உடுக்கை இழந்தவன் கைபோல்-வஸ்திரம் குலைந்தவனுடைய கை, (விரைந்து அதைப் பிடிப்பதுபோல்) ஆங்கே அக்கணமே, இடுக்கண் களைவதாம் - வந்த துன்பம் நீக்குவதாம்.

## V. தாயுமானவர் பாடல்கள்

### கடவுளின் மகிமை

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குள்ளே
அகிலாண்ட கோடி யெல்லாம்

தங்கும்படிக் கிச்சை வைத்துயிர்க் குயிராய்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம நின்றதெது சமயகோடிக ளெலாந்
தந்தெய்வ மென்தெய்வ மென்(று)

எங்குந்தொடர்ந் தெதிர்வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெதுமேல்

கங்குல்பகல் அறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற்கிசைந்த ததுவே
கண்டனவெலா மோன வுருவெளிய தாகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம். (1)

ஆழாழி கரையின்றி நிற்கவிலையோ கொடிய
ஆலமும் அமுதாகவிலையோ
அக்கடலின்மீது வடவனல் நிற்கவில்லையோ
அந்தரத் தகிலகோடி

தாழாமல் நிற்க வில்லையோ மேருவும்
தனுவாக வளையவிலையோ
சப்தமேகங்களும் வச்ரதா ரணையில்
சஞ்சரித் திடவில்லையோ

வாழாது வாழவே இராமனடியாற் சிலையு
மடமங்கை யாகவிலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித்திக ளுலகு
மார்க்கத்தில் வைக்கவிலையோ

பாழான என்மனம் குவியஒரு தந்திரம்
பண்ணுவ துனக்கருமையோ
பார்க்கும் இடமெங்கும் ஒருநீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (2)

அரும்பதவுரை :

தாயுமானசுவாமிகள் சுமார் 200 வருஷங்களுக்கு முன் சோழமண்டலத்தில் சைவ வம்சத்தில் பிறந்தவர். அவர் சிறு பிராயமுதல் தெய்வபக்தியுள்ளவர். மௌனதேசிகரிடம் கல்வி கற்றவர்.

1. கடவுள் அங்கு அல்லது இங்கு இருக்கிறார் என்னல் கூடாது அருள் நிறைந்தவர். ஜீவராசிகளுக்கு உயிராய் இருப்பவர். சமயகோடி - சகல மதத்தாரும், சித்து - ஞான வடிவு, மோன உரு - மேலான உரு அஞ்சலி - வணக்கம்.

2. எல்லாம் அடங்கியும் தீய சிந்தை என்னில் அடங்கவில்லை- உதாரணங்கள் :--- கடல் எல்லைக்குள் நிற்கிறது. பூர்வத்தில் விஷம் அமுதானது ; கடலில் நெருப்பு இருக்கிறது ; ஆகாயமண்டலத்து ஜோதிகள் ஆதாரமின்றி நிற்கின்றன. மேரு மலை வில்லாய் வளைந்தது. இராமர் பாதம் படக் கல் பெண்ணானாள் ; மணிமந்திரத்தால் வேண்டிய காரிய சித்தி கிடைக்கிறது.

மணி - குளிகை, சப்தமேகம் - ஏழு வித மேகம். இந்திரன் மேகங்களுக்கு அதிகாரி. அவை அவனுக்கு அடங்குகின்றன.

ஆண்டாள் நாச்சியார் திருமொழி

## VI. வாரணமாயிரம்

கலிவிருத்தம்

வாரண மாயிரம் சூழ வலஞ்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ!நான். 1

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பான்ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ!நான். 2

இந்திர னுள்ளிட்ட தேவர்க் குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ!நான். 3

நாற்றிசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ(டு) என்தன்னை
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ!நான். 4

கதிரொளி தீபம் கலச முடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்(து) எதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ!நான். 5

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ!நான். 6

031(87) N33 146799.